

# வெருகலசம்

கலாசார அதிகார சபை
பிரதேச செயலகம்.
வெருகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலசம்

## இதழ் - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேச செயலாளரும் பிரதேச கலாசார அதிகாரசபையின் தலைவருமாகிய திரு.மா.தயாபரன் அவர்களின்

# முன்னுரை

அலையோசை இசைமீட்டும் ஆழ்கடலின் வனப்பும், வனங்களிடை குளிர் பரப்பும் மகாவலியின் வாரிசு வெருகலாற்றின் சிறப்பும், மூர்த்தி தலம் தீர்த்தம் கொண்ட வெருகலம்பதியானின் அருள்வீச்சும் கொண்டமைந்த வெருகல் பிரதேச செயலகப்பிரிவில் பழம்பெரும் தமிழரின் வாழ்வியல் சிறப்புகளுடன் வாழும் மக்களின் கலை கலாசார விழுமியங்களினை ஆவணப்படுத்தி அவை வழக்கொழிந்து போகாமல் புத்துணர்வூட்டி மீட்டெடுத்தலையும் நோக்காகக் கொண்டு "வெருகலசம்" மலரினை மலரச் செய்வதில் அகம் மிக மகிழ்கின்றேன். மூன்று தசாப்த கால யுத்த அழிவுகளும் பருவ கால மாற்றம் போன்று மாற்றமின்றி தொடர்ந்து வரும் வரட்சியும், வெள்ளமும் மக்களின் பொருளாதாரத்தை அழித்துச் சென்றாலும், "குளங்களெல்லாம் வற்றி ஒட்டியும், ஆம்பலும், தாமரை மலர்களும் மடிந்து போய் பருவ மழை கண்டு "பீனிக்ஸ்" பறவையாய் உயிர்ப்பிக்கும் இவர்கள் வாழ்வும், "அழிவுக்கும் ஆற்றலுக்குமிடையே" ஒரு போராட்டமாகவே அமைந்திருக்கின்றது.

மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்ற கல்வி அறிவின் தாக்கம் இச்சமூகத்தின் வாழ்வியலை மிக மோசமாகப் பாதித்துள்ளமையினை எவரும் மறுத்துவிட முடியாது. ஆசிரியர் நியமனங்களில் காணப்படுகின்ற தாழ்வு நிலையினால் புலமைப் பரிசில் பரீட்சை தொட்டு பல்கலைக்கழக அனுமதி வரை பாரிய வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. இதன் தாக்கம் கலை கலாசாரங்களினையும் விட்டுவைக்கவில்லை என்பதைத் துணிந்து கூறலாம். இத்தகையதொரு சூழ்நிலையில் ஆண்டு தோறும் ஒரு கலாசார விழாவினை ஒழுங்கு செய்வதனூடாக கலை கலாசாரம் தொடர்பாக பாரிய மாற்றம் ஒன்றை அல்லது வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்த முடியும் என்பதனை நம்புகின்றேன்.

கிராமங்களிடையே அடைபட்டுப் போயுள்ள கலையாற்றல்களினை பிரதேச ரீதியாக ஒன்றுபடுத்தி மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் அரங்கேற்ற விழைகின்ற எமது நோக்கத்திற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதேச கலாசார அதிகார சபைக்கும் பிரதேச செயலக ஊழியர்களுக்கும் இப்பிரதேச மக்களுக்கும் எனது மன நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெருகல் பிரதேச செயலகப்பிரிவின் ஒரு அடையாளச் சின்னமாக வெருகலசம் என்னும் பொற்கலசத்தினை முதன்முதலாக சூட்டி வைப்பதில் பெருமிதம் கொள்கின்றேன். தொடர்ந்து ஆண்டுதோறும் இவ் வெருகலசம் மேலும் பல சிறப்புக்களுடன் வெளிவர வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

**திரு. மா.தயாபரன்**
பிரதேச செயலாளரும் பிரதேச கலாசார அதிகார
சபையின் தலைவரும்,
பிரதேச செயலகம், வெருகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் செயலகத்தின் பிரதம செயலாளர் டி. எம். எஸ். அபயகுணவர்த்தன அவர்களின்**

## வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தின் வரலாற்றுமயமான திருகோணமலையில் மேன்மை மிகுபாரம்பரிய காலச்சுவடுகளைத் தன்னகத்தே கொண்டு சிறப்புற்று விளங்கும் வெருகல் பிரதேசத்திலிருந்து வெருகலசம் எனும் இந்நூல் வெளியாவதனையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மூவினமக்களினதும் சமய, பண்பாட்டு, கலாசார பாரம்பரியங்களைத் தனித்தன்மையுடன் பேணிப் பாதுகாக்கும் இம் முயற்சியானது வரலாற்று சிறப்புமிக்கதொரு பணியாகும்.

காலத்தின் தேவைகருதி அழிந்துபோகும் வரலாற்று அம்சங்களைப் பாதுகாப்பதுடன் அதனை எதிர்காலச் சந்ததியினர்க்கு கையளிக்கும் பொறுப்புவாய்ந்த கடமையில் இருந்து நானும் வாழ்த்தினைக் கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இம்முயற்சி மென்மேலும் சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டி. எம். எஸ் அபயகுணவர்த்தன**
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணசபை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருகோணமலை மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. எஸ். ஏ.ஏ புஸ்பகுமார அவர்களின் வெருகல் பிரதேச கலை கலாசார மலரான வெருகலசம் வெளியீட்டுக்கான வாழ்த்துச் செய்தி.**

## *வாழ்த்துச் செய்தி*

கலை, காலாசார, பாரம்பரியம், சமய நம்பிக்கை, ஒழுக்கம் என்பன மானிடர்களாகிய எமக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். வாழ்வியல் என்பது ஒவ்வொருவரின் நம்பிக்கைச் செயற்பாடாகும். இந்த நம்பிக்கையை வளர்த்தெடுக்க உறுதுணையாய் அமைவது சமூகத்தின்கலை கலாசாரம் ஆகும். எனவே இதுதொடர்பான மலர் வெளியீடு இன்றியமையாத ஒன்றாகவே அமைகின்றது. மக்களின் பண்பாடு, கலை கலாசாரம் கட்டுப்கோப்பு என்பற்றின் அடிநாதமாக திகழ்பவை கலைகளும், கலைஞர்களும் படைப்பாளிகளுமாகும். இந்தவகையில் அப்பிரதேசத்தின் கலை கலாசார பண்பாட்டினை பாதுகாக்குமுகமாகவும், மேம்படுத்தும் முகமாகவும் இவ்வாறான வெளியீடுகள் அமைகின்றன. யுத்த காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேசம் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் இலக்கியவாதிகள் மற்றும் கலைத்துறை சார்ந்த பலர் வாழ்த்தனர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே பிரதேசத்தின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை ஆவணப்படுத்தும் ஓர் நிகழ்வே வெருகலசம் நூல் வெளியீடாகும். தற்போது மக்கள் மத்தியில் அமைதி, நல்லிணக்கம், ஒற்றுமை போன்றவை மலர்ந்துள்ள காலமாக காணப்படுகின்ற இவ்வேளையில் இவ்வாறான மலர் வெளியீடுகள் மிகவும் வரவேற்கத் தக்கதாகும். இப்பணியில் முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர், மற்றும் நூல் வெளியீட்டு குழுவினர் அனைவரையும் பாராட்டுவதுடன், எனது மனபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**N.A.A. புஸ்பகுமார்**
அரச அதிபர் / மாவட்டச்செயலாளர்.
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Cultural Affairs**
8th floor Sethsiripaya, Battaramulla
Trailblazer of a Beautiful Nation

My No. DCA/06/04/02/GEN/01 | Your No. | Date 2016.09.

Towards building a blessed nation of compassionate, complete and culturally rich human beings.


# வாழ்த்துச் செய்தி

ஆக்க பூர்வமான சிந்தனையுள்ள கலைகளைப் படைக்கவல்ல கலைஞர்களைக் கொண்ட நம் நாட்டின் சமாதான எதிர்காலத்திற்காக எம்மை அர்ப்பணித்துள்ள நாம் திடகாத்திரமான செயற்பாடுகள் மூலம் சிறந்த விழுமியங்களைக் கொண்ட மனித சமூகத்தை கட்டியெழுப்ப ஒன்றுசேர வேண்டும் என்பதே எமது பாரிய தேவையாக இருக்கின்றது. அந்தவகையில் வெருகல் பிரதேச செயலகத்தின் கலாசார விழாவினை நடாத்துவது தொடர்பாக நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கலையின் தார்ப்பரியத்தை முதன்மைப்படுத்தி இரசனையுடன் கலையுலகிற்கு தரும் கலைஞர்கள் போற்றுதற்குரியவர்கள். இம்முறை "வெருகலசம்" வெருகல் பிரதேசத்தின் கலை மரபுகள், பிரதேச வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் உள்ளடக்கப்பட்டு வெளிவர இருப்பதை நான் பெரிதும் வரவேற்பதோடு, பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளோடு மனித விழுமியங்களும் சமூகத்தை நன்னெறிப்படுத்தும் என்பதில் பாரம்பரிய கலைகள் தொடர்பாக நான் அறிவேன். அவை தொடர்பான தகவல்கள் அனைத்தும் சகல சமூகத்தினரையும் சென்றடைய வேண்டும் என்பதே பலரினதும் தேவைகளாக இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கு "வெருகலசம்" இதழானது சிறந்த ஊடகமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவைகளின் அடிப்படையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எனும் வகையில் வெருகல் பிரதேச கலாசார பேரவையினால் நடாத்தப்படும் கலாசார விழாவின்போது வெளியிடப்படுகின்ற "வெருகலசம்" சிறப்பு மலர் தொடர்பாக நான் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவ் வருடாந்த கலாசார மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமிதமடைவதோடு கலாசார பேரவையின் கலாசார விழாவானது வெற்றிகரமாக நடந்தேறவும் இனிவரும் காலங்களில் மென்மேலும் சிறப்புற இவ்வாறான நிகழ்வுகள் நடாத்தப்படுவதற்கு எல்லா விதமான அனுகூலங்களும் கிடைக்கப்பெற வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

**அனுஷா கோகுல பர்னாந்து**
பணிப்பாளர் கலாசார அலுவல்கள் திணைக்களம்


Director 2872035 | Office 2872031 2866731 | Fax 2866732 | E-mail dcanews@sltnet.lk | Web Site www.culturaldept.gov.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

## இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின்

## *வாழ்த்துச் செய்தி*

வெருகல் பிரதேச செயலகத்தினால் அப்பிரதேசத்தின் கலை, கலாசார, பண்பாடு மற்றும் பாரம்பரியங்களைத் தாங்கி வெளிவருகின்ற "வெருகலசம்" என்னும் நூலிற்கு எனது வாழ்த்துச் செய்தியினைப் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அரச நிறுவனங்களாக இயங்கும் அமைப்புக்கள் கலாசார விழாக்களை நடத்துவதன் மூலம் மக்கள் மனதில் அவர்களது மொழி, கலாசாரம், பண்பாடு என்பன தொடர்பான நம்பிக்கை உணர்வுகள் வேரூன்றித் தழைப்பதற்கு வழி சமைக்கின்றன என்பதில் ஐயமில்லை.

கலாசார விழாக்களை நடாத்துவதோடு மட்டும் நின்றுவிடாது எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்று ஆவணமாகக்கிடைக்கும் வகையில் "மலர்" ஒன்றினையும் வெளியீடு செய்வது பாராட்டுக்குரிய விடயமாகும்.

பலரது கருத்துக்களையும், பல்வேறு கருப்பொருட்களையும் உள்ளடக்கி வெளிவரும் "வெருகலசம்" தரமான ஆக்கங்களைக் கொண்டதாக அமையவும் அனைவருக்கும் பயனுள்ளதாய் அமையவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
248-1/1, காலி வீதி, கொழும்பு - 04.

248-1/1, காலி வீதி, கொழும்பு – 04. 248-1/1, ගාලු පාර, කොළඹ - 04 248-1/1, Galle Road, Colombo -04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව - නැගෙනහිර පළාත
பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - கிழக்கு மாகாணம்
Department of Cultural Affairs - Eastern Province

My No: EP/37/04/01/LFM
Your No:

# வாழ்த்துச் செய்தி

வெருகல் திருகோணமலை மாவட்டத்தின் எல்லையாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் திருகோணமலையையும் இணைக்கும் பிரதேசமாகவும் விளங்குகின்றது. உலகறிந்த வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயமான வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலயத்தின் அருட்கடாட்சம் நிறைந்த பிரதேசமாகவும் காட்சி தருகின்றது. தற்கால அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியையும் வசதிகளையும் கருத்தில் கொள்ளும் போது இத்தகைய வசதிகள் அற்ற நிலையில் கலப்படமற்ற சமூக வாழ்வின் மத்தியில் கலை, நாட்டுவைத்தியம், பாரம்பரியம், பண்பாடுகள் சிறந்து விளங்கும் இடமாக காணப்படுகின்றது.

ஒவ்வொரு பிரதேச மக்களும் தங்களுக்கென தனித்துவமான கலைப் பாரம்பரியங்களைக் கொண்டு விளங்குகின்றனர். அதற்கேற்ற வகையிலேயே அங்கு வாழும் மக்களின் பேச்சுவழக்கு, தொழில் முறைகள், சடங்குமுறைகள் போன்றவை நாகரீக வளர்ச்சியில் நலிந்து போய் விடாமலே காணப்படுகின்றன. சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான சமூக கட்டுக்கோப்புக்களைப் பேணிப்பாதுகாப்பதற்கு அம்மக்கள் கொண்டுள்ள கலைப் பாரம்பரியங்களே உறுதுணையாக அமைகின்றது. எனவே சமூக செழுமைக்கும் மலர்ச்சிக்கும் உரிய இக்கலை கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமானதென குறிப்பிடலாம்.

வெருகல் பிரதேச செயலகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டு நடைபெறவுள்ள கலை இலக்கிய விழா அங்கு வாழும் மக்களின் கலை பண்பாடுகளை வெளிக்கொணரும் விழாவாகவும் கலை இலக்கியப் படைப்பாளர்களையும் ஆர்வாலர்களையும் புத்தெழிச்சி பெறச் செய்யும் விழாவாகவும் அமையும் என நம்புகிறேன். இவ்விழாவிலே "வெருகலசம்" எனும் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா ஏற்பாட்டாளருக்கு பாராட்டினை தெரிவிப்பதோடு மலருக்கு வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். விழாவை முன்னெடுத்து வரும் பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், கலாசார பேரவையினர் மற்றும் அனைவருக்கும் எனது பாராட்டினையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்.

Ministry of Education, Information Technology Education, Pre School Education, Sports, Cultural Affairs, Youth Affairs, Rehabilitation & Resettlement Orr's hill, Trincomalee
026 - 2220036 (Director, Cultural Affairs - Tel & fax) E-mail: culture@ep.gov.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தரான திருமதி. மா. லதாமங்கேஸ் அவர்களின்**

## *வாழ்த்துச் செய்தி*


ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அப்பிரதேசத்தின் பண்பாடு, கலை, சமயம், மொழி பழக்கவழக்கங்களுடன் கூடிய கலாசாரம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந்தவகையில் வெருகல் பிரதேசமானது பண்டுதொட்டு தனக்கே உரிய தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பிரதேச கலைஞர்களின் படைப்பாற்றலை ஊக்கப்படுத்துவதோடு அவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே வெருகலசம் நூல் வெளியீடு அமைகின்றது. போர்க்கால சூழலின் பிற்பாடு பிரதேச செயலகத்தில் வெளிவரும் முதலாவது நூலாகவும் இது சிறப்புப் பெறுகின்றது. இவ் வெருகலசம் வெளிவர அயராதுழைத்த வெளியீட்டு குழுவினர் அனைவரும் இறைவனின் அருள்பெற இன்னும் பலபடைப்புக்களை வெளியிட வேண்டும் என்று இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**திருமதி. மா. லதாமங்கேஸ்**
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவஹரிகதாவாரி- கதா காலட்சேப திலகம் ,**
**உபன்னியாசமணி, முத்தமிழரசு, தருண கல்பித விதூர,**
**திருக்கோணை சிவயோகச்செல்வன் சாம்பசிவம்**
**சிவாச்சாரியார் மட்/ காயத்திரி பீடம்**
**ஈச்சிலம்பற்று செம்பகநாச்சி அம்மன் ஆலயம்**
**அவர்களின்**

## ஆசிச்செய்தி

நாச்சி செம்பகா நாளும் கிருபை நல்கும்
ஈச்சிலம்பற்று பிரதேச - சீர்கலை
நேர் நிரை செய் பிரதேச செயலகம்
பேர் உறவே பணிகள் பொலி

தமிழர்தம் கலை கலாச்சாரம் தீய்ந்து
நிலை குலைந்தயிக்காலத்தில் - தலைதூக்க
தாமியற்றும் தமிழ்ப்பணிக்கு தாயான
கலைச்சிலம்பால் காப்பாள் நிதம்

திருகோணைத் தமிழகம் திவ்யமான தெய்வீக பாரம்பரியக் கலைகளைக் கொண்ட திருவூர் அதிலும் மூதூர் ஈச்சிலம்பற்று பிரதேசம் - சிலம்பம், வசந்தன், உடுக்கோசை, ஏர்சிலம்பம், குரவைக்கூத்து, வதனமார்கதம்பம் ஆகிய கிராமியக் கலைகளில் பிரபல்யமாக விளங்கியது.

இன்று அவை செவிக்கெட்டாத, கண்ணுக்கெட்டாத தூரத்தில் மறைந்துவிட்டதென்றே கவலை அடைகின்றேன். என்னூர் பிரதேசங்களில் ஒன்றான ஈச்சிலம்பற்று எல்லா வகையிலும் சோபை இழந்த நிலைகண்டு வேதனை அடைகின்றேன்.

இது காலத்தின் கோலமா அன்றி நம்நாட்டை ஆண்ட அரசவியூகமா? அல்லது நம்மினத்தின் தலைவிதியா புரியவில்லை. எல்லாம் அந்த கோணை நாயகனுக்கே தெரியும். ஆனாலும் நம் இனம் தனது கலை கலாச்சாரத்தைக் கோட்டைவிட்டு மற்றவர் தம் கலைகளை கொட்டாவிவிட்டுப் பார்க்கும் கொட்டியார்புரப்பற்று அற்றவர்களாக வாழாமல் இனிவரும் காலத்திலேனும் வெருகல் ஈச்சிலம்பற்று பிரதேச செயலகம் நாடாத்தும் அரும்பணியை ஆதாரமாகக் கொண்டு மீண்டும் நம் இனம் மதம் புத்துயிர் பெறவேண்டும் கலைகலாச்சார பணிகளை காலத்தின் தேவை அறிந்து செய்யும் பிரதேச செயலக முதல்வர் சிறப்பான பணிக்குரிய விழாக் குழுவினர் என்றும் என் அன்புக்குரிய வெருகல் ஈச்சிலம்பற்று மக்கள் கலைஞர்கள் யாவருக்கும் ஆத்மார்த்த நன்றி கலந் ஆசீர்வாதங்கள் உரித்தாகுக.

வாழ்க! மக்கள் வாழ்க! கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாக்கக் குழுவினரிடமிருந்து......

வெருகல் பிரதேச கலாசார அதிகாரசபையானது 2016 இல் முதன் முறையாக தாபிக்கப்பட்டதன் பின்பு அதன் முதற்பணியாக "வெருகலசம்" எனும் பெயரில் சஞ்சிகையொன்றை வெளியிட வேண்டுமென முடிவெடுத்துள்ளது என்பதை நினைக்கும் போது நாம் பேருவகை அடைகின்றோம்.

திருமலை மாவட்டத்தின் தெற்கெல்லையில் அமைந்திருக்கும் பிரதேசமே வெருகல் பிரதேசமாகும். இப் பிரதேசமானது தனித்துவமான தமிழர் பண்பாட்டுக் கலைகளை தன்னகத்தே கொண்டு விளங்குவதால் வெளியுலகிற்கு தெரியாமல் மறைந்து விடுமோ என்ற வினா எம்மனதில் எழுந்ததன் காரணத்தால், இம்மலரை எமது நோக்கம் ஓரளவேனும் நிறைவேறும் வரை அவ்விடயங்களால் நிறைவு படுத்த முனைந்துள்ளோம்.

இப்பிரதேசமானது பல கலைஞர்களையும், ஆக்க இலக்கிய கர்த்தாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. என்பதை இம்மலர் உருவான பின்புதான் நாம் புரிந்துகொண்டோம். அவ்வகையான பண்பாட்டுக்கலை தேடலுணர்வு கொண்டோரையும் நம்மால் இனங்கான முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாகரீக வளர்ச்சியால் பாரம்பரியமான தமிழர் பண்பாட்டுக் கலைகள் மருவியும், மறைந்தும் வருவதை நம்மால் உணரமுடிகின்றது. அதன் தாக உணர்வே எம்மையெல்லாம் இவ் வெளியீட்டு முயற்சிக்குத் தள்ளியதெனலாம்.

அந்தவகையில் இம்மலரை நாம் வெளியிடும் பணிகளுக்கு பெரிதும் உந்துசக்தியாகவும், முதனிலைச் செயற்பாட்டாளராகவும் இருப்பவர் எமது பிரதேச செயலாளர் திரு.மா. தயாபரன் ஐயா அவர்கள் என்பதை கூறித்தான் ஆகவேண்டும். அத்தோடு எமது கலாசார உத்தியோகத்தர் திரு.க.ரூபன் அவர்களும், இப்பிரதேசத்தில் வாழும் இலக்கிய ஆர்வலர்களும், மற்றும் பிரதேசசெயலக ஊழியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் போன்ற பலர் எமது தலையாய இப்பணிக்கு சிறப்பாக தோழ் கொடுத்து உதவியுள்ளனர் அவர்களையும் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

எனவே இம்மலரை படிக்கின்ற ஒவ்வொருவரும் இப் பிரதேசத்தின் இலக்கியம், மற்றும் அதன் தனித்துவமான பண்பாட்டுக்கலைகள் போன்றவை தொடர்பான ஓரளவு விடயங்களை அறிந்து கொள்ளமுடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

நன்றி.

வெளியீட்டுக்குழு
வெருகல் பிரதேச செயலக கலாசார அதிகார சபை
பிரதேச செயலகம் வெருகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச கலாசார அதிகார சபை விபரம்.....

01. திரு. மா. தயாபரன் - **தலைவர்** - (பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வெருகல்.)

02. திரு. க. ரூபன் - **இணைப்பாளர்** - (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வெருகல்.)

03. திரு. ப. மதிபாலசிங்கம் - **துணைத்தலைவர்** - (அதிபர் தி/மு/திருவள்ளுவர் வித்தியாலயம் பூநகர் - ஈச்சிலம்பற்று.)

04. திரு. சி. கணேசன் - **செயலாளர்** - (பிரதி அதிபர், தி/மு/ இலங்கை துறைமுகத்துவாரம் இந்துக்கல்லூரி, ஈச்சிலம்பற்று)

05. திருமதி. த. சிவகலா - **துணைச் செயலாளர்** - (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வெருகல்.)

06. திரு. ந. லிங்கேஸ்வரன் - **பொருளாளர்** - (அதிபர் தி/மு/ ஆதவன் வித்தியாலயம் சீனன்வெளி - ஈச்சிலம்பற்று.)

07. திருமதி. கா. சிறிகாந்தராசா - **சிரேஸ்ட ஆலோசகர்** - (கிராம உத்தியோகத்தர் கறுக்காமுனை.)

08. திரு. வி. அருள்நேசராசா - **சிரேஸ்ட ஆலோசகர்** - (அதிபர் தி/மு/ ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம் - ஈச்சிலம்பற்று.)

09. திருமதி. இ. சௌந்தரராசா - **சிரேஸ்ட ஆலோசகர்** - (முத்துச்சேனை மாவடிச்சேனை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே........ பக்கம்


| | |
|---|---|
| 01) தமிழர் பண்பாட்டு உயிர்ப்பின் திருநாளாம் தைப்பொங்கல் நன்நாள் | 1 |
| 02) வெருகல் பிரதேசத்தின் மறைந்து போனதும் மறைந்து வருகின்றதுமான பண்பாட்டு கலைகள் | 3 |
| 03) சிறுகதை - கண்கெட்ட பின்பு | 10 |
| 04) மூலிகை மகத்துவம் | 17 |
| 05) உழைப்பால் உயர்ந்தவர்கள் | 22 |
| 06) வயலும் வாழ்வும் | 23 |
| 07) நாகதம்பிரான் காவியம் | 28 |
| 08) விசக்கடி கலை | 31 |
| 09) வெயிலில் கருகி........ | 37 |
| 10) கௌரவிக்கப்படுவோர் | 38 |
| 11) துயரத்தில் ஓர் மாது | 41 |
| 12) ஈச்சிலம்பற்று கிராம வரலாற்றுச் சுருக்கம் | 42 |
| 13) இலங்கைத் துறைமுகத்துவாரம் | 46 |
| 14) உப்பூறல் | 49 |
| 15) சீனன்வெளி | 49 |
| 16) கும்மிப்பாடல் | 50 |
| 17) இலங்கைத் துறை கிராமத்தின் கல்வி நிலை கண்ணோட்டம் | 53 |
| 18) கிராமியப் பாடல் | 58 |
| 19) நிரந்தர ஏழைகளா நாம்.....? | 59 |
| 20) வெருகல் பிரதேசமும் வெள்ளப்பாதிப்பும் | 60 |
| 21) எனது மண் | 63 |
| 22) அம்மா பாடல் | 64 |
| 23) பிரதேச இந்து ஆலயங்கள் தொடர்பான தகவல் | 65 |
| 24) பிரதேச. மாவட்ட மட்ட கலை இலக்கிய விழா போட்டி முடிவுகள் | 67 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் பண்பாட்டின் உயிர்ப்பின் திருநாளாம் தைப்பொங்கல் நன்நாள்

உலகில் மனித வாழ்க்கையின் சமூகவியல் பண்பாட்டில் நிகழ்கின்ற நிகழ்வுகளில் பண்டிகைகள் சடங்குகள் முக்கிய இடம் பெறுகின்றன. இவை தேசம், காலம், சூழல், தேவை நோக்கம் என்பவற்றின் மூலமும் வேறுபாடு அடைகின்றன. மனித வாழ்க்கை பண்பாடு, நாகரிகம் இவற்றுக்குரியதாகையால் உயிரியல் நிலையில் நிகழ்வுகள் பண்பாட்டிற்கு வயப்படுகின்றன இந்த வகையில் தமிழ் மக்களின் சடங்குகள், விழாக்கள் சமூக, பொருளாதார, அரசியல், சமய தளங்களைச் சார்ந்தும் அமைகின்றன.

அந்த வகையில் தமிழர்களின் பண்பாட்டு உயிர்ப்பிற்கு உறுதியாய் இன்று வரை தொடர்ந்து வருகின்ற பண்டிகைகளில் தமிழர் திருநாளாம், உழவர் நன்நாளாம் தைப்பொங்கல் முக்கியத்துவம் பெறுகிறது. வேறுபாடுகள் அற்று தமிழ் மக்களின் பண்பாட்டின் உயிர்ப்பில் தைத்திருநாள் உறுதிமிக்கதாகவே விளங்குகிறது. தமிழர்கள் வாழுகின்ற இடங்களில் அவர்களின் வீடுகள் தோறும் வாசலில் கோலம் போட்டு, நிறைகுடம் வைத்து, சூரிய பகவானுக்கு, இந்து மதத்தின் முழுமுதற் கடவுளாகிய ஆதித்திய பகவானுக்கு தன் நன்றிக்கடனை தமிழ்ப் பெருமக்கள் நினைவு கூருகின்றனர்.

மார்கழி மாதத்தின் மழைக்கால இருளாலும் முன்பனியாலும், வெள்ளப் பெருக்கினாலும் துன்பமுறும் மக்களுக்கு நான் உங்களோடும் இருக்கின்றேன் என நாற்றிசைகளிலும் தன் ஒளிபரப்பி, இருளகற்றும் சூரியபகவானுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நாளும் இத்திருநாளே. உழவர் பெருமக்கள் புது வருடத்தில் நெல்லின் அறுவடை கண்ட மகிழ்வில் தம் உழைப்பிற்கு சிந்திய வியர்வைத்துளிகளுக்கு உதவி செய்தமைக்கு நன்றிக்கடன் செலுத்தும் ஆனந்தமான அற்புதமான விழா ஆகும். சங்ககாலமக்கள் அறுவடை விழாவாகவே பொங்கல் திருநாளைக் கொண்டாடினர்.

வருடத்தில் தை மாதத்தினை உத்தராயண புண்ணிய காலம் என்னும் மகரச்சங்கிராந்தி என்றும் அழைப்பர். அதாவது சூரியபகவான் தைமாதம் முதல் ஆனிமாதம் வரை வடக்குத் திசைப்பக்கம் சஞ்சரிக்கின்ற காலப்பகுதி இதுவாகும். ஆடிமாதம் முதல் மார்கழிமாதம் வரை தென்திசையில் சஞ்சரிக்கின்ற காலத்தை தெட்சணாயன காலம் என்றும் வழங்குவர். தைப்பொங்கல் தினத்தன்று சூரிய பகவான் தென் திசையிலிருந்து வடதிசைக்கு திரும்பி வருவதாக ஐதீகம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானசாஸ்திரத்தின் படியும், ஜோதிட சாஸ்திரத்தின் படியும் சூரியபகவான் தனு இராசியிலிருந்து மகர இராசிக்கு வருவதாக கூறப்படுகின்றது. இதனாலேயே மகரச்சங்கிராந்தி என அழைக்கப்படுகின்றது. இந்நாளே தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினமாகும். உத்தராயண காலத்தின் ஆரம்பம் என்பதால் இவ்வேளையில் சூரியனுக்கு அர்ப்பணம் செய்து வணங்கும் மரபும் இணைந்திருப்பதனால் இத்தமிழர் திருநாள் சைவசமய வழிமுறையிலும் முக்கிய இடம் பிடிக்கின்றது.

தைப்பொங்கலுக்கு அடுத்த தினம் உழவுத்தொழிலுக்கு வழி செய்த காளைகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் மாட்டுப்பொங்கல் தினமாகும். அன்று உழவர்களின் தொழிலுக்கு முக்கியமானதாக கருதப்படும் மாடுகளை நீராட்டி அலங்கரித்து வழிபடுதல் இதன் மரபாகும். உழவர் பெருமக்களே உலகிற்கு உயிர் கொடுப்பவர்கள். அவன் இன்றே அவனி இல்லை எனலாம். இதனைக் கம்பர் தனது ஏரெழுபது எனும் நூலில் கூறும்போது 'மேழ் பிடிக்கும் கை, வேல் வேந்தர் நோக்கும் கை' எனப்புகழ்கின்றார். வள்ளுவப் பெருந்தகை கூட 'உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வார்' என புகழ்கின்றார். உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் எனப் பாரதி பாடுகின்றான். ஔவையார் கூட 'வரப்புயர நீருயரும், நீருயர நெல் உயரும்' என அழகாக வாழ்த்தி இருக்கின்றார். இத்தகைய பல சிறப்புக்கள் மிக்க உழவர் திருநாளாகிய மாட்டுப் பொங்கல் எனப்படும் பட்டிப்பொங்கல் இம்மாற்றத்தின் நடுவே இன்று வெறும் சடங்காக மட்டுமே இந்நிகழ்வு நடத்தப்படுகிறது. 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பது தமிழ் மக்களின் மனங்களில் காலங்காலமாக வருகின்ற அசைக்கமுடியாத நம்பிக்கை இதனால் தமிழர்களின் உள்ளங்களில் ஓர் உறுதி, புத்துணர்வு, புதுவாழ்வு பிறக்கின்றது.

**செ.லோகராசா**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
ஈச்சிலம்பற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகல் பிரதேசத்தில் மறைந்துபோனதும் மறைந்து வருகின்றதுமான பண்பாட்டுக்கலைகள்.

தெற்கே மகாவலி கங்கையின் உபகிளையும், வடக்கே சேருவில பகுதியையும், மேற்கே சோமாவதி வனப்பகுதியையும், கிழக்கே வங்காளவிரிகுடா கடலையும் தனது எல்லைகளாக கொண்டமைந்ததுதான் வெருகல் பிரதேசமாகும். இது நூறுவீத இந்துக்களைக்கொண்ட ஒரு பூர்வீக பூமியாகும். தமிழர் பாரம்பரியத்தோடு இணைந்த கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை வளர்த்து வாழ வைத்துக்கொண்டிருக்கும் சிறப்புறு பிரதேசமாகும்.

இப்பிரதேசம் ஒன்பது கிராமங்களையும், பெயர் குறிப்பிடப்படாத இன்னும் பல கிராமங்களையும் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கு வாழும் மக்கள் தங்கள் ஜீவனோபாயத்தொழிலாக விவசாயத்தையும் அதனோடு இணைந்த கால்நடை வளர்ப்பையும், கடற்தொழிலையும் மேற்கொண்டு வருகின்றனர். அதிகமான விளைநிலங்கள் மழை நீரை நம்பிய பயிர்ச்செய்கையாகவே உள்ளது.

தமிழர் தம் கலைகளின் வாழ்விடமாக இப்பிரதேசம் அமைந்துள்ளது. உலக மாற்றத்திற்கேற்ப மக்கள் சமூகம் மாறினாலும் இவர்கள் தமது பாரம்பரியமான கலையுணர்வுகளை இன்னும் இழக்காமல் இருப்பது மகிழ்வைத்தருகின்றது. தமது வாழ்வோடு கலைகளையும் அணைத்துள்ளனர் என்றே கூறவேண்டும். இங்கு காணப்படும் கலையம்சங்கள் பருவகால கலை வடிவங்களாக அமைந்துள்ளது. அதாவது,பொழுதுபோக்குக்கலை, வழிபாட்டுக்கலை என்று இவற்றை பாகுபடுத்தியும் விடலாம். பொழுதுபோக்குக்கலைகளில் நாட்டுக்கூத்துக்கலையை குறிப்பிட முடியும். இதனோடு கும்மி, கோலாட்டம் (வசந்தன்) போன்றவற்றையும் குறிப்பிட்டு கூறலாம். குறிப்பாக வெருகல் பிரதேசத்தின் சிறப்பு மிகு கலை வடிவங்களாக நாம் இவற்றைக் கொள்ள முடியும்.

நாட்டுக்கூத்து எனும் கலை வடிவத்தை எடுத்துக்கொண்டால் இப்பிரதேசத்தில் பல கிராமங்களில் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு சிறப்பான கலை வடிவமாகும். தற்பொழுதும் பல பெயர் குறிப்பிடக்கூடிய அண்ணாவிமார்கள் இக்கலைக்கு உயிர் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். அத்தோடு கும்மி, கோலாட்டம் போன்றவை வழிபாட்டுக்கலைகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெருகல் பிரதேசம் முருக வழிபாட்டோடு நெருங்கியிருந்தாலும் சக்தி வழிபாடும் முதன்மை பெற்று விளங்குகின்றது. குறிப்பாக செண்பக நாட்சியம்மன், கட்டம்மன், கண்ணகியம்மன், மலைநீலியம்மன் போன்ற பெண் தெய்வ சக்தி வழிபாடுகளை குறிப்பிடலாம். இவ்வகையான தெய்வ வழிபாட்டுடன் இணைந்ததாக கும்மி, கோலாட்டம் போன்ற கலைகள் காணப்படுகின்றது.

இங்கு பொழுதுபோக்குக்கலைகளுள் நாட்டுக்கூத்து மிகவும் முக்கியமான இடத்தை வகித்துள்ளமையை நம்மால் அறிய முடிகின்றது. இப்பிரதேசத்தில் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையானதும், சிறப்புவாய்ந்ததுமானதாக காணப்படும் கலைகளில் நாட்டுக்கூத்தை குறிப்பிடலாம். இக்கூத்துக்கலை இரண்டு வகையாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதில் வடமோடி, தென்மோடி ஆகியவையாகும். இதில் வடமோடி வகையைச்சேர்ந்த ஆட்டக்கூத்தே முக்கியப்படுத்தப்பட்டு ஆடியுள்ளனர். இக்கூத்துக்கள் இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்களில் இடம்பெறும் கதைச்சுருக்கங்களாலான காட்சிகளை அடிப்படையாகக்கொண்டே கூத்துக்கள் உருவாக்கப்பட்டன. இக்கதைகளோடு நல்லதங்காள், கண்டி இராசன், பவளக்கொடி, அரிச்சந்திர மயானகாண்டம் போன்ற வரலாறுகளும் கூத்துக்களுக்கு கருவாக அமைந்திருந்தன. இங்கு ஆடப்படும் கூத்துக்களில் அனைத்துப் பாத்திரங்களுக்கும் ஆண்களே உயிருட்டி நடிப்பது வழக்கம். குறிப்பாக பெண்பாத்திரங்களைக்கூட ஆண்களே ஏற்று நடிப்பார்கள். அதிகமான கூத்துக்கள் மாதக்கணக்கிலும் இடம்பெறுவது வழக்கம். இப்பிரதேசத்து மக்கள் விவசாயத்தொழிலை மேற்கொள்வதால் ஒரு பருவ வேலையையும், ஒருபருவ வேலையின்மையையும் அனுபவித்ததன் காரணமாக பெரும்பாலும் ஓய்வு காலங்களில் பொழுதுபோக்கிற்காகவே இக்கூத்துக்களை அரங்கேற்றி வந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கெல்லையில் அமைந்துள்ள கதிரவெளிக்கிராமத்தில் வாழ்ந்த நாட்டுக்கூத்தில் திறன்படைத்த அண்ணாவிமார்களைக் கொண்டே இப்பிரதேசத்தில் கூத்துக்கலை வளர்க்கப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. ஆனாலும் பிற்காலத்தில் இப்பிரதேசத்திலும் அண்ணாவிமார்கள் உருவாகி மிகவும் சிறப்பான கலைஞர்களாக இன்றும் எமது பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஒரு நாட்டுக்கூத்தை நெறியாள்கை செய்து பயிற்றுவிப்பவரே "அண்ணாவி" என அழைக்கப்பட்டார்கள். இப்பிரதேசத்தை பொறுத்தவரை மேற்படி அண்ணாவிமார்கள் சமூகமதிப்புவாய்ந்த கலைஞர்களாகவே வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது நவீன பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகரித்துள்ளதால் இவ்வாறான கலைகள் சிறிது உறங்கி இருப்பதை நம்மால் உணரமுடிகின்றது. இன்னும் சிறிது காலத்தில் இக்கூத்துக்கலை இல்லாமல்போனாலும் நாம் ஆச்சரியப்படத்தேவையில்லை. ஆனால் நமது தமிழரின் பாரம்பரியக்கலை அழிந்துபோவதை தமிழராக வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாதல்லவா? அத்தோடு இன்னும் புன்னையடிக்கிராமத்தில் கூத்துக்கலை உயிர் வாழ்வதை பார்க்கும்போது அவர்களை நாம் பாராட்டியே ஆகவேண்டும். வாழைத்தோட்டக் கிராமத்தைச்சேர்ந்த கலாபூசணம் திரு.க.தம்பிராசா அவர்கள் வயதான கலத்திலும் இன்றும் இக்கூத்துக்கலையை வளர்த்து வருவதையிட்டு நாம் பெருமிதம் கொள்ளவேண்டும்.

இந்நாட்டுக்கூத்தை அரங்கேற்றுவது இரண்டு கட்டங்களாக இடம்பெறுவது வழக்கம் ஒன்று சதங்கை (சலங்கை) கட்டல், அடுத்து அரங்கேற்றல். அரங்கேற்றல் நடைபெறுவதற்காக வட்டக்களரி அமைப்பார்கள் களரி என்பது மேடை என்று சொல்லப்படுவதாகும். களரியைச் சுற்றி பார்வையாளர்கள் அமர்ந்திருப்பார்கள். அனைத்து திசைகளிலும் இதனை இருந்து பார்க்கலாம். நாட்டுக்கூத்தின் அரங்கேற்றக்காலங்களில் உரிய கிராமங்கள் விழாக்கோலம்பூண்டு மிகவும் சந்தோசமாக மக்கள் இருப்பார்கள். அனேகமாக கூத்தாடும் இளைஞர்களுக்கு திருமணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாகிவிடும் வழக்கமும் இருந்தது. நாட்டுக்கூத்து அரங்கேற்றம் முடிந்தவுடன் வீடுதோறும் ஆடிச்செல்வார்கள் இதன்மூலம் சேகரிக்கப்படும் பணம், பொருள்கள் அனைத்தும் கூத்தை பயிற்றுவித்த அண்ணாவிமார்களுக்கே உரியதாகும். தற்போது இக்கலைவடிவம் நேரம் சுருக்கப்பட்டதாகவும். நவீன மேடைக்குரியதாகவும் மாற்றப்பட்டமை வளர்ச்சிப்போக்காக நாம் நினைத்தாலும் பாரம்பரியமான கூத்துக்கலை மறைந்து போவதற்கான கால்கோள் என்றும் கூறலாம்.

மேலும் வெருகல் பிரதேசத்தில் காணப்படும் விளையாட்டுக்கலையையும் இங்கு குறிப்பிடவேண்டும். தமிழர் புகழ் கூறும் பாரம்பரியமான விளையாட்டுக்களும் இப்பிரதேசத்தில் உயிர் வாழ்ந்துகொண்டிருப்பதை இன்றும் காணலாம். உலகில் மட்டுமல்ல எமது நாட்டிலும் மேற்கத்தைய விளையாட்டின் ஆக்கிரமிப்பு காணப்பட்ட போதும் தமிழரின் பாரம்பரியமான விளையாட்டுக்கலையை இப்பிரதேசம் வாழவைத்துக்கொண்டிருப்பது எமக்கெல்லாம் சிறப்பைத்தருகின்றது. அதாவது இங்கு காணப்படும் விளையாட்டுக்கலைகளில் கிளித்தட்டு, கிட்டிப்புள்ளும், கொத்துப்போடுதல், பூசணிக்காய் பறித்தல், சில்லுக்காய் கோடு, வார் ஓட்டம், கோத்தான், பசுவும் புலியும், தட்டுக்கோடு போன்ற கிராமிய விளையாட்டுக்கள் இன்னும் உள்ளதை நாம் காணலாம். இவ்விளையாட்டுக்கள் இப்பிரதேசக்கிராமங்களில் இரவு வேளைகளில் நிலா ஒளியில் ஆடி மகிழ்வதை காணலாம். சிறப்பாக பெண்களும் இவ்விளையாட்டுக்களில் ஈடுபடுவது வழக்கமாகும். ஒவ்வொரு விளையாட்டைப்பற்றியும் கூறுவதால் இப்பந்தி நீண்டுவிட வாய்ப்புண்டு இவை தமிழர் தேசிய விளையாட்டுகளாக வெருகல் பிரதேசத்தில் அமைந்துள்ளமை அனைவருக்கும் பெருமையாகும். இத்தோடு பக்தி மார்க்கத்தோடு இணைந்ததாக காணப்படுவதுதான் கொம்பு முறித்தல் அல்லது கொம்பு விளையாட்டு என்று கூறுவர். உழவர்களின் சிறப்புறு விளையாட்டுக்கலையாக இது காணப்படுகின்றது. இது இப்பிரதேசத்திலிருந்து தற்போழுது மறைந்திருந்தாலும் ஆரம்பகாலத்தில் காணப்பட்டதை நாம் குறிப்பிட முடியும்.

அடுத்து வெருகல் பிரதேசத்தில் இன்னும் சிறப்பிடம் பெறும் கலையாக மருத்துவதுவக்கலையை குறிப்பிடலாம். இம்மருத்துவக்கலைகளில் குறிப்பாக விஷவைத்தியம் குறிப்பிடக்கூடியதாக உள்ளது. அத்தோடு நாட்டு வைத்தியமும் பரிகாரிமார்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பிரதேச மக்கள் மேலைத்தேய வைத்தியமுறையிலும் பார்க்க நாட்டு வைத்தியத்தில் அதீத நம்பிக்கை வைத்துள்ளதால் தான் இன்னும் நாட்டு வைத்திய கலை வாழ்ந்துகொண்டிருக்கின்றது எனலாம். இவற்றோடு மருத்துவிச்சி எனப்படும் பெண்கள் சிலரும் உள்ளனர். அதாவது வீட்டில் குழந்தை பிறக்கின்ற போது அப்பிரசவத்தின் போது வைத்தியராகவிருந்து உதவுகின்ற பிரசவ மருத்துவம் பார்க்கின்ற பெண்களையே மருத்துவிச்சி என்று அழைப்பர். இன்றும் கூட குழந்தைகளை வீட்டில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவிச்சிமார் வாழ்ந்து கொண்டெ இருக்கின்றனர்.

பிரசவத்தின் போது மருத்துவிச்சி பாடும் முதல் தாலாட்டு பாடல் என்றுமே மறக்கமுடியாதது. "கற்றுத் தேறாத கவித்துவ ஆற்றலை" இவர்கள் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நிறைவேற்றும் பிரசவக்கலையும் இப்பிரதேசத்தில் குறிப்பிடக்கூடியதாகும். மேலும் வழக்கொழிந்து போன ஒப்பாரி இன்றும் வெருகல் பிரதேசத்தின் அனைத்து கிராமங்களிலும் காணப்படுகின்றது. மனதை நெகிழ வைக்கும் கேட்போரை கண்ணீர் சிந்தவைக்கும் இந்த ஒப்பாரியும் இங்கு சிறப்பான கலையாகும். இக்கிராமத்தில் பெண்கள் கல்வி கற்காவிட்டாலும் தமது கற்பனையால் சோக வரிகளை உருவாக்கி முகாரி இராகத்தில் இசைப்பதே ஒப்பாரியாகும். இன்றும் இப்பிரதேச மரணவீடுகளில் ஒப்பாரி ஒலிக்க தவறுவதில்லை.

வெருகல் பிரதேசத்தின் கலாசாரத்தை நோக்குவோமாக இருந்தால் தமிழர் கலாசாரம் தனித்துவமாக வாழும் பிரதேசமாக இப்பிரதேசம் காணப்படுகின்றது. இம் மக்களிடம் தமது கலாசாரத்தை ஒட்டியதான வாழ்க்கைப்பண்பு நிறைந்தே காணப்படுகின்றது. சமய நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்வோட்டத்தை அமைத்துள்ளனர். இந்தப்பண்பாட்டு விழுமியங்களை அனுசரித்தே தமது நாளாந்த நடவடிக்கைகளை அமைத்துள்ளனர். சமய நெறியோடு இணைந்த வாழ்வியலை தமதாக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக திருமணச்சடங்குகள், மரணச்சடங்குகள், பெண் பிள்ளைகள் பருவமடைந்த சடங்கு போன்றன இப்பகுதி கலாசார நடைமுறைகளில் சிறப்பாக இணைந்துள்ளது. இவற்றோடு ஆண்களுக்கான கடுக்கன் போடும் சடங்கும் முற்காலத்தில் சில கிராமங்களில் நடைபெற்றமையை அறியமுடிகின்றது. அதாவது வயதுக்கு வந்த ஆண்களுக்கு காதுகுத்தி தங்கத்தினாலான கடுக்கன் அணியும் நிகழ்வே இது.

தமிழர் தம் கலாசாரத்தில் சிறப்பிடம் பெறும் இந்நிகழ்வு இப்பிரதேசத்தில் நடைபெற்றிருப்பதை இங்கு காணப்படும் "கடுக்கன் போட்ட மலை" என்னும் மலை காரணப்பெயரைக்கொண்டு அமைந்து காணப்படுகின்றது. இச்சடங்கு தற்காலம் நடைபெறுவதில்லை ஆனால் சில இளைஞர்கள் காதுகளில் கடுக்கன் போன்ற பொருட்களை அணிவதை காண்கின்றோம். இது எமது பாரம்பரிய கலாசாரத்தை வெளிக்காட்டுவதாக அமைகின்றது எனவும் கூறலாம்.

இவை மட்டுமல்லது மறைந்துவிட்ட வழிபாட்டுக்கலைகளில் நாயன்மார் அல்லது வதனமார் சடங்கு, மற்றும் வன்னித்தம்பிரான் அல்லது வன்னித்தெய்வ வழிபாடு இவை இரண்டையும் நாம் ஒருதரம் மீட்டுப்பார்க்கவேண்டிய கட்டாயம் உள்ளதால் அவை தொடர்பான விபரத்தை சுருக்கமாக தரலாம் என நினைக்கின்றேன்.

இவற்றில் ஒரு தெய்வீகக்கலையாக வன்னித்தெய்வம் அல்லது வன்னித்தம்பிரான் வழிபாட்டைக்குறிப்பிடலாம் இது கால்நடைகளின் விருத்திக்காகவும், விவசாயத்தொழிலை பாதுகாக்கும் நோக்கோடும் செய்யப்படும் வழிபாட்டு நிகழ்வே வன்னித்தெய்வ வழிபாடாகும். இவ் வழிபாட்டு நிகழ்வு வருடந்தோறும் பங்குனி மாதத்தினுள் முடிவடைந்து விடுவது வழக்கம். இதன் முறைமையை சற்று பார்ப்போமானால் முதலில் பொங்கல் பானை தயார் செய்யப்பட்டு அப்பானை நிறைய புது நெல் எடுப்பார்கள் வெய்யிலில் அந்த நெல்லைக்காயவைத்து மீண்டும் அதே பானையில் எடுத்து குடியிருக்கும் வளவின் எல்லைக்கு வெளியில் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார் செய்யப்பட்ட உரல், உலக்கை சுத்தம் செய்யப்பட்டு அந்த நெல்லை ஆண்களே குற்றுவார்கள். இவர்களே சுளகிலிட்டு புடைத்து உமி நீக்கி சுத்தமான அரிசியை பூசைக்குத் தயார்படுத்துவார்கள். இதனோடு பூசைக்கு வேண்டிய ஏனைய பொருட்களையும் தயார்படுத்தி பசும்பாலை பட்டியிலே கறந்தெடுத்து பூசை செய்யும் காட்டுப்பகுதிக்கு கொண்டு செல்வார்கள். இப்பூசை நடைபெறும் இடத்திற்கு பெண்களோ, சிறுவர்களோ செல்லக்கூடாது என்பது விதியாகும். அதனால் வளர்ந்த ஆண்கள் மாத்திரமே அங்கு செல்லமுடியும். இப் பூசையை எல்லோரும் நடாத்துவதில்லை அந்தந்த ஊர்களில் ஒருசிலர் இருப்பார்கள் அவர்களே இப்பூசையை செய்வார்கள். பொங்கல் இடுவதற்கு அடுப்புக்கற்களுக்குப் பதிலாக் பச்சை மரக்கட்டைகளையே உபயோகிப்பார்கள். பொங்கல் முடிந்ததும் சுவாமிக்கு பிரசாதத்தை தொட்டுப் படைக்கமாட்டார்கள். அதாவது மூன்று தடிகளை எடுத்து முக்காலி செய்து (இம்முக்காலி 02,03 அடி உயரம் கொண்டது) அம் முக்காலியில் பானையுடன் வைப்பார்கள் அவ்வாறு வைத்தே வன்னித்தெய்வ வழிபாடு நிகழ்த்தப்படுவது வழக்கமாகும் இது இப்பிரதேசத்தில் குறிப்பிட்டுக்கூறக்கூடிய வழிபாட்டுக்கலையாகும். தற்பொழுது இது அரிதாகவே நடைமுறைப்படுத்துகின்றார்கள். இதில் இன்னுமொரு விடயம் வன்னித்தெய்வம் என்பது காவல் தெய்வமாகவே கருதப்படுகின்றது.

மேலும் இப்பூசையில் தயாரிக்கப்படும் புனித தீர்த்தத்தை பயிர்ப் பாதுகாப்பிற்காக வயலில் விசிறுவார்கள், இப் பூசையை சங்கர்ப்பம் இட்டு நடாத்துபவர் தீர்த்தத்தைப் பெற்றுக்கொண்டு தனது வயலுக்குக்கொண்டுபோய் விசிறிவிட்டு காட்டுப்பகுதிக்குச் செல்வார். இவர் காடுகளில் உள்ள முசுற்றுக் கூடுகளை கலைத்துவிடுவார் இவ்வாறு செய்யும் அர்த்தமாவது தீர்த்தம் தெளிப்பதனால் வயலில் உள்ள பூச்சி புழுக்கள், பயிர் நோய்கள் அனைத்தும் இம் முசுறுகள் கலைவதைப்போல் கலைந்துவிடும் என்பது ஒருவகை ஐதீகம். காட்டுக்குச் சென்ற இவர் அன்று மாலை இருட்டானதும் வீட்டிற்கு வரல் வேண்டும். இது பொதுவான நடைமுறையாக இருந்துள்ளதை நம்மால் அறியமுடிகின்றது. மேற்படி இவ் வழிபாட்டுக்கலையம்சம் மறைந்து வருவதையிட்டு கலாசார விரும்பிகள் கவலையடைவதையும் காணக்கூடியதாக உள்ளது.

அடுத்து இப்பிரதேசத்தில் முற்றாக மறக்கப்பட்ட வழிபாட்டுக்கலைகளில் நாயன்மார் சடங்கும் ஒன்றாகும். இச்சடங்கு ஈச்சிலம்பற்றுக் கிராமத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடிய சடங்குமுறையென்று அறியமுடிகின்றது. அது மட்டுமல்லாமல் வெருகல் பிரதேச மக்களும் இதில் இணைந்து சிறப்பித்துள்ளதையும் பலரின் வாய்வழியாக அறிய முடிகின்றது. பலவகை சடங்குமுறைகள் காணப்பட்டாலும் இந் நாயன்மார் சடங்கு இப்பிரதேசத்தில் சிறப்புவாய்ந்த ஒன்றாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இச் சடங்கு வழிபாடு கால்நடைகளின் விருத்திக்கும், விவசாயத்தொழில் விருத்திக்கும் துணைபுரியும் என்ற நம்பிக்கையில் இது கொண்டாடப்படுகின்றது. இச் சடங்கின் பூசைகளைச் செய்பவர் பூசாரி என்றே அழைத்தனர். :இது மூன்று வருடத்திற்கு ஒருமுறை செய்யப்படும் ஒரு நிகழ்வாகும். இப் பூசையை செய்யும் பூசாரிகள் சம்பூரிலிருந்தே கொண்டு வருவது வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே உரிய பூசாரி அழைத்துவரப்பட்டு சடங்கு நடைபெறும் இடத்தில் சுவாமிக்கான குடிசை அமைத்து அதற்கான பந்தரும் அமைத்து இவைகளோடு நோன்புமாலும் அமைப்பார்கள் (மால் - குடிசை) சடங்கு ஆரம்பமாவதற்கு மூன்று நாட்களுக்கு முன் மக்கள்கூடி தம்பலகமம் சென்று அங்குள்ள ஆலயம் ஒன்றில் இதற்கென விசேடமாக உள்ள பெட்டகம் எடுத்துவரப்பட்டு நிகழ்வை ஆரம்பிப்பார்கள் இது பண்டுதொட்டுவரும் நடைமுறையாகும். இப் பெட்டகத்துள் பூசைப்பொருட்கள் சுவாமி சிலை குழல் தீபங்கள், விளக்குகள் போன்றன காணப்படும், இப்பொருட்களையே சடங்குக் காலங்களில் உபயோகப்படுத்துவது மரபுவழி முறைமையாகும். இப்பெட்டகம் தம்பலகமத்திலிருந்து கால்நடையாக சுமந்து வந்து ஈச்சிலம்பற்றுக்கிராமத்தை இரண்டு தொடக்கம் மூன்று நாட்களுக்குள் வந்தடைந்துவிடும். அமைக்கப்பட்ட நோன்பு மாலில் நான்குபேர் நோன்பிருப்பது வழக்கம். இந்த நான்கு பேரையும் ஊரிலுள்ள நடுத்தர வயதுடைய ஆண்களாகத் தெரிவு செய்து நோன்புமாலில் நோன்பு வைப்பார்கள்.

பூசைக்கான அரிசி, தயிர் ஏனைய அவிபாதங்கள் அனைத்தும் நோன்புமாலிலேயே தயார் செய்யப்படும். இச்சடங்கு காலத்தில் கால்நடை சொந்தக்காரர்கள் தமது பால் அனைத்தையும் நோன்பு மாலில் கொண்டுபோய் ஒப்படைத்தாக வேண்டும். அனைத்துப் பாலையும் தயிராக்கி பூசைக்கும், மக்களுக்கும் வழங்கவேண்டிய பொறுப்பு இந்த நோன்புமாலில் உள்ள நான்குபேரின் பொறுப்பாகும். நாயன்மார் சடங்கின் முதல் நாளே இதற்குவேண்டிய குழுமாடுகள் பிடிப்பதற்கு ஊரில் இருந்து பன்னிரண்டு இளந்தாரிமார்கள் (இளைஞர்கள்) தெரிவு செய்யப்படுவார்கள் இவர்களை குழுமாடு எனப்படும் காட்டெருமைகள் பிடித்து வருவதற்காக காட்டிற்கு அனுப்பும் நிகழ்வு நடைபெறும். காட்டிற்குச் செல்லும் பன்னிரண்டு இளைஞர்களுக்குமான உணவுகள் அனைத்தும் நோன்பு மாலிலிருந்தே தினமும் செல்வது வழக்கமாகும். இவர்களுக்கான உணவு உட்பட்ட அனைத்தையும் காட்டிற்கு கொண்டு செல்வதற்கு வேறு இரண்டு இளைஞர்கள் தயாராக இருப்பார்கள். பன்னிரண்டு பேரும் தலைக்கு ஒரு காட்டெருமை கொண்டுவருதல்வேண்டும் என்பது நியதி. சிலவேளைகளில் குறைந்தது ஆறுசரி கட்டாயம் பிடித்துவரல் வேண்டுமென்பது முறைமையாகும். சில வேளைகளில் மூன்று நாட்களிலும் பன்னிரண்டு எருமைகளும் பிடிக்கப்பட்ட வரலாறும் உண்டு. மாடுகள் பிடிக்கப்பட்டால் பிடிக்கப்பட்ட மாடுகளை மறைவிடத்தில் கட்டிவைத்துவிட்டு தலைப்பாகை அணிந்து கம்பீரத் தோற்றத்தோடு மாடுபிடித்த இளைஞர்கள் பூசைமால் நோக்கி வருவார்கள். இவர்கள் இவ்வாறு தலைப்பாகை அணிந்து வருவதைக்கண்டால் குழுமாடுகள் பிடிக்கப்பட்டுள்ளது என்பதை மக்கள் சுயமாக அறிந்துவிடுவார்கள். இக் குழுமாடுகளை பிடிப்பதற்கான கயிறு திரித்தலுக்கே பல நாட்கள் எடுக்குமாம். இக்கயிற்றை 'வெளுக்கயிறு' என்பார்கள். வெளுக்கயிறானது வேட்டையாடப்படும் மான், மரைகளின் தோலைப் பதப்படுத்தி அத்தோலினால் செய்யப்படும் கயிறாகும். மிகவும் பலம் வாய்ந்ததாகவும் இக்கயிறு காணப்படும். அனேகமாக பதினோராம் நாள் அனைத்து மாடுகளும் பிடிக்கப்பட்டுவிடுவது வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாயன்மார் சடங்கு பன்னிரண்டு நாட்கள் செய்யப்படல் வேண்டும். அதாவது இது வில்லைக்கணக்கில் நடைபெறுவதுதான் வழக்கம் கால்வில்லை (3 நாட்கள்) அரைவில்லை (6 நாட்கள்) முக்கால்வில்லை (09 நாட்கள்) முழுவில்லை (12 நாட்கள்) என்றவாறு பிரித்துச் செய்வார்கள். ஒரு நாளைக்கு 1000 வெற்றிலை, பாக்கு, பழம், பூவைத்து வழிபாடு நடத்துவார்கள். இச்சடங்கின் இறுதி நாளன்று இரவு வதனமார் ஆட்டம் இடம்பெற்று வதனமாராக ஒருவரும் யானையாக ஒருவரும் தங்களை பாவனை செய்து யானையை வீசிக் கயிற்றால் கட்டுவது போன்ற தீரச்செயலை வதனமார் செய்வார்கள் இக்காட்சி மக்களுக்கு நடித்துக்காட்டப்படுவது வழக்கமாகும். இந்த நிகழ்வோடு பதின்மூன்றாம்நாள் அதிகாலையில் சடங்கு இனிதே நிறைவுபெறும். இங்கு பிடிக்கப்பட்ட குழுமாடுகள் பூசாரிமார்களுக்கும், நோன்பாளர்களுக்கும், வாத்தியக்காரர்களுக்கும் (பறைமேளக்காரர்) ஆகியோருக்கும் வழங்கப்படுவது வழக்கமாகும்.

இப்பிரதேசத்தில் கால்நடைகள் அதிகமாக இருந்த காலம் மாடுகளை வளர்த்தோர் இங்கு செல்வமுடையோராகக் காணப்பட்டார்கள். தமது கால்நடைகளின் விருத்திக்காக இந் நாயன்மார் சடங்கு அக்காலத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டதை பெரியவர்கள் ஊடாக அறியமுடிகின்றது. இச்சடங்குகள் தொடர்பான விபரங்கள் தற்போது வாழ்ந்துவரும் முதியோர்கள் ஊடாக அறியப்பட்டவையே இவர்களின் அனுபவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களே இவை. இச்சடங்கு வேறு பிரதேசங்களில் கொண்டாடப்பட்டாலும் நடைமுறைகள் சற்று வேறுபடலாம். அவ்வாறு வேறுபடும் நடைமுறைகள்தான் இப் பிரதேசத்தின் சிறப்பான அம்சம் எனலாம். தற்போது ஐம்பது வயதிற்குட்பட்டோருக்கு இச் சடங்கு பற்றிய தகவல்கள் தெரியாதுள்ளது. இது தொடர்பான எழுத்தாவணங்கள் எதுவும் இங்கு இல்லை. எதிர்காலத்தில் இந் நாயன்மார் சடங்கை முன்னெடுக்கும் மக்களுக்கு இது ஒரு வழிகாட்டலாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

வெருகல் பிரதேச மக்களின் பண்பாட்டின் வெளிப்படைத்தன்மையை இப்பிரதேசத்தை தரிசிக்கின்ற போது நாம் காணலாம். நாகரீக வளர்ச்சிப்பாதையில் இவர்களும் காலடி எடுத்து வைப்பதால் இவர்களின் தனித்துவமான பண்பாட்டை இவை காவு கொள்ளாமல் பாதுகாக்கவேண்டியது சிந்தனைத் திறனுள்ள சமூகத்தின் கடமையாகும். கிராமங்கள் தோறும் ஆலயங்களின் தோற்றமும் தனித்துவமான மொழிநடை போன்றனவும், அதனை செம்மைப்படுத்தி அழகு பார்க்க வேண்டுமென்ற உணர்வும் மக்களிடம் காணப்படும் வரையில் வெருகல் பிரதேச பண்பாட்டு விழுமியங்களும் அதனோடு இணைந்த பாரம்பரியமான கலைகளும் உயிர் வாழும் என்பது உறுதி....!

**கவி அருவி.ப.மதிபாலசிங்கம்**
வட்டராம் - 04,
ஈச்சிலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கண்கெட்ட பின்பு.......

கொளுவியிருந்த மணிக்கூடு ஏழு மணி மணி முப்பது நிமிடம் என காட்டிக்கொண்டிருக்கிறது. கடந்த பத்து மாதங்களாகவே அந்த மணிக்கூடு அப்படியேதான் நிலையாய் நிற்கிறது. ஏழரை மணியில் நின்று போன கடிகாரம் எதையோ குறிப்பால் உணர்த்துவதற்காகத்தான் என்னத் தோன்றுகின்றது.

கடிகாரம் மட்டுமல்ல இந்த கொட்டிலில் வாழ்கின்ற இரண்டு ஜீவன்களின் வாழ்க்கையும் கூட ஸ்தம்பித்துத்தான் நிற்கிறது.

அந்த ஓடாத கடிகாரத்தில் என்னதான் இருக்கிறது....?

சிந்துஜா அவ்வப்போது அதைத்தான் உற்றுப்பார்த்தபடி இருக்கிறாள்

"அம்மா.. அம்மா" எனும் அவளது மகளின் அழைப்புக்களால் பிரம்மையிலிருந்து விடுபடுகின்ற சந்தர்ப்பங்கள்தான் அதிகமாயிருந்தது. ஏழரை என்பது மணிக்கணக்கா.. அல்லது அவளது வாழ்வில் பிடித்துள்ள சனிக் கணக்கா அல்லது சந்தர்ப்பக் கணக்கா என்பது விடையில்லாத சந்தேகந்தான்.

மதியம் தாண்டிருக்க வேண்டும் பசியின் அறிவிப்பாக அடிவயிற்றில் ஏற்படும் நோவு நேரத்தைக் கணிப்பிடுகிறது. வழமையாக நேரத்தினை அண்ணளவாக ஒப்பிக்கும் சூரியன் இரண்டு நாட்களாக விடுப்பு எடுத்திருந்தது.

நேற்று சிறு சிறு தூறலாகத் தொடங்கிய மழை இன்று வேகம் பிடித்திருக்கிறது. அதனால் சூரியக்கடிகாரமும்... கொழுவியிருந்த கடிகாரமும் பிரயோசனப்படவில்லை.

மழை வேகம் பிடிக்க முன்னர் சாப்பிடுவது நல்லது. மனதில் நினைத்துக் கொண்டு இரண்டு கோப்பைகளில் பச்சரிசிச் சோறும் கானாந்தி இலையும் மரவள்ளிக்கிழங்கும் சேர்த்து சமைத்த கறியையும் பறிமாறிக் கொண்டாள் சிந்துஜா.

நல்ல சோறு சாப்பிட்டது மறந்து போயிருந்தது. போன மாரிக்கு நட்டு வைச்ச மரவள்ளி அடிகளும் ஆங்காங்கே கிடைக்கும் இலை குழைகளுமே கறியாகப் பழகிப் போயிருந்தது.

கானாந்தி, முல்லை, முசுட்டை, முடக்கொத்தான், திராய் என நீண்ட பட்டியலாய்.. வயிற்றை நிரப்ப இயற்கை தந்த உணவுகள், இந்த இரண்டு உயிர்களையும் இன்றுவரை காப்பாற்றி வருகின்றது.

"மாது... வா பிள்ள... வந்து சாப்பிடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன்பாட்டில் மழை நீரில் கணிதம் படித்தபடி விளையாடிக்கொண்டிருந்தாள் குழந்தை

ஒண்டு..ரெண்டு... மூணு ஓலைக் கூரையிலிருந்து ஒழுகி விழுகின்ற மழைநீரைக் கைகளால் தட்டித்தட்டி எண்ணிக் கொண்டிருந்தாள் மாது என்கிற மாதங்கி. நான்கு வயதாகியும் இன்னும் பாலர் பள்ளிக்கு போகாமலேயே இருக்கிறாள்.

மற்றப் பிள்ளைகள் பாலர் பள்ளிக்குப் போகும் போது தானும் போக போக வேண்டுமென அவ்வப்போது அழுது அடம் பிடித்தாலும், அது முடியாத காரியமாகவே இருக்கிறது அவள் தாய் சிந்துஜாவிற்கு. "கடவுளே! என்ற பிள்ளயின்ற எதிர்காலம் என்னவாகும்..?"

குழந்தையின் எதிர்காலம் பற்றிய உணர்வுகள் அவளை அச்சுறுத்தின.

நெஞ்சிலே தீப்பந்தமொன்று கொழுந்துவிட்டு எரிந்து ஒவ்வொரு அங்கமாக எரிந்துக்கொண்டு பரவி வருவதைப் போன்ற வேதனை.

மொத்தமாக அக்கினி குண்டத்தின் நடுவே நிற்பது போன்ற தகிப்பு. வாணலியில் புழுவானவள் சிந்துஜா.

"என்ர முட்டாள் தனத்தால், பிள்ளையின்ர எதிர்காலமும் அழிஞ்சி கொண்டிருக்கே..." நொந்து கொள்வதைத் தவிர சிந்துஜாவால் வேறு எதையும் செய்ய முடியாமல்தான் உள்ளது.

ஆறுவரை சென்றதும் மீண்டும் ஒண்டு... ரெண்டு... என திரும்பவும் எண்ணிக் கொண்டிருந்தாள் மாது சட்டென வார்த்தைகள் வேகம் பிடிக்கின்றன.

ஆச்சரியக் குறிகளாக விழுந்து கொண்டிருந்த மழை நீர் தற்பொழுது மெல்லிய கோடாக உருமாறி தடித்த கயிறு போலாயிற்று

மாதுவின் விளையாட்டில் தரையெல்லாம் நீர்க்கோலம். "அந்தத் தாச்சிச் சட்டிய இழுத்துவை மகள்" அம்மாவின் அதட்டலில் சட்டியுடன் மழைநீர் சேகரிக்கத் தொடங்கினாள் குட்டி மாது

அது சிறிய மழையையும் தாக்குப்பிடிக்க முடியாத கொட்டில். கூரை வேய்ந்து மூன்று வருடங்கள் ஆகியிருக்கும் என்பதை ஆங்காங்கே தென்படும் சிறு சிறு ஒழுக்குகள் உறுதி செய்தன. "இந்த மாரிக்கு முதல் கூரைக்கு கிடுகு மாத்தனும்" மனதுக்குள் முனகிக் கொண்டாள் சிந்து. மாற்ற முடியாது என்பது நிதர்ஷனமாயிருந்தும் மனது வேண்டிக்கொண்டது.

காய்ச்சலால் சோர்ந்து படுத்திருந்த சிந்து இயலாமையினால் மாதுவிடம் வேலைகளை ஒப்படைத்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை அவளது விழிகளை மட்டுமின்றி, மனதையும் சேர்த்து ஈரமாக்கியது.

காதலனுடன் வீட்டைவிட்டு வெளியேறி, பெற்றோரால் வெறுக்கப்பட்டு, தற்போது ஒன்றரை வருடங்களாக கணவனாலும் ஏமாற்றப்பட்ட நிலையில் இவளது வாழ்வு, சூறாவளிற்றில் சிக்கிய தூக்கணாங் குருவிக் கூடு போலாயிற்று

நாளை என்பது கரும் பூதமாக.. கோரப்பற்களும், பத்துக் கரங்களும் கொண்டு கடித்துக் குதற வருவதைப் போன்று அச்சமூட்டியது.

அப்போது சிந்துஜாவிற்கு பதின்மூன்று வயது தனித்து பாடசாலைக்கு அனுப்புவதற்கே பெற்றோர்கள் அஞ்சும் வயசு. காதல் என்பதன் அட்சரங்கள் கூடத் தெரியாத வயது! ரீன் ஏஜ் வயதினுடைய மாற்றங்கள்.. உடலில் ஊற்றெடுக்கும் கோமோன்களின் சித்து விளையாட்டு மட்டுமே!

"அது காதலுமில்லை கத்தரிக்காயுமில்லை..." இதைப்புரிந்து கொள்ள அறுபது மாதங்கள் தேவையாயிருந்தது, சிந்துவிற்கு. ஆசை வார்த்தைகள்....! மானத்தை சூறையாடுவதற்காகவே யாருக்கும் தெரியாமல் தரப்பட்ட பரிசுப் பொருட்கள்...! எல்லாம் சேர்ந்து அவளது வாழ்க்கை முள்ளில் விழுந்த வாழை இலை போலானது.

காதலுடன் ஓடிப்போய் ஒரு வருடம் கூட ஆகவில்லை, கையில் பெண் குழந்தை. ஒரு குழந்தையின் கையில் இன்னொரு குழந்தை...! பெற்றெடுத்த குழந்தை.....!!!

காதல் என்பதெல்லாம் வெறும் மாயை என்பது, அவளது காதலன் கைவிட்டுச் சென்ற பின்புதான் வெளிச்சமாயிற்று.

பதினெட்டு வயதுவரை படிப்பதில் மட்டும்தான் கவனஞ் செலுத்த வேண்டும்... என்ற பொருள்பட பாடசாலை அதிபர் அடிக்கடி அனைத்து மாணவர்களிடமும் சொல்வதெல்லாம் அன்று புரியாமல் போனதை எண்ணி... சிந்துவால் அழ மட்டும்தான் முடிகிறது.

கஸ்டம் வரும்போதெல்லாம் கண்முன்னே அம்மாவின் விம்பங்கள் மட்டுமே நிழலாடும். அம்மாவோடு இருந்த அந்த நாட்கள் நினைவுக்கு வரும்போதெல்லாம் ஓ... வென அழுவாள்.

"சிந்துஜா.... சிந்துஜா..." என நாளெல்லாம் அழைத்துக் கொண்டே இருப்பாள் அம்மா.

"என்னம்மா..." என பக்கத்தில் வந்தால்..

பிள்ளை... சாப்பிட்டியா, தேத்தண்ணி குடிச்சியா.. பிள்ள அந்த அடுக்குச் சட்டிக்குள்ள மாம்பழம் இருக்கு... என பிள்ளை... பிள்ளை என பிள்ளைப் புராணம் பாடிக் கொண்டேயிருப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துஜா பெற்றோருக்கு ஒரே பிள்ளை. இரண்டாயிரத்து ஆறில் மாவிலாறு பிரச்சினையால் தந்தை தொலைந்து போனபோது சிந்துஜாவுக்கு எட்டு வயது. நட்டநடு இரவில் வீட்டை விட்டு வெளியேறுகையில் ஒரு கையில் பெட்டியும், மறு கையில் சிந்துஜாவையும் பிடித்துக் கொண்டு சிந்துஜாவின் அம்மா ஓட்டமும் நடையுமாக வாகரை பள்ளிக்குச் சென்றது வரை மகிழ்ச்சியாக இருந்த நாட்கள்...

அதன் பின்னர் மகிழ்ச்சி என்பது இறந்த காலமாகவே இருக்கிறது வீட்டை விட்டு இடம் பெயர்ந்ததுடன் மகிழ்ச்சியும் இடம் பெயர்ந்திருந்தது. நிம்மதி தொலைதூரம் பயணித்திருந்தது. அப்பா தொலைந்தே போயிருந்தார்.

அன்று சிந்துஜாவின் பிறந்தநாள் வைகாசி மாதம் இரண்டாம் திகதி. "வடை சுட்டுத்தாறன் பிள்ள பெரியம்மாவிற்கும் கொடுத்துட்டுவா...." அம்மா தன்பங்கிற்கு பிறந்த நாள் பலகாரம் செய்து கொண்டிருந்தாள்.

"என்னம்மா.... அப்பா சட்ட வாங்கி வாரனெண்டு சேருவில போனவர் இன்னும் வரல்ல" சிணுங்கினாள் சிந்துஜா தோழிகளிடம் தன் பிறந்த நாளைக்கு தந்தை புதுசட்டை வாங்கித் தந்ததாக ஏற்கனவே பெருமையாகச் சொல்லியிருந்தாள் சிந்து.

சிணுங்கல் முடியும்முன்னே வெளியே ஆரவாரம் ... "கிபீர் அடிச்சு மலை நீலி அம்மன் கோயிலெல்லாம் பத்திற்றுதாம்..." பக்கத்து வீட்டு பாக்கியமக்கா சொன்னபோது அம்மாவின் பதட்டம் குழந்தை சிந்துஜாவையும் பற்றிக் கொண்டது. கணவன் பற்றிய அச்சம்.. வெளியே ஆங்காங்கே கேட்கும் குண்டு போடும் ஒலி.... பீதியை மேலும் பெருக்கியது.

வடைக்கு குழைத்த மா போட்டபடி கிடக்க... பதினொரு மணி வரை கணவனின் வருகைக்காக காத்திருந்து... காத்திருந்து ஏமாந்து பதினொன்று முப்பது மணியளவில் அயலவர்களுடன் வெளியேறிய நிமிடத்திலிருந்து.... வாழ்க்கையிலிருந்த பிடிகளெல்லாம் ஒவ்வொன்றாய் காணாமல் போகத்தொடங்கின.

அதன்பின் அப்பா..... வீடு திரும்பவேயில்லை..... இன்றுவரை!

ஒன்றரை வருட அகதிமுகாம் வாழ்க்கை படிப்பிற்கு பாதி விடை கொடுத்திருந்தது. அதன் பின்னர் மீள்குடியேற்றம் என்ற பெயரில் தகரக் கொட்டிலில் ஒரு புது வாழ்வு. பெரும்பாலான கிராம மக்களின் வாழ்வு தடம் பிரண்டு போனது. கண்ணீரும், கம்பலையுமான வாழ்வென்று நடைமுறைக்கு வந்திருந்தது.
"சிந்து... ஏய் சிந்து..." பழைய நினைவுகளைக் கலைத்தது நண்பியின் அழைப்பு

"யாரது... சரோ வா?", என சிந்து வினவும் போதே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரோக்கா.... சரோக்கா...." என மாதுவின் கைதட்டல் அதை உறுதிப்படுத்தியது. பாடசாலைச் சீருடையில் உள்ளே நுழைந்து, சிந்துவின் பக்கத்தில் இருந்தாள் சரோ....
"என்னடி... படத்துக்கிடக்குற.... காச்சலோ", என நெற்றியை தொட்டுப்பார்த்தாள்.

சரோவும், சிந்துவும் ஒன்பதாம் வகுப்புவரை ஒன்றாய் படித்தவர்கள்.

சண்பகா மகா வித்தியாலய மைதானத்தில் புளியங்காய், மாங்காய், நாவற்பழம் என சண்டைபோட்டு பங்கிட்டு சாப்பிட்ட கணங்கள் சரோவைக் காணும் போதெல்லாம் மின்னலடிக்கும்.

கடந்த வருடம் உயர்தரப்பரீட்சை எழுதி பாஸ் பண்ணியிருந்தாள் சரோ. இந்த முறை பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமென உறுதியுடன் இரண்டாந் தடவையாக பரீட்சை எழுதிவிட்டு வந்திருக்கிறாள்.

சரோவுடன் படித்த சிந்து, நான்கு வயது குழந்தையுடன் வாழ்வுடன் போராடிக் கொண்டிருக்க சரோ இன்றும் படித்துக்கொண்டிருக்கிறாள். ஆச்சரியமான விடயந்தான், ஆனாலும் இதுவும் இங்கு பழகிப்போயிருக்கிறது.

சிந்துவைப் போன்றே பலர் புரியாத வயதிலேயே வாழ்வைப் பறிகொடுத்து வாழ்வை புரிகின்ற வயதில் வாழ்வைத் தேடுகின்றனர், சமுத்திரத்தில் தொலைத்த குண்டூசி போல....!

சிந்து ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் போது பதின்மூன்று வயதில்.... மூன்று வீடு தள்ளியிருந்த பதினேழு வயதான கிருஷ்ணகுமாரிடம் நட்பாயிருந்தாள். அவன் நல்ல நிறமாயிருந்தான்... சிரித்து சிரித்துப் பேசினான்.... அவளுக்கும் பிடித்திருந்தது.
"பிள்ளை... அந்த குமார் அவ்வளவு நல்லவனல்ல, உனக்கு அவனோட கதை வேண்டாம்." அம்மாவின் அறிவுரைகள்.. பாகற்காயாகத்தான் கசத்தது. ஆனால் அதன் மகத்துவம் அன்று புரியாமல் போனதில் இன்று வாழ்வே புதிராகப் போனது.

இனிப்பான சொக்கலேடினை விட கசப்பான பாகற்காய் வாழ்விற்கு சிறப்பானதென்பது நீரழிவு வந்தபின்தான் புரிகிறது.

"ஏய்... லூசு... உனக்கென்ன பயித்தியமா, இப்ப என்னடி காதல்...? முதல்ல படி..... குமார் சரியான குடிகாரன் வேற... அதுவும் கசிப்பு...."

நண்பி சரோவின் அறிவுரைகளால், அவளைப் பார்க்கும் போது சில வேளைகளில் எரிச்சல் படுவாள் சிந்து.

எல்லா அறிவுரைகளும் கசப்பாகத்தான் இருந்தது. காமம், கண்களை மறைக்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் அறிவுரைகளையெல்லாம் உதறிவிட்டு, குமாருடன் ஓடிப்போகத் தீர்மானித்தாள் சிந்து.

கணவனை இழந்த நிலையில், மூன்று வேளை வயிற்றுப்பாட்டுக்கான போராட்டத்தில் மகளின் மீதான பார்வை பிசகிப் போனது. விளைவு அவள்.... செல்ல மகளின் வாழ்வு செல்லாக் காசாய் போயிருந்தது.

தலைமீது மண்ணைவாரி கொட்டிக் கொண்டு ஒப்பாரி வைத்து தன் மகளின் எதிர்காலத்தை எண்ணி நிலைகுலைந்து போனவளை

உன் மகள் அந்த கிருஷ்ணகுமாரோடு ஓடிப்போய் விட்டாள்... என்ற செய்தி, உயிருள்ள பிணமாக்கி விட்டிருந்தது.

தொலைந்து போன கணவனின் இழப்பில் பாதியாய் சிதைந்து போனவள்... மகளின் முடிவால் முழுதாய் தொலைந்து போனாள்.

தாயின் மரணம் சிந்துவின் வாழ்வில் பேரிழப்பானது.

அறிமுகமற்றவர்கள் போன்று உறவினர்கள் கடந்து போனார்கள். சிந்து கர்ப்பிணியாக சிரமப்பட்டு தத்தளித்தபோது குமாரும் காணாமற் போனான்.

"கட்டைபறிச்சானில் திருமணம் செய்து இருக்கிறான் குமாரு..." கைக் குழந்தையுடன் கஸ்டத்திலிருக்கும் போது யாரோ சொன்னார்கள்.

தனது கணவன் வேறு திருமணம் செய்த செய்தி சிந்துவைப் பெரிதாகப் பாதித்ததாகத் தெரியவில்லை மூக்கிற்கு மேலே வெள்ளம் பாய்கின்ற நிலையில்... கண் போனாலென்ன... தலை போனாலென்ன?

சட்டப்படி திருமணம் செய்ய பதினெட்டு வயது தேவை என்பதால், சட்டப்படி திருமணமுமின்றி எந்த ஆதாரமும்... ஆதரவுமின்றி தாய் வீட்டுச் சீதனமான இந்த கொட்டிலே கதி என்றிருக்கிறாள்.

சமுர்திக்காசு... ஒருவாரம் ... ஒரு வேளைச் சாப்பாட்டிற்கே போதாமலிருந்தது.

அப்பாவின் உழைப்பினால் கிடைத்திருந்த ஒரு ஏக்கர் வயலையும் வயிற்றுப்பாட்டிற்காகவே விற்றாயிற்று. வேல்ட் விஷன் உதவியால் கிடைத்த பசுதான் தற்போது அவளது கற்பகத்தரு.

"என்னடி கடும் யோசனை..." குழந்தை மாதுவுடன் விளையாடிக் கொண்டிருந்த சரோ நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

"எப்... எப்படி? நல்லமா.....?" சயிங்கமாக இழுபட்டன வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரீட்சை எப்படி.....? இம்முறை கம்பஸிற்குப் போறதானே....?"

இந்தமுறை கட்டாயம் கம்பஸிக்கு போவேன் சரோவின் பதிலில் உறுதி தெரிந்தது.

"அக்கா... என்னையும் கூட்டிப் போவியா..." ஆர்வமாகக் கேட்டாள் மாது
"மாதுக்குட்டி இல்லாமலா...." சிரித்தபடி மாதுவை கட்டி அணைத்தபடி ... கடைக்கண்ணால் சிந்துவைப் பார்த்தாள் சரோ.

"என்னை விட நீதானேடி கெட்டிக்காரி..." சரோவின் பார்வையில் பச்சாதாபம் தென்பட்டது.

இருவரின் பார்வையும் சந்தித்துக்கொண்டதில் பரஸ்பரம் புரிதல்களும்.... அதன் வெளிப்பாடான இயலாமையின் தோற்றப்பாடும்.... நீண்ட மூச்சாக வெளிப்பட்டது.

'கடந்த ஐந்து வருடங்களாக காணாமல் போன இளமையும்... சந்தோசமும்... அனுபவித்த துன்பங்களும், சோதனைகளும்... எனது முட்டாள்தனமான முடிவினால்தானே....' என்கிற செய்தியை சிந்துவின் பார்வை வெளிப்படுத்தியது.

சரோவின் கைகளைப் பற்றிக் கொண்ட சிந்துவின் கைகளில் மெல்லிய நடுக்கம்.

"சிந்து...." சரோவின் குரலில் காணப்பட்ட பரிவு, விழிகளில் நீராய் துளிர்த்தது.

"எல்லாம் சரிவரும்.... கவலைப்படாதே....." சரோவின் வார்த்தைகளில் காணப்பட்ட அன்பும், ஆதரவும்.... மறைந்து போன தாயின் பாசத்தை நினைவூட்ட.... விழிகளைத் துடைத்துக் கொண்டாள் சிந்து.

"வாறன்..... சிந்து, ஏய்... மாதுக்குட்டி.... அக்கா நாளைக்கு வாறன்....."

குழந்தையை அணைத்து.... முத்தமிட்டு நடந்து செல்லும் சரோவை இமை மூடாமல் பார்த்தபடியிருந்தாள் சிந்து.

தனது தவறுகளின் வலி நெருஞ்சிமுள்ளாள் நெஞ்சில் குத்தியது.

நானும் படிச்சிருக்கலாம்.....
சரோவைப் பார்த்து ஏங்கியது மனது,
தன்னைத்தானே தொந்து கொண்டாள் சிந்து. சூரியனை நோக்கி உயர உயர பறந்து இறக்கைகளை சுட்டுக் கொண்ட சிட்டுக் குருவியாய்.

ஆக்கம்

த. ஆதினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலிகை மகத்துவம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று பாடிய ஒளவைப் பிராட்டியை அறியாதோர் இல்லை. அறநெறி அருளிய அவர் அருமருந்துகள் சிலவற்றையும் எமக்கு அளித்துள்ளார்.

அக்காலத்தில் தமிழர் பண்பாட்டு சித்த வைத்திய மருத்துவ முறை ஒன்றைப் பற்றி "வாக்குண்டாம்" என்ற பாடலை எமக்கு அளித்துள்ளார். சித்த மருத்துவ தொன்மை மிக மிக பழமை வாய்ந்த மகத்துவ வைத்தியம் ஆகும். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நோக்கில் அருளிய அவர் தம் உயரிய நோக்கத்தைப் பார்த்தால் நலமுடன் வாழலாம் என்பதே பொருளாகும்.

சித்தர்கள் மூலம் பேணப்பட்டு வந்ததால் இதை சித்த வைத்தியம் என அழைக்கின்றோம். இவற்றில் சில சௌகரியங்கள் (நன்மை) உள்ளன.

1. **பக்க விளைவுகள் இல்லாமை.**
2. **மூலிகைகளே மூலப்பொருளாகும்.**
3. **இலகுவானது, எளிதானது, பாதுகாப்பானது.**
4. **வாதம், பித்தம், சிலேப்பனம் ஆகிய மூன்று உடல்நிலைகளைக் கொண்டே நோய் குணங்குறிகளை அறிந்து கொள்ளலாம்.**
5. **விஷவைத்தியம், முறிவு வைத்தியம், வாதநிவாரிணி போன்ற சில வைத்திய முறைகளைக் கொண்டது.**

**எனவே ஒவ்வொரு மூலிகையின் சிறந்த பண்புகளையும் நோக்குவோம்.**

**01. துளசி :-**

இது 64 நோய்களைக் குணமாக்கும் சக்தி பெற்றது. இது கருந்துளசி, வெண்துளசி என இரண்டுவகைப்படும். கருந்துளசியின் சாற்றைப் பிழிந்து ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் நெஞ்சில் உள்ள சளி அற்றுப் போகும்.

**02. குப்பைமேனி :-**

குப்பைமேனி இலைச்சாறும் உப்பையும் அரைத்து சொறி, சிரங்கு உள்ள இடத்தில் பூசுதல் மிகவும் நல்லது.

**03. வல்லாரை :-**

இதனை சம்பல், பச்சடி போட்டு சாப்பிட்டால் சரீர எரிவு, கீழ்வலி, வீக்கம், சிறுநீர் மஞ்சல் நிறமாக வெளியேறல் முதலிய நோய்கள் நீங்கும். அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையை பச்சையாக வாயில் போட்டு மென்று சப்பிட்டு வர குடல்புண், குடல் நோவு, தலைநோவு, வாய்ப்புண், வாய் நாற்றம் குணமாகும்.

**04. பொன்னாங்காணி :-**

கீரையை வெள்ளைப்பூண்டு சேர்த்து சமைத்து உண்டால் மூல நோய் தீரும். அத்தோடு பொன்னாங்காணிச்சாறும் பசும் பாலும் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் உடல் சூடு, வெள்ளைபடுதல், வயிற்றுப்புண் நீங்கும்.

**05. வெள்ளைப்பூண்டு :-**

கடுகு எண்ணையுடன் கலந்து காய்ச்சி உள்ளி, மிளகு, கையான் தகரை ஆகிய மூன்றையும் சமபங்கு சேர்த்து அரைத்து உண்டால் வயிற்று உப்பிசம் தீரும். இதை கட்டிகள் உள்ள இடத்தில் போட கட்டி கரையும்.

**06. நெல்லி :-**

நெல்லிச்சாறு காமாலை, இருதய நோய், அதிக உமிழ்நீர் சுரப்பி, வாந்தி, மலச்சிக்கல், தலைச்சுற்று முதலிய நோய்களைத் தீர்க்கும். நெல்லிக்காயை அரைத்து அடி வயிற்றில் வெளிப்பூச்சுக்கு பூச சலப்பையில் ஏற்படும் அலற்சி நீங்கும்.

**07. ஆடாதோடை :-**

உடலில் சென்று வெப்பத்தன்மையாக மாறி சுவாசக் குழாய்களில் உள்ள சளியை இளகப்பண்ணி வெளியேற்றும். அத்தோடு சுவாசக்குழாய்களையும், இரத்த நாளங்களையும் விரிவடையச் செய்யும். அஸ்மா (இழுப்பு) மற்றும் மூச்சுக் திணறல் ஏற்படுவதை தவிர்க்கும்.

**08. வேம்பு :-**

வேப்பம் பருப்பை சுடுநீரில் அரைத்து உட்கொள்ள கொடுத்து நெற்றியிலும் பூசினால் மூளைக்காய்ச்சல் தலைவலி என்பன நீங்கும் அத்தோடு வேப்பம் பட்டையினை இடித்து தூள் செய்து பசும் பாலில் சேர்த்து காலை, மாலை குடித்துவர மலக்கட்டு, மூலச்சூடு, குன்ம வயிற்றுவலி நீங்கும் அம்மை நோய்க்கும் வேப்பம் துளிரை அரைத்து பூசுதல் வேண்டும்.

**09. மாதுளை :-**

இச்சாற்றைக் குடிப்பதால் வாந்தி, வாய்நீர்ச்சுரப்பு, கசப்பு, வாந்தி, விக்கல், நெஞ்செரிவு, காதடைப்பு, நீங்காத மயக்கம் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. முடிதும்பை :-**

இதனை தூளாக அரைத்து சுடுநீரில் கலந்து நெற்றியில் பூச தலைவலி நீங்கும்.

**11. தயிர்விளா :-**

இச் சாற்றுடன் வேப்பெண்ணையைக் கலந்து சூடாக்கி காதில் துளி விட்டால் காதுக்குத்து வலி நீங்கும்.

**12. தேங்காயப்பூக்கீரை :-**

தேங்காய்ப்பூக்கீரையை அவித்து குடித்தால் சலஅடைப்பு, சல எரிவு நீங்கும்.

**13. நத்தைச்சூரி :-**

நத்தைச்சூரி இலையையும், வேலிப்பருத்தி இலையையும் தேங்காய்பூவும் சேர்த்து இடித்து ஒத்தடம் போட்டால் மொழி வாதம் நீங்கும்.

**14. நறுவிளி :-**

நறுவிப்பட்டையை இடித்துச்சாறு பிழிந்து தேங்காய் பாலுடன் கலந்து குடித்தால் வயிற்றுவலி நீங்கும்.

**15. கிராம்பை :-**

கிராம்பை நீர் விட்டு மை போல் அரைத்து நெற்றியிலும், மூக்குத்தன்டின் மீதும் பற்றிட தலைப்பாரம் நீங்கும்.

**16. காட்டாமணக்கு :-**

இரத்தம் வெளிப்பட்ட இடத்தில் கட்டாமணக்கு பாலைப்பூச குருதி நிற்கும் காயமும் ஆறும்.

**17. உப்பிலாங்கொடி :-**

குழந்தைகளுக்கு வயிறு உப்பிக் காணப்பட்டால் உப்பிலாங் கொடியை அரை ஞானில் கட்ட வேண்டும்.

**18. அறுகம்புல் :-**

அறுகம்புல்லையும் மஞ்சளும் சேர்த்து அரைத்து படர்தாமரை உள்ள இடத்தில் பூசிவர மறைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. அகத்தி :-**

அகத்தி இலையை உணவில் சேர்த்து வர வாய் அவிதல் நீங்கும், கண் குளிர்ச்சி பெறும், மலம் இளகிப் போகும், சீறுநீர் நன்றாக கழியும், நீரடைப்பு நீங்கும், பித்த மயக்கம் தீரும்.

**20. கீழ்காய் நெல்லி :-**

தேமல் உள்ள இடத்தில் கீழ்காய் நெல்லி இலை, கொத்தமல்லி, பாலுடன் சேர்த்து அரைத்தும் பூசுதல் வேண்டும். அல்லது வெள்ளைப்பூண்டை வெற்றிலையுடன் சேர்த்து அரைத்து பூசுதல் வேண்டும்.

**21. கண்டங்கத்தரி :-**

இம் மூலிகையின் இலைச்சாற்றை குடி நீரில் இட்டு அருந்தி வந்தால் தலைவலி வாதம், அக்குல் நாற்றம் முதலிய நோய்கள் தீரும்.

**22. மருதாணி :-**

இவ்வேரின் பட்டையையும் மஞ்சளும் வைத்து அரைத்து காலில் ஆணி உள்ள இடத்தில் படும்படி கட்டி வந்தால் குணம் கிடைக்கும்.

**23. எருக்கன் மூலிகை :-**

எருக்கன் பட்டை வாதநோய், மேகவாயுப்பிடிப்பு, காய்ச்சல் புண்கள் தீரும். பூ நீர் பினிசம், சுவாசகாசம், கழுத்துநரம்புகளில் ஏற்படும் பிடிப்பு நீங்கும் இலை குதிவாதம், கீழ் வீக்கம், மலக்கட்டு என்பன தீரும்.

**24. திருநீற்றுப்பச்சிலை :-**

இம் மூலிகையின் சமுலத்தை எடுத்து இடித்து ஒரு சட்டியில் இட்டு அத்துடன் சுக்கு, மிளகு, சீரகம், சிறிது தட்டி அதனுள் போட்டு தண்ணீர் விட்டு காய்ச்சி காலை, மாலை, குடித்து வந்தால் சீதனசுரம், சளி இழுப்பு, சளி வாந்தி, இரத்தவாந்தி குணமாகும்.

**25. வசம்பு :-**

நீர்க்கோளை, இருமல், சளி, விக்கல், வாந்தி, மூச்சுத்திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்களுக்கு வசம்புக்கரியை தேனுடன் குழைத்து சாப்பிட்டால் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26. செம்பரத்தை :-**

இந்தப் பூவைப் பச்சடியாகவோ, சுண்டலாகவோ, சாப்பிட்டு வந்தால் கணைச்சூடு, எலும்புருக்கு, இருதயத்துடிப்பு, உடல் எரிவு, இருமல், நீர்க்கடுப்பு, கால் வீக்கம் போன்ற நோய்கள் தீரும்.

**27. இலுப்பை :-**

இலுப்பெண்ணையை கரப்பான் கடி, சிரங்கு, விரணம், இடுப்புவலி, வாதம் போன்றவற்றில் பூசி வந்தால் குணமாகும் .

**28. வெங்காயம் :-**

வெங்காயத்தை அரைத்து கால் பாதங்களில் தேய்த்தால் ஒற்றைத்தலைவலி நீங்கும் ஒற்றைத் தலைவலி இருந்தால் எதிர்ப்பக்கமுள்ள மூக்கினுள் வெங்காயத்தின் சாற்றை சில சொட்டுக்கள் விட வேண்டும்.

**29. தவசிமுருங்கை :-**

இவ் இலையை சுத்தமாக எடுத்து அரைத்து பூனை, எலி, நாய் கடித்த இடத்தில் வைத்துக்கட்டடினால் விஷம் நீங்கி நோய் குணமாகும்.

**30. வில்வம் :-**

வில்வ இலை கசாயத்தில் திரிகடுகு ஆரணம் கலந்து உட்கொண்டால் வீக்கம் தணியும், மலக்கட்டு, மூலநோய், காமாலை போன்ற நோய்கள் குணமடையும்.

**உச்சாத்துணை நூல் :- மூலிகை மகத்துவம் - மூலிகை வேந்தன் இ.கலைவாணன், மட்டக்களப்பு.**

**கோணலிங்கம் ஜதுஷியா**
தரம் - 10
தி/மூ/இலங்கைத்துறை முகத்துவாரம்
இந்துக்கல்லூரி,
ஈச்சிலம்பற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்தவர்கள்

காலம் தன் சீற்றமதில்
கடல்தாய் கோபம் கொண்டு
தன்னிலை மறந்து
தடம் புரண்ட பேரலையால்
உறவுகளைப் பிரிந்து
உடமைகள் தானிழந்து
நிற்கதியாய் நின்ற மக்கள்
நிலைதளரா தடம் பதித்து
இழப்புதனை சீர் செய்ய
இசைந்தார்கள் துணிவு கொண்டு

பாதிப்புகளே இனியில்லை
பசுமை பொங்கும் தேசமெங்கும்
என்று எண்ணிய மறுகணமே
ஏமாற்றம் தருவது போல்
காலமதன் கோரப்பார்வை
கலைமாறி வீசியதால்
வன்செயல் என்றதொரு
வண்மையிருள் சூழ்ந்துவந்து
ஏற்படுத்திய இழப்புகளோ !
எண்ணில் அடங்கவில்லை

இழப்புகள் வந்த போதும்
இருள் தனில் மூழ்கிடாமல்
வருகின்ற காலமதை
வளமுடன் எதிர்கொள்ள
இரவு பகல் பாராது - என்றும்
இரட்டிப்பாய் உழைப்தனை
உயர் நோக்கம் கொண்டு
உயர்த்திட்டார் தம் தேசமதை

வளம் தனை வளமாக்கி
வளம் படைத்த தேசமதில்
வேளாண்மை முதற் கொண்டு
வேறு சிலர் மீன்பிடியும்
காலத்திற்கு ஏற்ற பயிர்
சேனையுடன் தோட்டமதை
திறம்படச் செய்திங்கு
தினம் தோறும் செலவினத்தை
தொழில் கொண்டு ஈடு செய்ய
தொழிலிணையாய் கால்நடைகள்
துணை நிற்கும் தேசமிது

இடர்களே வடிவெடுத்து
இறங்கி வந்த போதும்
சோதனைகள் பல கண்டும்
சோர்வின்றி எம் மக்கள்
உழைப்புதனை உரமாக்கி
உழைப்பாளி என்றழைக்க
வியர்வைதனை நிலத்தில் சிந்தி
வென்றார்கள் காலமதை

ஆக்கியோன் :- ஏ.கிருபாகரன்
பூமரத்தடிச்சேனை,
ஈச்சிலம்பற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலும் வாழ்வும்

வெருகல் பிரதேசம் முழுவதையும் ஐவகை நிலங்களும் அழகு செய்தாலும் வயலும் வாழ்வுமே இப்பிரதேசத்தின் ஆணிவேராகிறது. மக்கள் தொகை மிகக்குறைவாக காணப்பட்ட ஆரம்ப காலத்தில் வயல்களே எம்முன்னோரின் வாழ்விடங்களாக இருந்தன. வழிபாடும் களியாட்டங்களும்கூட வயல்களாகவே இருந்திருக்கின்றன.

குளக்கோட்டு மகாராசாவின் பரிபாலனத்தில் வயல்களை விளைவித்து ஆதி கோணேசருக்கு அமுதளிக்க அவண அளவுகளில் அரிசி வழங்கியவர்கள் வாழ்ந்த பூமி இந்த ஈச்சிலம்பற்று.

அப்போது மரபுமுறைக்குளங்களும் அதனை அண்டியதாக வயல்வெளிகளும் ஆக்கப்பட்டன.

**இலங்கைத்துறையின் 7 குளங்கள்**

- ★ பனிச்சயடிக்கட்டுக்குளம்
- ★ ஓட்டங்கட்டுக்குளம்
- ★ தரசேனைக்குளம்
- ★ கிரான்குளம்
- ★ கொல்லன்குளம்
- ★ சின்னக்குளம்
- ★ சுங்கான் குழி
- ★ பனிச்சயடிக்கட்டு வெளி
- ★ ஓட்டு வெளி
- ★ சாளம்புக்குடா
- ★ மாப்பத்தவெளி
- ★ குருக்கள்வெளி
- ★ கலன்குட்டிக்கல்
- ★ கிரான்குளத்து வெளி
- ★ வேடமாவரை
- ★ குளத்துவெளி
- ★ கட்டையாற்றுவெளி
- ★ சந்தளிவெளி
- ★ நரியவெட்டவன்வெளி
- ★ முள்ளியோடைவெளி
- ★ மாமரத்தடிக்கண்டம்
- ★ கொல்லன்குளத்துவெளி
- ★ கிளிசியாக்கண்டம்
- ★ பூநகர் கண்டம்
- ★ உடப்புக்கேணி

என்பன அப்போது அமைத்த குளங்களும் வயல் வெளிகளும் ஆகும். உற்பத்தியில் தன்னிறைவு காணப்பட்டது அனாலும் தொடர்ச்சியாக பாசனம் செய்யும் அளவுக்கு நீரேந்து பகுதிகளை கொண்டிருக்கும் குளங்கள் என்பதாலும் தொடர்ந்து குளத்திற்கான நீர்ப்பெறுகை இல்லை என்பதாலும் இக் குளத்தினை அகலப்படுத்தி விஸ்தரிப்பு செய்வது உசிதமாகாது எனக்கருதி எந்தெந்த அளவில் அவை அமைக்கப்பட்டதோ அந்தந்த அளவில் அவற்றை தொடர்ந்து பேணுவது என்றே அப்போது முடிவு செய்யப்பட்டிருக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின்னர் இக் குளங்களில் அனேகமானவை கைவிடப்பட்ட குளங்களாகிவிட்டன. இதன் பொருட்டே கந்தளாய் குளக்கட்டுப்பற்று கொட்டியாபுரப்பற்று எனும் பழம்பதிகளில் வயல்வெளிகள் உருவானதாக கூறுவர்.

ஆரம்ப காலத்தில் குளத்துப்பாசனம் மூலம் செய்கைபண்ணப்பட்டு வந்த காலபோகம் அதிக பலனை தரவில்லை. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படத்தொடங்கியது. இதனால் மழையை நம்பிய பெரும்போகச்செய்கை அதிகரிக்கலாகியது. ஆனாலும் வானை நம்பிய செய்கையும் பலதடவைகள் பலன் தரவில்லை. சிவனொளிபாதத்தின் உச்சியில் ஊற்றெடுத்து பாயும் மகாநதியாகிய மகாவலி கங்கை அங்கிருந்து புறப்பட்டு சீறிப்பாய்தோடி வந்து வங்கக்கடல் புகுந்து ஆறுதல் அடையும் இடங்களில் ஈச்சிலம்பற்றும் ஒன்று கார்கால மழையெல்லாம் காட்டாற்று வெள்ளமாகி கரைபுரண்டு இங்குதான் வந்து சேரும் ஏறக்குறைய நெல் வாழும் 90 நாட்களும் வயல் தண்ணீராய் மட்டுமே தெரியும். தை பிறந்தாலும் வழியின்றி இம்மக்களின் தலைகவிழ்ந்து போகும். இப்படி இயற்கையின் தாண்டவம் அரங்கேறத்தொடங்கியது. ஆறு ஏழு நூற்றாண்டுகளாகியும் இன்றும் இதுதான் நிகழ்கின்றது.

காலஓட்டத்தில் ஈச்சிலம்பற்று எனும் பழம்தமிழ்தேசம் செண்பக நாச்சியாரின் மகன் சித்திரவேலன் பெயர் சொல்லும் பதியாக நிருவாகப்பெயர் பெற்று வெருகல் பிரதேசமாகிய கதை நாங்கள் அறிந்ததே தனித்தமிழ் தேசம் இது ஒரு குட்டி இந்து சாம்பிராஜ்ஜியம். செந்தமிழ் அன்னை இந்த கிராமியச்சூழலில் இன்புற்றுக்குடிகொண்டாள். பேச்சுத்தமிழ் ஒரு அழகு, ஏசும் தமிழ்கூட அழகு, பாடும் தமிழ் மிகவும் அழகு, பார்விட்டுப் போகும் போது புலம்பும் தமிழ் பேரழகு என்று தமிழ் அன்னை இம்மண்ணோடு இரண்டறக் கலந்தவளாக வாழ்ந்து கொண்டு இருக்கிறாள்.

'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்பது போல் என்னதான் இயற்கை இறுமாப்புக்கொண்டாலும் அதுதானே எம்மை எப்போதும் காக்கவேண்டும் என்பதால் அதனை தாயாக வர்ணித்து அவளை சரணடைந்து இம்முறை எமது வாழ்வை வெய்யிலில் கருக வைத்து பின் தண்ணீரில் கரைத்து விட்டாய். இனிவரும் பொழுதிலேன்றாலும் எம் வாழ்வை வளமாக்க வயலை காப்பாற்று என்று வேண்டியபடி மீண்டும் மீண்டும் பயிர் வளர்க்கும் உறுதியே இம்மக்களை இன்னும் வாழவைத்துக்கொண்டிருக்கின்றது.

கடந்த ஐந்து தசாப்தங்களுக்ககுள் பத்து தடவைகள் வயலும் வாழ்வும் தொலைந்தன. வாழ்விடங்கள் எச்சங்களின்றிய சுடுகாடுகளாகின, இழந்துபோன உறவுகளின் உடலடக்கம் செய்யவொண்ணாது ஓடலுற்றோம். இழப்பதற்கு உயிரின்றி வேறொன்றும் இல்லாத வெறுமனிதராகிவிட்டோம் என்பதே எம் மக்களின் ஏக்கம்.

சராசரியாக ஐந்து வருடங்கள் உழைத்து சேர்த்தவைகள் ஒவ்வொரு ஆறாவது வருடத்திலும் அழிந்ததனால் மீண்டும் பூச்சியத்திலேயே வாழ்வு ஆரம்பித்தது. இன்று தோன்றியுள்ள இயல்பான சூழல் நிலைத்தால் மட்டுமே நிம்மதியாக வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கலாம் ஆனாலும் 50 வருடங்களுக்கு முன் பொருளாதாரத்தில் நாம் எப்படி இருந்தோமே அங்கிருந்துதான் வாழ்க்கை தொடங்கியுள்ளது. இப்பொழுதெல்லாம் அறிவு மைய பொருளாதாரத்தை பற்றியே அதிகம் பேசப்படுகின்ற சூழ்நிலையில் வெறும் உடல் உழைப்பே இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக விளங்குகின்றது. என்பது மிகவும் பரிதாபகரமானது மொத்த சனத்தொகையினராகிய 10,000பேரில் 5 வீதமானவர்கள் மட்டுமே அரச உத்தியோகஸ்த்தர்களாக ஆகியுள்ளனர். இங்கு வாழ்கின்றவர்களில் 70 வீதமானவர்கள் எழுத்தறிவுடையோராயினும் 45 வீதமானவர்கள் மட்டுமே கல்வி அறிவுடையவர்களாக அதாவது ஏதாவது ஒரு பொதுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக காணப்படுகின்றனர். ஏன் இவர்கள் இவ்வாறு கல்வியில் இத்தனை தூரம் பின்தள்ளப்பட்டவர்களாக உள்ளனர்? பொருளாதாரமும் நிம்மதியும் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டதுவே இதற்கான மூலகாரணமாகும். பசியின்றி வாழ்வதே மிகப்பெரிய சவாலாக உள்ளபோது கல்வி கற்பதே கல்வியில் சாதிப்பதோ வாழ்வை திட்டமிட்டு முன்னெடுப்பதோ இலகுவாகன காரியமா?

'பொருளாதாரத்திலே பொருள்தானே தாரம் என்று இருவர் உழைத்தால் தான் இந்நாளில் பசி தீரும்' என்ற மெல்லிசை மன்னரின் பாடல்வரிகளை அறியாதவரே இருக்க முடியாது அவர் கூறியது போன்று கணவனும் மனைவியுமாக மட்டுமல்ல மக்களும் சேர்ந்து மொத்தக் குடும்பமே உழைக்கிறது ஆனாலும் பட்டினி ஓலங்கள் இன்னும் குறைந்தபாடில்லை

'பசி வந்தால் பத்தும் பறந்துவிடும்' என்பார்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு சோறு ஒருநாளுக்கு ஒரு சோறு, சோறும் சம்பலும், சோறும் தேங்காய்பூவும், சோறும் மீனும் என்றும் ஒரு நாளுக்கான கலோரி முழுவதையும் தரத்தக்க உணவுவகைகளை தமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ள இவர்களது வருமானம் இடம் தருவதில்லை.

இப்பகுதி தாய்மாரில் மந்தபோசாக்குள்ளவர்களே கணிசமானவர்கள். இவர்கள் பிரசவிக்கும் குழந்தைகளும் அவ்வாறே மந்தபோசாக்குள்ளவர்களாகவே அதிகம் பிறக்கின்றனர், வளர்கின்றனர். இவர்களே இங்குள்ள பாடசாலைகளின் மாணவர்கள்.

இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் உண்மையில் போற்றப்பட வேண்டியவர்கள் அதீத பிரயத்தனம் செய்கின்றனர். கணித விஞ்ஞானப்பிரிவுகளில் இணைந்து கற்கத்தக்க மாணவர்களை உற்பத்தி செய்வதே 'எறும்பூரக்கற்குழிவது' போல்தான் அமைகின்றது. இவ்வாறான நிலையில் கல்வியால் ஆரோக்கியமான அறிவுபூர்வமான சமுதாயத்தை உருவாக்குவது என்பது இப்போதுதான் அரும்பு நிலையில் உள்ள ஒரு விடயமாக காணப்படுகின்றது.

உலக ஓட்டம் கல்வியின் அவசியத்தை பல்வேறு வடிவங்களில் உணர்த்தியே வருகின்றது. வீட்டுக்காவலுக்காக, தம்பி தங்கைகளை பராமரிப்பதற்காக குடும்ப தொழிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்வதற்காக, வருமானம் ஈட்டுவதற்காக என்று பிள்ளைகளை பாடசாலை செல்லாதிருக்கச்செய்யும் அளவு குறைந்துவருவதில் இருந்து இவ்விடயம் நன்கு புலனாகின்றது.

எவ்வாறாயினும் ஒவ்வொரு பிள்ளைக்கும் தேவையான கல்விச் செலவுகளை உரிய முறையில் மேற்கொண்டாலேயே அப்பிள்ளை தேசிய தரமுள்ள கல்வியை பெற்றுக்கொள்ள முடியும் அது இங்குள்ள பெரும்பாலான பிள்ளைகளை பொறுத்தவரை எட்டாக்கனியாகவே அமைகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களின் வாழ்வை வளப்படுத்த என்றும் இல்லாத அளவில் தொண்டுநிறுவனங்களின் உதவிகள் கிடைத்தன இறுதியாக 2006ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து மீளக்குடியமர்த்தப்பட பின்னரும் இது போன்று உதவிகள் அதிகம் கிடைத்தமையால் மக்களே அல்லும் பகலும் அயராது உழைக்கின்றனர் ஆனாலும் இன்றுவரை இவர்களால் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணமுடியவில்லை.

வயல் நிலங்களே பிரதான வருமான மூலமாக இருக்கும் இப்பிரதேசத்தில் வெய்யிலும் வெள்ளமும் மாறிமாறி பொருளாதாரத்தை கருக்கியும் கரைத்தும் உறிஞ்சிக்குடித்துக் கொண்டே இருக்கின்றன இதனால் இப்பிரதேசத்தில் பொருளாதாரம் ஒவ்வொரு வருடத்திலும் நலிந்துகொண்டே செல்கின்றது.

இதற்கு முடிவேகிடையாதா? என ஏங்கும் இவர்களிடம் உள்ள இந்நிலைமையில் இருந்து மீள்வதற்கான யோசனைகளை செயற்படுத்துவது யார்? என்பதே இவர்களது கேள்வி ஒவ்வொரு வருடமும் வரட்சி நிவாரணம் கொடுப்பதற்கு செலவிடப்படும் பெருந்தொகைப் பணமும் வெள்ள நிவாரணமாக வழங்கப்படும் உதவிகளும் வெள்ளத்தை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் சிறுசிறு கட்டுமாணங்களும் எந்த நிரந்தர தீர்வினையும் தரப்போவதில்லை. கடந்த ஒரு 10 வருடங்களிலேயே ஆயிரக்கணக்கிலான மில்லியன் ரூபாய்கள் இப்பிரதேசத்தில் இதற்காக செலவுசெய்யப்பட்டுவிட்டன ஆனாலும் இன்றும் என்றும் தொடர்ச்சியாக இவ் உதவிகள் தேவைப்பட்டுக்கொண்டேதான் இருக்கப்போகின்றன. இவை எவையும் இனி எமக்கு தேவையில்லை. இனிவரும் ஒருசிலவருடங்களில் இவ்வாறு வழங்கப்படவுள்ள எல்லா உதவிகளுக்குமான பணத்தையும் ஒன்றாகச்சேர்த்து மாபெரும் முதலீடாக மாற்றி ஒரு வேலைமட்டும் செய்துமுடிக்கப்பட்டால் பொன்கொழிக்கும் பூமியாக இப்பிரதேசம் மாற்றமுறும் என்பதில் எந்த சந்தேகமும் இருக்கவேண்டியதில்லை.

அப்படி என்னதான் செய்யப்பட வேண்டும்? வளங்கள் அனைத்திற்கும் ஊற்றாகவுள்ள மகாவலி வீணே சமுத்திரத்தில் சங்கமித்துக்கொண்டிருக்கிறது. மன்னன் குளக்கோட்டன் காலத்தில் தொட்டபணி இன்னுமும் நிறைவுபெறவில்லை. இப்பிரதேசம் முழுவதும் உள்ள 7,500 ஏக்கர் வயல்வெளிகளுக்கும் பாசனம் செய்யத்தக்க பாரிய குளம் ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிச்சங்கட்டிலே தொடக்கினாலும் அப்போதய காலச்சூழ்நிலைகள் அதை கைவிடச்செய்துவிட்டன. ஆனால் அவன் விட்டுச்சென்ற பணியினை தொட்டுச்சென்று பூரணமாக்குவது ஒன்றே இப்பெரும்பணி பனிச்சங்கட்டுக்குளத்தை விசாலப்படுத்தி உரியவகையில் மாவிலாறு ஊடாக மகாவலியில் இருந்து அதற்கான வழங்கல் கால்வாயை அமைத்து குளத்தின் நீர்மட்டம் குறைந்துபோகாமல் பராமரித்து பாசனகால்வாய்களை புனரமைத்து வயல்வெளிகள் அனைத்திற்கும் நீர் கிடைக்கச்செய்வதே இப்பிரதேசத்தின் நிலைப்புக்காக செய்யப்படவேண்டிய மிக முக்கிய, தலையாய பணி. இப்பெரும் பணியை செய்து முடிக்கத்தக்க நவகால குளக்கோட்டனையே நாம் இப்போது தேடுகின்றோம்.

அவ்வாறு ஒருவர் இருந்தால் அவர்தான் வெருகல் பிரதேசத்து மக்களின் குபேரன், வெய்யிலில் கருகி வெள்ளத்தில் கரைந்துபோகும் வாழ்வுக்கு வாழ்வு தந்த வள்ளல் மொத்தத்தில் அவரே வெருகலம்பதியானின் மறுவடிவம். இவ்வாறு செய்யவல்லவர் இல்லாமல் இல்லை. தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இந்த நாட்டின் பிரதமருக்கு நிகரான அதிகாரங்களைக் கொண்ட எதிர்கட்சித்தலைவராக இருக்கும் சம்பந்தன் ஐயாவைத்தான் இப்பிரதேசத்து மக்கள் நவகால குளக்கோட்டனாக காண்கிறார்கள்.

நாம் அவருடன் பேசியவகையில் அவருடைய எண்ணத்தை அறிந்தோம் வெருகலம்பதி நீர்பாசனம் அவருக்குள் ஊற்றெடுத்து பாய்ந்துகொண்டே இருப்பதை அவருடைய உரையாடல் உணர்த்தியது. நிச்சயம் அது செயலாக்கப்பட வேண்டும். அப்போதுதான் இம்மக்களின் வாழ்வு வெய்யிலிலும் துளிர்த்து வெள்ளத்திலும் நிமிர்ந்து, ஏக்கர் ஒன்றிற்கு சராசரி 20 மூடை நெல் வீதம் 7,500 ஏக்கரிலும் 15000 மூடைகள் உற்பத்தியாகும்.

இதன் பெறுமதி ஏறக்குறைய 19,000 பேரைக்கொண்ட இப்பிரதேசத்தின் தலாவருமானம் 45,000 ரூபாய் வரையில் உயர்ச்சி பெறும் இது நெற்செய்கையால் மட்டும் விளைவதாக இருக்கும் இது தவிர தோட்டங்கள், வீட்டுத்தோட்டங்கள், நன்னீர் மீன்பிடி, மீன்வளர்ப்புக்கள் என பல்வேறு வருமான மூலகங்களிலிருந்தும் குடும்பவருமானம் அதிகரிக்கத்தொடங்கும். இதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் வளர்ச்சியடையும், அன்று தனக்கு மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணம் முழுவதற்கும் உணவளிக்கும் பூமியாக வெருகல் பிரதேசம் மாறும் என்பதே எமது நம்பிக்கை

**திரு. சித்திரவேல் கணேசன்,**
பிரதி அதிபர்
**தி/மூ / இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக்கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தம்பிரான்
## நாக தம்பிரான் காவியம்



அருள் பெரு யானை முகன் ஆதிசிவன் மால் பிரமன்
அம்மையுமை வேல் முருகன் அடியினைப் போற்றி
கருதரிய பூவுலகில் எந்தனை ஈன்றவரும்
கற்றவரையும் மனதில் உற்றே நினைத்து
பெருமை செறி ஈச்சநகர் கிராமமது மீதிலுறை
பேசரிய நாகர் மேல் காவியம் இயற்ற
அருள் மருவு மனதிலுறை பெரியவரே வரும் பிளைகள்
சீராகவே பொறுத்தேயாகுவீரே.

ஆழவே முன்னமொரு காலமதிலே தனிலே
அன்பான காசீப முனிவரருளாலே
வாழவே வற்றாது எனுமங்கை கற்பமதில்
வந்தல்லோ நூற்றெட்டு மைந்தராய் நீங்கள்
காளமுகில் மாயரிடை சாயணையுகமாகி
கருதரிய லோகமதில் எங்கும் பரந்து
தாழமுடன் வெடிகுரவை பல பூசை ஏற்றவரும்
தற்பரனே் ஆனதொரு ஆதிசிவன் மார்பிலனி
தக்கபணியானதொரு ஆபரணமானாய்
அப்புவியில் அனியாயம் செய்வோர்கள் கர்வமதை
அடக்கியே பூலோகம் ஆட்சியிடவே வந்தாய்
வெம்பியே வாடுகிறோம் உந்தனையல்லால்
வேறொருவன் எங்களுக்கார்துணையும் காணோம்
நம்பினோம் ஈச்ச நகர் கிராமமது மீதிலுறை
நாதனே தேவனே நாகதம் பிரானே.

வருநாகசாதியில் அனந்தன் கார்க்கோடகன்
வாசுகி சங்குபாலகன் குளிகள்
இதமான மண்டெலி ஏழுவழலை
இருக்கும் புடையன் இரு நான்குடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதிசெய்யும் சற்பங்கள் தானனுகாமல்
சரணமென உள்பாதம் தாழ்பணிந்தோமே.

தாழ்பணியவே உனது கிருபை அருள் தந்து
சாற்றரிய இருதலை மணியன் சிலந்தி
பொல்லாத தேழுடன் நட்டுவக்காலி
பொரிவண்டு தவளை பச்சோந்தில் நாய் நரியும்
உறவுற்றருணை செவ்வட்டை புலிக்குழவி
உலகுதனில் உண்டான விசசந்து பலவும்
தீது புதியாதுனது கிருபையருள் தந்து
தீரனே கோயிலில் தானுறையலானாய்.

உறைய இடமானதொரு ஆலையொடு பனையும்
ஓதரிய புளியையுடன் கருங்காலி மரமும்
சாற்றரிய வீரையுடன் தளைத்த மாமரமும்
ஈச்சிலம் பதியருகில் உவயா மரமும்
ஞாயிற்றுக் கிழமையில் பொங்கல் பால் பழமும்
சந்தோசமாகவே தானாயருந்தி
தற்பரனே எங்களப் பாதுகாத்தருளே.

நடனமிடு சிவபரனின் முடிமீதமர்ந்தாய்
நாரணனும் கண்துயிலப் பஞ்சணையும் ஆனாய்
கடலுடனே மலைபெரிய புவிதாங்கலானாய்
கண்ணனின் கைக்கிளிய தோர்கணையுமானாய்
படமதனால் பரிதிமதி பழிவாங்கலானாய்
பண்புடனே ஈச்சிலம்பதி கோயிலுறையலானாய்
திடமேவு தீரனே காசிபெரின் பாலனே
தீது புரியாதுனது பாதமலர் துணையே.

துணையாகி நாங்களிடு வேளாண்மைகளில்
பூச்சிபுழு துன்பங்கள் செய்யாமல் உன்னன்பு தந்து
இடரேதும் வாராமல் செந்நெல் விளைய
இப்புவியில் நாங்களும் உன்புகழைப் பாட
மனமிரங்கி மக்களை நீ காத்தருள வேண்டும்
மாறாட்டம் செய்யாமல் வந்ததவ வேணும்
உனை எனது மனதினிலே ஒருநாளும் மறவேன்.
உன்பர் புகழ் எங்கள் குல நாகதம்பிரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களும் வாலியும் வானவரும் கூடி
செய்ய புருமேவுகிரி மகத்தாக நாட்டி
ஆவலுடன் உந்தனைக் கயிறாக மாட்டி
அமிர்தம் கடைகின்ற நேரமதில் தனியே
மூவுலகும் தணலாக நஞ்சை நீ கக்க
முனிவரோடு தேவர்களும் விரண்டவர்கள் ஓட
காலவே ஆதி சிவன் நஞ்சதனையுண்டு
காத்தாரே ஈரேழுலோகமதை முன்னே.

முன்னவே பரிசித்து ராசனை நீதான்
முனிவரிடை சாபமது தன்னாலே சென்று
மன்னவனும் கடல் தனிலே போயாவன் ஒளிக்க
மாறாட்டமாய் சென்று நீயவனைத் தீண்ட
அன்னவளின் பிள்ளையென யாயினவனாலே
அழிந்தார்கள் ஜாதகத்தில் அனேகம்பேர் முன்னே
வண்ணமுடன் நாலாறு பேர்கள் அதில் தப்பியே
வந்தல்லோ எங்கள் குடி மரபிதுவோ ஐயா

நாக கன்னியே உமக்கோலம் ஓலம்
நாராணன் தங்கையே உமக்கோலம் ஓலம்
செல்லக்கொழுந்தே உமக்கோலம் ஓலம்
தேவி கண்ணகையே உமக்கோலம் ஓலம்
முத்திக்கு வித்தே உமக்கோலம் ஓலம்
முன்வந்து அடியாரை பாதுகாத்தருளே.

எங்களை பாதுகாத்தருளும் நாக தம்பிரானே சிவாயநம
ஈரேழு புவனமும் இருந்தாய் சிவாயநம
பொங்கலுவன் பால் பழம் உண்டாய் சிவாயநம
போர்விஜயம் முடிசிதறச் சென்றாய் சிவாயநம
கங்கை மாமேருவை மறைத்தாய் சிவாயநம
தாருமுனது பொருளைத் தாயே ஐயா சிவாயநம
ஆடிவந்துன் பூஜையை தாளேந்து கொள்ளே.

**அமரர். மூத்தம்பி இலட்சுமணன்**
விசக்கடிவைத்தியர்
6ம் வட்டாரம்,
ஈச்சிலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷக்கடி கலை விலை மதிப்பற்ற பொக்கிஷம்

**1. விஷத்திற்கு சுண்ணாம்புத் தடை போடுதல்**

ஓம் திருப்பரமேஸ்பரியின் திரு பரமேஸ்வரனும்
திரு வேட்டைக்கு எழுந்தருளிப் போகும் போது
திருப்பரமேஸ்பரியின் திரு மாங்கல்யம் களன்று விழ
திருப்பரமேஸ்வரி எடுத்துக் கொடுக்க திருப்பரமேஸ்வரன்
வாங்கி திருப்தீட்டுப் தீட்டினாப்போலே நான்
இப்தீட்டு தீட்டுகின்றேன். இவர் சரீரத்திலும் சதையிலும்
நரம்பிலும் சவ்விலும் எலும்பிலும் ஓடுகிற வி'த்தை
ஓடாமல் கட்டினேன் இங்கே தட்டுப்பட்டு கீழே
இறங்கி திருப்பரமேஸ்வரன் ஆளன இறங்கிக் குதித்துப் போகவே சிவாகா.

**2. குரு வணக்கம் (குழையால் விஷம் இறக்கம்)**

ஓம் குரு வாழ்க எந்தன் ஆசிரியர் வாழ்க. குரு இருந்த
இடமும் வெள்ளிக்குடையும் அடியேன் தலைமேல் கொண்டால்
முப்பத்தி முக்கோடி தேவர்களும் நாற்பத்தி
எண்ணாயிரம் கோடி இரிசிகளும் தொட்டெடுத்த
குழை கொண்டு வீசுகின்றேன். விஷக்கலை
தெறி அமிர்த கலை தெறி அமிர்தமாகவே
இறங்கு இறங்கவே சிவாகா.

**3. கண்ணுக்கு கலிங்கமிட**

வெற்றிலை பெரிதாயின் ஒன்று சிறியதாயின்
மூன்று மிளகு உப்பு ஒருமிளகு அளவும்
எடுத்து இடித்து அதன் சாறினைப் பிளிந்து
இருகண்ணிலும், மூக்கிலும், காதிலும் இச்சாற்றினை விட விஷம் இறங்கும்.

**4. கண்ணுக்கு கலிங்கமிடும் மருந்துகள் எச் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவது என்பதற்கான விளக்கம்:-**

விஷம் தீண்டியவர் என்ன பாம்பு கடித்துள்ளது என்பதை அறியமுடியாத நிலையில் இருந்தாலும் நோயாளிகள் கண் தெரியவில்லை. பார்வை பல வடிவங்களில் தெரிகின்றது. எனும் சந்தர்ப்பங்களில் இந்த இலகுவான முறையில் பயன்படுத்தும் கலிங்கத்தை பாவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. சளி அடைப்பில் அவதியுறும் நோயாளிகளுக்கான நசியம்**

முடிதும்பை ஒரு பிடியளவு முருங்கையிலை ஒரு கைபிடி கௌவ்வையிலை ஒரு கைபிடியளவு தயிர்விளா ஒரு கைபிடியளவு வெற்றிலை தேவைக்கேற்ப எடுத்து உரலில் இட்டு இடித்து அதன் சாற்றினைப் பிளிந்து அதனை ஒரு பாத்திரத்தில் எடுத்து வலப்பாகத்தில் எடுத்து பப்பாசிக்குழலில் எடுத்து வலப்பாகத்தில் விஷம் தீண்டி இருந்தால் வலது மூக்கிலும் இடது பாகத்தில் விஷம் தீண்டி இருந்தால் வலது மூக்கிலும் அக்குழாயினால் சாற்றை எடுத்து அடிக்கவும். அதே போல் காதிலும் கண்கள் இரண்டிலும் இச்சாற்றை விட வேண்டும். தேவைக்கேற்ப இச்சாற்றை விட வேண்டும். தேவைக்கேற்ப இச்சாற்றை பயன்படுத்துவதன் மூலம் தொண்டையில் சிக்கியுள்ள சளியை வெளியில் எடுக்க முடியும்.

**6. கெருடன் குளை அடிக்கும் மந்திரம்**

ஓம் மகா கருங்காட்டில் கருமலைமேலே கிடக்கும் ஐந்து தலை நாகத்தின் வயிற்றிலே பிறந்து எட்டு வரியன் இருதலை மணியன் செம்மணியன் புதே மணியின் கருநாகம் செந்நாகம் செந்மூக்கன் செவ்வழலை கருவழலை சங்குவழலை சாரமூக்கன் கொம்பரியன் செந்சிலந்தி சென்நிலந்தி தொண்டைவாய் சிலந்தி குண்டுகண்களன் பன்றி மூக்கன் பட்சிபடுவன் புலி மூக்கன் சிலந்தி மண்டலி சுறுகண் மற்றும் கரும்புடையன் செம்புடையன் செவ்வால் அரணை நாகம் கடித்தது கண்டு கேட்டு ஏழுகடலுக்கு அப்பாலே இருக்கும் செம்பிராந்து ஆல விருட்சத்தின் கூடுகட்டி முட்டையிட்டு குஞ்சு பொரித்து குஞ்சுக்கு இரைதேடி கிடையாமல் அலகோடு அலகு தட்டி சிறகோடு சிறகு தட்டி வாநார் செங்கருடன் கண்ரெண்டு பொரி பழக்க நெருப்பெரிய வாநார் எங்கள் நயினர் அவர் இடத்தில் தீண்டிய வி'த்தை கெருடன் எரிப்பான் என்றான். மேலே போன வி'த்தை கெருடன் பக்கம் எரிப்பான் என்றான். அம்மியிலே அரைத்து கிண்ணியிலே வழிப்பான் என்றான் கானமலையும் அருமலையும் அடுப்பாய் கூட்டி பெரும் வட்டம் ஏற்றி அக்கினியால் எரிப்பேன் என்றான். கெருடன் கருங்கடலுக்கு அப்பாலே கெருடன் கருவேப்பங்குளையும் கரு நொச்சி இலையும் தந்தான் கெருடன் இக்குளையாய் வீசுகிறேன் சறு வி'மும் இறங்கி ஓம் சிரசியில் ஏறிய வி'மும் சந்திலும் சதையிலும் நரம்பிலும் எலும்பிலும் ஏறிய வி'ம் இறங்கு இறங்கு திகு திகு எரி எரிந்து பொரிந்து போ ஓம் நாகலோகா நடுத்தீவிலே முளைத்த வேப்பங்குளையை முறித்து நாககன்னி கெருடனுக்கு வேண்டி எனக்குத் தந்தார். கெருடன் நான் தொட்டெடுத்து பார்க்க சறுவ வி'மும் இறங்கி அரிகெருடன் ஆணை இறங்கு குதி குதி குதித்துப் போகவே சிவாகா.

**7. விஷம் தீண்டியவருக்கு வைத்தியரை நாட முன் தேவைப்படும் முதலுதவி.**

- விஷம் தீண்டியவரை சாணத்தில் மிதிக்க விட கூடாது.
- நிலத்தில் கிடையாக கிடக்க விட கூடாது.
- நிமிர்த்தி வைத்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரவு நேரமானால் நித்திரை செய்யக்கூடாது.
- மதுபானம் அருந்தக்கூடாது. (விஷத்தின் தன்மை மிக விரைவில் அதிகரிக்கும்.
- தேனீர் சாயம் அதிகளவு உட்கொள்ளக்கூடாது.
- உடனே விஷம் தீண்டிய இடத்திற்கு மேல் ஒரு கயிறு அல்லது துணி இறுக்கிக் கட்டவும்.
- மேற்கூறப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தால் உயிரிழப்பை குறைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

**8. திருநீறிட்டு விஷம் இறங்குதல்.**

திருநீறு செல்வந்தருநீறு
உண்மைக்குரு நீறு
நன்மையருள் நீறு
மகாமந்திர நீறு
அந்தி சந்தியணிந்த நீறு
தரித்திட்டேன் தரித்திட்டேன்
யானைத்தோலை
யன்புடன் போர்த்தும் புலித்தோலுடுத்தும்
புண்ணியதேவா
அன்பருக்கெல்லாம்
இன்பந்தருகும்
அண்ணலிட்ட நீறை
நானிட்டேன்
யானைத்தோலணிந்தேன்
அவதனிலே
புலித்தோலணிந்தேன்
தீண்டேன் பணிதிகள்
ஜெயநாக படம் விரிந்து
தீநாவையடக்கி
விடமிறங்க விடமிறங்க
நானிட்ட திருநீறு
விஷமீட்டுந் திருநீறு
திரிதிரி கணபதி
முக்கண்ணான் மகனே
திரிபுரம் எரித்த சிவனேயிப் போது
விஷமேறியிருந்த விஷமிறங்கச் சிவா

என்று 108 உருச்செபித்து வைத்துக்கொண்டு விஷம்கடித்து வந்தவர்களுக்கு இவையாவும் ஒரு தடவை சொல்லி விபுதியினால் மந்திரிக்க விஷமிறங்கும். காணாக் கடி இந்த மந்திரத்தை தண்ணீரில் 108 உருச்செபித்து கொடுக்க விஷமிறங்கி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. விபூதியினால் விஷமிறங்க மந்திர சக்கரம்**

இடது கையில் விபூதியை வைத்து பரத்தி அதில் இதன் மேலே கண்ட சக்கரத்தை எழுதி ஓம் சிவசுவாஹா. இன்னபேரின் உடலைப்பேணி உயிரைக்காத்து விஷம் தீர்தீர் என்று 108 உருச் செபித்து கண்ணாடி பார்த்து வாயினாலூதி கையினாற்றடவி இறக்கி திருநீறு போட உடனே விஷம் இறங்கும்.

மாசற்ற சோதி மறையவர் தேடிய வான் பொருளே தேசத் தருர்சிரிப் பாரே சிறு விடம் தீண்டிச் செத்தால் ஈசர் கடியான். இவர் சொற் கடங்கியிருக்கும் நஞ்சே நிசத்துக் கெட்டாய் போவென்று நீக்கினேன்.

**10. நல்ல பாம்பு தடைகட்ட மந்திரம்**

தன்வந்திரி வாக்கியம்.

நாலு பல்லுடைய நாக பாம்பே
என்கை இலகுகை
யில்லையில்லை
நெருப்புக்கை நெருப்புக்கை
நெருப்பைக்
ஆதிபரமேஸ்வரன்
நீளப்பாம்பே
நீறு நீறாய் நீயுங்கிடக்க
வைக்கோலாக மருவிக்கிடக்க
என்னுள்ளங்கையில்
கீழுங்கப்பரை
மேலுங்கப்பரை
என் கட்டு
கையிலெடுத்தேன்
கட்டு
இக் கட்டுக்கடவாதே
ஈசுரணறிய
கட்டுங்கடங்கி கிடக்கச் சிவா

என்று மந்திரத்தை 108 உருப்போட்டுச் செபித்து கொண்ட பின்பு இந்த மந்திரத்தை ஒரு தடவை சொன்னால் பாம்பு தடைப்பட்டிருக்கும்.

**11. நல்ல பாம்பு தடைமுறிக்க மந்திரம் தன்வந்திரி வாக்கியம்.**

ஆதிபைரவி ஆனந்த பைரவி
ஓம் ஓம் நம நம
அலகொடு அலகு நீங்கி
ஆறொடு மடுவுநீங்கி
இலகொடு இலகுநீங்கி
எங்கே வந்தாய் கெருடா
ஓம் சிவ சிவ நமோ நமோ
ஓம் நமசிவாயா
நின் கட்டை முறி முறிஸ்
ஓம் நமசிவாயா
சன் கட்டை முறித்தேன்
நீ ஒரு பாம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு முறி சக்கரமுறி
முப்பத்தி மூன்று
எறும்பு முறி
நீ உன்னிடந்தேடி
செல் செல் விரைந்து
செல்லச் சுவாஹா

**12. அஷ்ட நாகமொன்ற நல்ல பாம்புக்கடி விஷம் தீர**

வேலிப்பருத்தியிலை குப்பை மேனியிலை இரண்டையும் இடித்து கால்படி சாறுவாங்கி கெருடன் கிழங்கை கொட்டைப்பாக்களவு மேற்படி சாறு விட்டரைத்து கலக்கிக் கொடுக்க விஷமிறங்கும்.

**13. மேற்படி மற்றொரு மருந்து.**

வேலிபருத்தி இலையை வாய்பேசாமல் இலையைப் பிடிங்கி அத்துடன மிளகு சேர்த்து அரைத்து நெல்லிக்காய் பிரமாணங்கொடுக்க விஷமிறங்கும்.

**14. மேற்படி மற்றொரு மருந்து.**

அவுரிவேர் கொண்டுவந்து கொஞ்சமெடுத்து கசாயம் போட்டு அரக்காற்படி கசாயம் சாப்பிட விஷமிறங்கும்.

**15. மேற்படி மற்றொரு மருந்து.**

நஞ்சரப்பாஞ்சான் விதையை கொஞ்சம் எடுத்து அரைத்துப் பாக்களவு கொடுத்தால் விஷமிறங்கும்.

**16. மேற்படி மற்றொரு மருந்து.**

பேய்ப்பீக்கை முந்திகையை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க விஷமிறங்கும்.

**17. மேற்படி மற்றொரு மருந்து.**

கொல்லன் வேர்க்கிழங்கை பாக்களவு அரைத்து கொடுக்க விஷமிறங்கும்.

**18. மேற்படி மற்றொரு மருந்து.**

பாவட்டையிலையை இடித்து சாறெடுத்து களஞ் சூதத்துக்கு விட்டரைத்து சிமிழில் வைத்து பணவழடை நீரிற் கலக்கி கொடுக்க விஷமிறங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. மேற்படி மற்றொரு மருந்து.**

புத்துக்கரையானும் பச்சைப்பாம்பும் சமநிலை நிறுத்தி கல்லத்திலரைத்து உருண்டை செய்துலர்த்தி கஞ்சிலாவது வெந்நீரிலாவது செய்து கொடுக்க விஷமிறங்கும்.

**20.மேற்படி மற்றொரு மருந்து.**

மாலை தாங்கிவேர் குப்பைமேனி பேய்ப்பீக்கையிலை மூன்றும் ஒவ்வொரு பீக்கை கொண்டு வந்து புங்கின் வர சமன் சேர்த்து பாகையிலைச் சாற்றில் ஒருச்சாமமரைத்து பாக்களவு உருட்டி காயவைத்து வெந்நீரில் கலந்து கொடுக்க விஷமிறங்கும்.

**21. மேற்படி மற்றொரு மருந்து.**

விழி சின்ன கருநொச்சி இலுப்பை முடக்கத்தான் இவற்றை சமனாக எடுத்து சிறுக வறுத்து தொட்டமிட வீக்கம் வற்றும் விஷமும் இறங்கும்.

**22. மேற்படி மற்றொரு மருந்து.**

சின்ன வெங்காயம் சுக்கு வசம்பு சமன் கூட்டி சின்னியிலைச்சாற்றால் அரைத்துப் பூசி ஒத்தமிட விஷமிறங்கும்.

**வை.நாகேந்திரன்**
விநாயகபுரம்,
ஈச்சிலம்பற்று.



# வெயிலில் கருகி வெள்ளத்தில் கரையும் வாழ்வு

ஐவகை நிலங்களுங்கூடி
ஐங்குறுநுறினுள் தாவி
ஐம்புலன் அனைத்தையும் மேவி
அமைந்ததே அழகிய பூமி

தித்திக்க தீஞ்சுவை அமுது
திகட்டாத பால்தயிர் ஆநெய்
யாவான் விரால் சுங்கான்
சுவையான மீன்கள்
மான்மரை முயல்
கறிகளோ ஏராளம்

வற்றாத வைகையாய்
ஊற்றெடுத் தோடும்
அன்பின் பிரவாகம்
யாரிடம் கேட்டாலும்
எத்திக்கு உள்ளோர்க்கும்
இது சின்ன சொர்க்கம்

புத்திக்கு செண்பகநாச்சியாரும் மகனும்
புத்திக்கு பழந்தமிழ்சோழ மாமன்னன்
குளக்கோட்டன் பனுவல்
தொழுதுண்டு வாழ்வாரோய் அன்றி

ஆதியாம் கோணேசர்க்கு
அமுதூட்டி ஊட்டி ஊட்டி
அனைவரும் இன்புற்றிக்க
பழுதின்றி உழுதுண்டு வாழ்ந்த ஊர்

காராளர் ஏருக்கு
நேர் இங்கே ஏதுண்டு
ஏரோடி வயல் செய்து
சிறப்போர்கள் இருக்க
ஈச்சிலம் பற்றுக்கு
குறைஏதும் இருந்ததுண்டோ?

அந்தோ பரிதாபம்!
செல்வச்செழிப்போடு
சீர்பெற்று வாழ்தோரின்
வாழ்வின்று வெயிலில் கருகி
வெள்ளத்தால் கரைகிறதே....

ஆக்கம் :- சித்திரகேசரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிக்க படுவோர்



**பெயர் :- கணபதிப்பிள்ளை செல்லம்மா**
**விலாசம் :- ஈச்சிலம்பற்று**
**வயது :- 99**
**திறமை :- மருத்துவிச்சி**

திருமதி.க.செல்லம்மா அவர்கள் கடந்த 1917ம் ஆண்டு கறுவல் தம்பி, நாவியார் ஆகியோருக்கு கடைசி மகளாக பிறந்தார். பின்னர் கணபதிப்பிள்ளை அவர்களை மணம் முடித்து இரண்டு ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் தாயானார். மருத்துவ வசதி மேம்பாடற்ற அந்த காலத்தில் பிரசவம் என்பது மருத்துவிச்சிகளின் கைகளிலே தான் முழுக்க முழுக்க தங்கியிருந்தது. அத்தகைய கால கட்டமான 1960ம் ஆண்டு முதல் மருத்துவிச்சியாக ஈச்சிலம்பற்று அதனை அண்மித்து சின்னக்குளம், விநாயகபுரம், உடப்புக்கேணி உட்பட பல கிராமங்களுக்கு அரிய சேவையை செய்துள்ளார். இதுவரை சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பிரசவங்கட்கு மருத்துவிச்சியாக பணி புரிந்துள்ளார். இவரது கணவர் 2002ம் ஆண்டு மரணமடைந்து விட்டதால் இவரது மகளான ஞான கணேசமூர்த்தி காளிப்பிள்ளை என்பவருடன் வாழ்ந்து வருகின்றார். இத்தகைய அரிய பணியினை செய்த இவர் 2017ம் ஆண்டு நூற்றாண்டு அகவையினில் தடம் பதிக்க உள்ளார். இவரை இம் மலரினூடாக இவரது ஆயுளும் ஆரோக்கியமும் இன்னும் சிறப்பாகவும் சீராகவும் இருக்க பிரார்த்தித்து வாழ்துக்களை தெரிவிக்கின்றோம்.



**பெயர் :- மரியன் வெற்றிவேல்**
**விலாசம் :- இலங்கை துறைமுகத்துவாரம்**
**வயது :- 62 கிராமிய கலை**

ஈச்சிலம்பற்றை பிறப்பிடமாகவும் இலங்கை துறைமுகத்துவாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரியன் மாரிமுத்து தம்பதிகளுக்கு முதலாவது பிள்ளையாக 1954ம் ஆண்டு பிறந்தார். இளமைக் காலம் முதலே ஆன்மீகம், கிராமிய கலைகள் போன்றவற்றில் ஈடுபாடு உடையவராக காணப்பட்டார். குறிப்பாக நாட்டுக் கூத்து கலை இவருக்கு கைவந்த கலை என்றே கூறவேண்டும். கூத்துக்களை முறையாக பழக்கி அரங்கேற்றியுள்ளார். பொதுவாக சராசந்தன் போர், கண்ணன்போர், பகவத்தன் போர், துரோணர் யுத்தம் போன்றவற்றை மேடையேற்றிய பெருமை இவரை சேரும்.

இத்தகைய பெருமைகளைச் செய்த மாரியன் வெற்றிவேல் அவர்கள் இப்பிரதேசத்தில் செய்து வரும் பணிகளுக்காக நாமும் இவரை பாராட்டி கௌரவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் :-** வைரமுத்து பாக்கியதுரை
**விலாசம் :-** பூமரத்தடிச்சேனை
**வயது :-** 82
**திறமை :-** கூத்து மத்தளம் இசைத்தல், மரண வீடுகளில் அம்மானை பாடல், சமூகசேவை

திரு.வைரமுத்து பாக்கியதுரை அவர்கள் ஈச்சிலம்பற்று கிராமத்தில் வைரமுத்து, செல்லப்பாக்கியம் ஆகியோருக்கு நான்காவது மகனாக பிறந்தார். 5ம் வகுப்பு வரை கல்வி கற்றுள்ளார். பின்னர் இளமைக் காலங்களில் நாட்டுக்கூத்து பழகும் இடங்களுக்கு சென்று கூத்து மத்தளம் இசைக்க பழகியுள்ளார். இவருக்கான இந்த கலையை பிரபலமான அண்ணாவியரான கற்பூர அண்ணாவியாரிடமே கற்றுக் கொண்டதாக கூறுகின்றார். திருமண வயதை அடைந்து பூமரத்தடிச்சேனையில் அருந்ததி அவர்களை கரம் பற்றி ஐந்து ஆண் பிள்ளைகளும் 05 பெண் பிள்ளைகளுமாக பத்து பிள்ளைகள் உண்டு. தனது 23 வயது தொடக்கம் அம்மானை பாடி வரும் இவர் ஆலயங்களிலும் தோஸ்திரம் பாடி வருகின்றார். வெருகல் பிரதேசத்தில் முக்கியமான ஒருவர் எனும் வகையில் இவரது ஆயுளும் ஆரோக்கியமும் நீண்ட காலம் நிலைபெறட்டும் என வாழ்த்தி வணங்குகின்றோம்.



**பெயர் :-** சின்னக்குட்டி காளிராசா
**விலாசம் :-** புன்னையடி
**வயது :-** 85
**திறமை :-** ஆன்மீகம்

சின்னக்குட்டி கண்ணமுத்து தம்பதிகளின் மகனாக மல்லிகைத்தீவு கிராமத்தில் பிறந்த இவர் புன்னையடி கிராமத்தை சேர்ந்த கண்மணி என்பவரை திருமணம் முடித்து ஆண் ஐந்தும் பெண் ஐந்துமாக பத்து பிள்ளைகளுக்கு தகப்பன் ஆனார்.

ஆன்மீகத்தின்பால் அதிக நாட்டம் உடைய இவர் புன்னையடி லம்போதகர் விநாயகர் ஆலயத்தை உருவாக்கி எந்தவொரு வேதமுமின்றி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இறை தொண்டு புரிந்து வருகின்றார்.

இது மாத்திரமின்றி கலையார்வம் உடைய இவர் கண்டி ராசா நாடகத்தில் ஆலப்பிள்ளை பாத்திரமேற்று நடித்து அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றவர். ஆன்மீக கலைத்துறை என்பவற்றில் ஆர்வமிக்க தங்களை மனதார பாராட்டி கௌரவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர் - வைரன் நாகேந்திரன்**
**விலாசம் - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று**
**வயது - 64**
**திறமை - விசக்கடி வைத்தியம்**



ஈச்சிலம்பற்றை பிறப்பிடமாகவும் விநாயகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் வைரன் நாகம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது பிள்ளையாக பிறந்தார். இளமை கல்வியினை ஈச்சிலம்பற்று சண்பக மகா வித்தியாலயத்தில் பயின்றார். குடும்ப வறுமை காரணமாக மேல் படிப்பை தொடர முடியாத இவர் தொடர்ந்து தனது தேவைகளை பொதுத் தேவைகளுக்காகவும் கலைகளுக்காவும் அர்ப்பணித்தார்.

மிக முக்கிய பணியாக விசக்கடி வைத்தியத் துறையில் அளவற்ற பணிகளை செய்த இவர் இது தொடர்பான அறிவினை புகழ்ந்த விசக்கடி வைத்தியரான திரு. இலட்சுமணன் அவர்களிடம் இருந்து கற்றுக்கொண்டு கடந்த 1985ம் ஆண்டு முதல் தனது அரிய பணிகளை முன்னெடுத்து வருகின்றார் இத்தகைய சேவைகளால் விசக்கடிக்கு உள்ளான பலரை குணப்படுத்தி காப்பாற்றிய இவர் மக்களால் இன்றும் மதிக்கப்படும் ஒருவராக வாழ்ந்து வருகின்றார் அயராது விசக்கடி கலையினை கட்டிக் காத்து வரும் இவரது பணிகளை நாமும் பாராட்டி கௌரவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரத்தில் ஒரு மாது.....



அடிமை எனும் விலங்கிட்டு ~ பெண்ணே
அடக்கியாள எண்ணாதே! ~ உன்
அன்னையுமோர் பெண் என்று ~ நீ
ஆயுள் வரை மறவாதே!

தடி கொண்டு தாக்கிடும் ~ உன்னை
மடி கொண்டு தூக்கிடும் ~ பெண்மை
மேலான சிந்தனையின் தன்மை ~ பெண்ணில்
மேலோங்கி நிற்பதுவும் உண்மை

தாய்க்குப் பின் தாரம் என்ற உண்மை ~ அதை
தானறியா மானிடரரின் வன்மை
கேலிச்சித்திரமாய்ப் பெண்ணை ~ தினம்
கேளிக்கை செய்கின்ற ஆண்மை

பெண் என்ற நூலகத்திதை நாடி – நீ
பொறுமை எனும் நலைப்பார் தேடி
ஆயிரம் அனுபவங்கள் பெறுவாய் ~ நீ
அன்புக்கோர் அடித்தளம் காண்பாய்

சொர்க்கத்தில் உருவாகும் திருமணம்
அதை வெறுத்து இன்னொரு மறுமணம்
புரிகின்ற ஆண்களின் சுயநலம்
புரியாத பெண்களின் துயர் ஒருபுறம்

கண்ணீரில் மிக்கின்றாள் தினந்தினம்
காலில் போடச் செருப்பில்லா நிலவரம்
மூன்று பிள்ளை முணுமுணுக்கும் கலவரம்
மூச்சடைத்து நிற்கின்றாள் ஒரு கணம்

விலைவாசி கூடியதால் வியக்கின்றாள்!
விடிகாலை உணவின்றித் தவிக்கின்றாள்
வீண் இந்த வாழ்க்கை என
நினைக்கின்றாள்
தேவனையால் கண்ணீர் தினம்
வடிக்கின்றாள்

கைவிடப்பட்டோம் எனத்துடிக்கின்றாள்
காதலித்த நாளை
எண்ணித்தவிக்கின்றாள்
என்ன? இந்த உலகமென
வியக்கின்றாள்
ஏன் இந்தத் துயரம் எனத்
துவள்கின்றாள்

**திரு. இ. விக்கினேஸ்வரன் (BA)**
தி/மூ/ சீனன்வெளி ஆதவன்
வித்தியாலயம்,
ஈச்சிலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈச்சிலம்பற்றுக் கிராமத்தின் வரலாற்றுச் சுருக்கம்

இற்றைக்கு பலநூறு வருடங்களுக்கு முன்பு இலங்கையில் முதன்மைத் துறைமுகங்களில் ஒன்றாக விளங்கிய இலங்கைத்துறை எனப்படும் வெருகல் பிரதேசத்தில் அமைந்து காணப்படும் பாரம்பரிய கிராமமாகும். இதன் பின்னணியை நோக்குவோமாக இருந்தால் இலங்கையை குளக்கோட்டு மன்னன் ஆட்சிசெய்த காலத்தில் தான் தேவாரப்புகழ் பெற்ற திருக்கோணேஸ்வரத்தை கட்டுவித்தான். இத் திருக்கோணேஸ்வரத்தின் நன்மை கருதியே இவன் கந்தளாய் குளத்தையும் கட்டுவித்தான் என்பது வரலாற்று உண்மை ஆனால் தற்போதய இலங்கை வரலாற்றை படிக்கும் இளம் பராயத்தினர் இதனை அறிந்திருக்க மாட்டார்கள். அதாவது கந்தளாய் குளத்தைக்கட்டியவன் இரண்டாம் அக்போ மன்னன் என்றே இவ்வரலாறு பதியப்பட்டது. இக்குளக்கோட்டு மன்னன் கோணேசர் ஆலயத்தை கட்டுவித்தது மட்டுமல்லாது அவ் ஆலயத்திருப்பணியின் பொருட்டு பல மக்கள் கூட்டத்தினரையும் கொண்டுவந்தான் என்பதையும் கோணேசர் கல்வெட்டினூடாக அறிய முடிகின்றது. குளக்கோட்டு மன்னனால் இவ்வாறு கொண்டுவரப்பட்ட மக்கள்கூட்டத்தினரில் ஒரு தொகுதியினரை இலங்கைத்துறை எனும் இடத்தில் இறக்கிவிடப்பட்டனர். இம்மக்கள் கூட்டம் இந்தியாவின் சிந்து நாட்டிலிருந்தே கொண்டுவரப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. அதனால் தான் இங்கு வாழும் மக்கள் சிந்து நாட்டவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். இம் மக்களை அழைத்து வந்ததன் நோக்கம் கோணேசர் ஆலயத்திற்கு வேண்டிய அபிஷகப் பொருட்களான பால், பசுநெய், அரிசி போன்றவற்றை வழங்குவதே ஆகும்.

குளக்கோட்டு மன்னனால் கொண்டுவரப்பட்ட இம் மக்கள் கூட்டத்தினரை தனது நோக்கத்தை அடையும் முகமாக இலங்கைத்துறையிலேயே இருத்தியுள்ளான். இம் மக்களின் விவசாயத்தேவையின் பொருட்டு ஏழு குளங்களையும் அமைத்துள்ளான். இவ் ஏழு குளங்களும் ஏழு குடிமக்களுக்காக அமைக்கப்பட்டதாகும். இவ் ஏழு குடி மக்களைப்பற்றி தெரியவருவதாவது இலங்கைத்துறையில் இறக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினரை ஏழு குழுக்களாகப் பிரித்துள்ளான்போலும். அதுவே குடிகள் என்று அழைக்கப்பட்டது. இந்த வெவ்வேறு குடிமக்களுக்கும் தனித்தனியாக குளங்களை அமைக்க முற்பட்டதனால்தான் அம்மன்னன் இலங்கைத்துறையில் ஏழு குளங்களை அமைத்துள்ளான் என்பது சமுகக்கருத்து. ஒரு குடிக்காக அமைக்கப்பட்ட குளத்தை இன்னுமொரு குடியினர் உபபோகப்படுத்தகூடாது என்பதற்காகவோ என்னவோ குளங்களின் இடைவெளி சற்று அதிகமாக காணப்படுகின்றது. இந்த அமைப்புமுறையினை தற்பொழுதும் இங்குகாணமுடிகிறது.

குளக்கோட்டு மன்னன் இம் மக்கள் கூட்டத்தினரை கொண்டுவந்து இறக்கிவிடும் பொழுது இம் மக்களால் சிந்து நாட்டிலிருந்து அவர்களின் வழிபாட்டிற்காக கொண்டுவரப்பட்ட செண்பகநாட்சி (துார்க்கை வடிவம்) அம்மன் சிலையையும் அதே இடத்தில் இறக்கி வழிபடச்செய்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்துறையில் இறக்கிவிடப்பட்ட இம் மக்களால் மன்னனால் எதிர்பார்க்கப்பட்ட நெல், அரிசி, பசுநெய் போன்றவற்றை நீண்ட காலத்திற்கு வழங்கமுடியாமல் போய்விட்டது. அதற்கான காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது. அதாவது இலங்கைத்துறையின் நில அமைப்பு விவசாயத்துறைக்கு பொருத்தப்பாடானதாக அமையவில்லை. உவர் நீரேரியால் கடலுடன் தொடுக்கப்பட்ட உப்பு நீர் கொண்ட ஆறுகள் காணப்பட்டதால் கடற்பெருக்கினால் காலந்தோறும் உப்பு நீர் பெருகி நிலப்பரப்பினை உவர்தன்மையாக மாற்றுகின்றது. அத்தோடு கடல்கோளும் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்கலாம். இதனால் காலப்போக்கில் பயிர் செய்யக்கூடியதாக இவ்விடம் காணப்படவில்லை. பயிர் செய்யக்கூடிய இடத்திலேயே கால்நடைகளையும் வளர்க்கமுடியும். இவ்வாறான காரணங்கள் இம் மக்கள் குடியேற்றப்பட்ட நோக்கத்திற்கு இடையூறாக அமைந்திருந்தது.

குளக்கோட்டு மன்னன் தான்கொண்டுவந்த மக்களால் தன்னால் எதிர்பார்க்கப்பட்ட பலனை அடையமுடியாது என்பதை உணர்ந்து இவர்களுக்கான வேறு பொருத்தமான இடத்தை தெரிவுசெய்தான். அதாவது மன்னன் கொண்டுவந்த மக்கள் குடியினரை நெற்செய்கைக்குப் பொருத்தமான நிலவளம் கொண்ட ஈச்சிலம்பற்று, ஆநெய்த்தீவு போன்ற இடங்களில் குடியேற்றினான். மேற்கூறப்பட்ட கிராமங்களைப் பார்த்தால் மத்தியில் குடிமனைகளும், குடிமனைகளைச் சூழ பரந்த வயல்வெளிகளும் காணப்படுகின்றது. இக்காட்சிகள் இன்றும் சாட்சியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கிராமங்களில் இருந்தே கோணேசர் ஆலயத்திற்காக வேண்டிய நெல், அரிசி, பசுநெய் போன்றவை வழங்கப்பட்டு வந்தது. அதாவது ஈச்சிலம்பற்றிலிருந்து பூசைக்கு வேண்டிய அரிசியும், ஆநெய்த்தீவில் இருந்து பசுநெய்யும் வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. பொதுவாக கொட்டியாரப்பற்றில் காணப்படும் பள்ளிக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்று, ஆநெய்த்தீவு போன்ற கிராமங்களில் வாழுகின்ற மக்கள் கோணேசர் ஆலயத்திற்கான அரிசியை வழங்கும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டவர்கள் என்பது வரலாறு அதனால்தான் கொட்டியாபுரத்தில் அமைந்துள்ள இந் நான்கு கிராமங்களும் பல்வேறு தொடர்புகளால் பின்னிப்பிணைந்துள்ளது.

ஈச்சிலம்பற்று எனும் பெயர்வரக்காரணமாக பின்வரும் காரணம் சான்றாக அமைந்துள்ளது. இம் மக்கள் இலங்கைத்துறையில் இறக்கப்படும்பொழுது தங்களது வழிபாட்டுத் தெய்வமான செண்பகநாட்சி அம்மன் சிலையினையும் தம்மோடு கொண்டுவந்து சிறு ஆலயம் அமைத்து வழிபட்டார்கள் பின்பு இவர்கள் தொழில் ரீதியாக இடம்மாறும்போது அவ் வழிபாட்டுத் தெய்வச் சிலையினையும் தம்மோடு கொண்டுவந்து ஈச்சிலம்பற்றில் ஆலயம் அமைத்து வழிபட்டார்கள். இத் தெய்வச்சிலையானது இரண்டு சிலம்புகளை அணிந்துள்ளமையால் இக்கிராமம் ஈர் + சிலம்பு + அத்தை இரண்டு சிலம்புகளை அணிந்த பெண்தெய்வம் குடிகொண்டுள்ளதால் ஈச்சிலம்பத்தை என அழைக்கப்பட்டுள்ளது. கொட்டியாபுரப்பற்றில் இக்கிராமம் அமைந்துள்ளதால் கொட்டியாபுரபற்றின் ஒரு உப பற்றாக இது மாற்றப்பட்டதால் இது ஈச்சிலம்பற்று என வழங்கப்பட்டது. பொதுவாக 10 கிராமங்களை உள்ளடக்கிய ஊர்த்தொகுதியே பற்று என அழைத்துள்ளனர். அதனால்

ஈச்சிலம்பற்றை மையமாகக் கொண்டு பல கிராமங்கள் காணப்பட்டன இவைகளுக்கு தலைமைக்கிராமமாக ஈச்சிலம்பற்றை விளங்கியுள்ளது. அதனால்தான் இப்பிரதேசத்தில் பல காலமாக ஈச்சிலம்பற்று என்றே ஒரே கிராம சேவையாளர் பிரிவாக (214) உருவாக்கப்பட்டு நிருவாக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை பலர் அறிவார்கள் இம்மக்களின் வம்சாவளி ஒற்றுமைக்கு இவர்களின் திருமணமுறை சான்றாகும். அதாவது முன்கூறிய பள்ளிக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு, ஆநெய்த்தீவு போன்ற கிராமங்களுடன் மட்டுமே' திருமண தொடர்பை காலம் காலமாக ஏற்படுத்திவந்துள்ளனர். இப்பாரம்பரிய நடைமுறை 21ஆம் நூற்றாண்டிலும் பின்பற்றப்பட்டு வந்தாலும் காலமாற்றத்தால் வேறு கிராமத்தவரோடு புறநடையாக ஏற்படுத்தப்படுகின்றமையையும் குறிப்பிடலாம்.

இம் மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே அமைந்து காணப்படுவதோடு இம் மக்கள் சமூகம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் ஏற்கனவே விபரிக்கப்பட்டுள்ளது. இவர்களின் கிராமங்கள் பூர்வீகமான குடியிருப்புகளாகும். இக் குடியிருப்புகளைச் சூழ அமைந்து காணப்படும் வயல்களும், சிறு குளங்களும் இவர்களின் பூர்விகத்தொழிலுக்கு சான்றுபகிர்கின்றது. இவர்களின் காணி உரித்துக்கள் நானூறு வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்ததாகும்.

ஈச்சிலம்பற்றுக் கிராமத்தின் மூலத்தொழில் விவசாயமாக இருந்தபோதும் கால்நடைவளர்பிலும் இவர்கள் முதன்மை பெற்றிருந்தனர். எருமைகள், பசுக்கள் போன்றவற்றை வளர்த்ததன் ஊடாக நிறைவான வருமானத்தை பெற்றிருந்தனர். ஆனாலும் "மாடு" என்ற சொல்லுக்கு செல்வம் என்ற பொருளும் இருப்பதால் தாம் வளர்த்த மாடுகளை பெரும் செல்வமாகவே பேணிக்காத்து வந்தனர். ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன்னர் அதிகாலைவேளையில் அயல் கிராமத்துமக்கள் ஊரை நிறைத்துவிடுவார்கள் காரணம் இங்கு ஒவ்வொரு வீட்டிலும் எருமைப்பால் காய்ச்சி தயிர் காச்சுவார்கள் அதன் ஆடையை நெய் உற்பத்தி செய்வதற்காக எடுத்துவிட்டு மிகுதியான தயிரை ஊரவர்களுக்கு வழங்குவது வழக்கம். இத்தையிரைப் பெற்றுச்செல்வதற்காக முதல்நாள் மாலையே தயிர்ப் பாத்திரங்களை வைப்பார்கள் இவ்வாறு தாம் வைத்த பாத்திரங்களில் தயிரைப் பெற்றுச்செல்வதற்காகவே அயல் கிராமமக்கள் அதிகாலையில் இக் கிரமத்திற்கு வருவது வழக்கம். பசி தீர்க்கும் தயிரை அள்ளிக்கொடுத்த வரலாறு இக்கிராமத்திற்கு இருப்பதை யாரும் மறந்துவிடமாட்டார்கள்.

ஈச்சிலம்பற்றில் வாழும் சிந்துநாட்டு மக்கள் சமூகத்தில் நான்கு குடிகள் பிரதானமாக காணப்பட்டது. அதில் படத்தார் குடி 02. சக்கரவத்தி குடி 03. வீரப்பணிக்கர் குடி 04. கவுத்தன்குடி இந் நான்கு குடிகளுடன் மேலும் நான்கு குடிகளும் காணப்பட்டன 01 வில்வராசன் குடி 02. மரைக்கார் குடி (கிளை) 03. சங்கமன் குடி 04. கார்த்திகேசன் குடி போன்ற குடிகளும் சேர்ந்து குடி அமைப்புக்கள் காணப்பட்டன. மேற்கூறப்பட்ட நான்கு குடிகளுமே ஆலய நிருவாக அமைப்பில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதனால் இந் நான்கு குடி மக்களில் இருந்து ஆலய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களை 'அடப்பன்' என்ற பெயரில் அழைத்து முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவந்திருந்தார்கள். அடப்பன் என்ற பதவிப்பெயர் அக்கடமைகளை ஆற்றியவர்களின் பெயரோடு ஒட்டி இருந்தமையையும் குறிப்பிடலாம். அத்தோடு இந் நான்கு குடிகளுக்கான சீர்வரிசையும் ஒதுக்கப்பட்டிருந்தது. அதாவது திருமணத்தின்போது இருபத்தொரு குடம் தண்ணீரும் பந்தருக்கு இருபத்தொரு காலும் என ஒதுக்கப்பட்டிருந்தது. ஏனைய குடிகளுக்கு பதினெட்டு குடம் தண்ணீரும் பந்தருக்கு பதினெட்டு கால்களென ஒதுக்கப்பட்டிருந்தது. இந் நடைமுறை பாரம்பரியமாக இன்றும் பேணப்பட்டு வருவதை நாம் காணலாம்.

மேலும் வெருகலம்பதி சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் நிருவாக அமைப்பில் காணப்படும் கௌரவப் பதவியான முதன்மைக் கங்காணம் எனும் மிகவும் முக்கியமான பதவி இக்கிராமத்திற்கே உரியதாகும். இது இன்னும் மரபு வழியாக பின்பற்றப்பட்டு வருகின்றமையை யாவரும் அறிவார். வெருகலம்பதி ஆலயத்தின் பதின்மூன்றாம் நாள் உற்சவம் ஈச்சிலம்பற்றுக்கிராமத்திற்குரியதாகும். ஆனாலும் ஆநெய்த்தீவு மக்களும் இத்திருவிழாவுக்கு உரித்துடையவாகளாவர். இப் பதின்மூன்றாம் நாள் திருவிழா நாளானது இக்கிராமத்தின் இளைஞர் யுவதிகளின் திருமணநாளாகும். இந் நாளிலேயே பார்த்துவைத்த திருமணங்கள் அதிகமானவை நடைபெறுவதுண்டு. இந் நடைமுறை தற்காலத்தில் குறைந்துவிட்டமையையும் குறிப்பிடவேண்டும்.அத்தோடு இக்கிராமத்துக் கலைகளாக கும்மி, கோலாட்டம், வசந்தன், நாட்டுக்கூத்து போன்ற கலை அம்சங்களாகக் காணப்படுகின்றது. மற்றும் இக் கிராமத்து விளையாட்டுக்களாக கிளித்தட்டு, வாரோட்டம், கிட்டியும் புள்ளும், எறிபந்து, சிரட்டைப்பந்து, கோத்துப்போடுதல், வட்டக்கோடு, பாண்டி, அம்மாக்கிழவி, தட்டுக்கோடு போன்ற விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம்.

1957இல் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக ஈச்சிலம்பற்றில் வாழ்ந்த மக்கள் இலங்கைத்துறைமுகத்துவாரம், பூநகர், பூமரத்தடிச்சேனை,புன்னையடி போன்ற தற்போதைய கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றதனால் ஈச்சிலம்பற்றில் வழ்ந்த சனத்தொகையின் செறிவு சற்று குறைந்து காணப்படுகின்றது. மேலும் 1985ம் ஆண்டில் ஏற்பட்ட வன்செயல் இராணுவ நெருக்கடி காரணமாக சின்னக்குளம், விநாயகபுரம், உடப்புக்கேணி போன்றவை மறைவிடமாக கொள்ளப்பட்டதால் அவைகளும் பிற்காலத்தில் கிராமங்களாக மாற்றமடைந்து ஈச்சிலம்பற்று எனும் தாய்க்கிராமத்திற்கு அணிசேர்ந்து நிற்கின்றது. குடித்தொகைகளுக்கு ஏற்ப பிரதேச கிராம எல்லைப் பிரிப்புகளுக்கு அமைய துணைக்கிராமங்களாக சின்னகுளம், உடப்புக்கேணியும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இம் மக்களின் பூர்விக வரலாறுகள் இதுவரை எவராலும் தேடப்படவில்லை இதனால் தமது வரலாறு தெரியாத மக்களாகவே இவர்கள் கணிக்கப்பட்டுள்ளமையால் பிழையான புனைகதை வரலாறுகள் இம் மக்களுக்கு கூறப்படுவது பொருத்தமற்றதாகும்.

**ப. மதிபாலசிங்கம்**
வட்டாரம் - 04,
**ஈச்சிலம்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் துறைமுகத்துவாரம் பெயர் வரக் காரணமான கதை

**ஈழமணித்திரு நாடு அதில்**

**எழில் பெறும் மாங்கனித்தீவு**

**கோலக்குளிலென நாளும்**

**குரைகடலை கவி பாடும்**

இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கிலங்கையின் தலைநகராகிய திருகோணமலை மாவட்டத்தின் தெற்கு எல்லையில் புண்ணிய நதி மகாவலிக்கரையாருகே அமைத்த வெருகலம்பதியானுடைய வெண்கொற்றைக்குடைக்கீழ் ஆழப்படும் பழந்தமிழ் பிரதேசமாகிய ஈச்சிலம்பற்று பிரதேசம் என்று அழைக்கப்பட்டு தற்போது வெருகல் பிரதேசமாகவுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் வடகிழக்கு திசையில் (ஈசானிய மூலையில்) அமைந்து வங்கக்கடலருகே வெள்ளை மணற்பரப்போடு விரிந்து பரந்திருக்கும் அழகிய மாங்கனித்தீவுதான் இந்த இலங்கைத்துறைமுகத்துவாரம் இக்கிராமத்தினை இப்பிரதேசத்தின் வரலாற்று திறவுகோல் என்றாலும் அது மிகையாகாது

இலங்கை சோழப்பேரரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போது சைவமும் தமிழும் இரண்டறக்கலந்து மிகத்துரிதமான வளர்ச்சி கண்டன என்பது வரலாற்று உண்மை. இவ்வாறு ஈழத்தில் தமது அதித செல்வாக்கினை நிலைப்படுத்திய சோழப்பெருமன்னர்களில் சோடகங்கன் எனும் குளக்கோட்டு மகாராசனும் ஒருவனாவான் சிவபெருமான் மீது அளவற்ற காதல் உடையவனாகிய இவன் சக்தி வழிபாட்டிலும் ஏனைய வைதீக சமயங்கள் பாலும் சிறந்த ஈடுபாடுடையவனாகவே காணப்பட்டான்.

தான் முதன் முதலாக ஈழத்திற்கு வருகை தரும் போது சிவலிங்கங்கள் சிலவற்றோடும் சக்தியின் ஒரு வடிவமாகிய செண்பகநாச்சி அம்பாளின் திருவுருவங்கள் சிலவற்றுடன் தனது படைகளில் ஒரு தொகுதினரையும் ஏழு குடிகளைச் சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினரையும் கலம் ஒன்றிலே ஏற்றி வந்து முதன்முதலாக தரையிறங்கிய துறை இது என்பதால் அன்று முதல் இவ்விடம் சோழமன்னர்களின் இலங்கைக்கான துறைமுகமாகியது என வழங்கப்படுகின்றது.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட அம்மன் திருவுருவத்தில் ஒன்றினை இங்கு பிரதிஸ்டை செய்ததுடன் தாம் கொண்டு வந்த குடிமக்களுக்காக ஏழு குளங்களை அமைத்து அங்கே அவர்களை குடியமர்த்தினான் என்றும் இப்பகுதியில் நடைபெற்ற சமயப்பணிகளுக்கெல்லாம் அவர்களை ஈடுபடுத்தினான் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு சோழமன்னன் குளக்கோட்டு மகாராசா அமைத்த செண்பக நாச்சி அம்மன் கோயில், ஏழு குளங்கள் மற்றும் கட்டட எச்சங்களை இன்றும் இங்கு காணமுடிவது இவற்றுக்கான வரலாற்று சான்றாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடம் ஆறும் கடலும் கலக்கும் கழிமுகம் ஒன்றாக அமைந்ததனால் கால ஓட்டத்தில் இவ் ஆற்றின் இரு புறங்களிலும் மக்கள் குடியிருப்புக்கள் பரம்பலடைய தொடங்கி அதன் பின்னர் ஆற்றின் ஒருபுறத்தே ஏற்கனவே உருவாகிய குடியிருப்பு தொடர்ந்து இலங்கைத்துறை என அழைக்கப்பட்ட மறுபுறத்திலே உருவான குடியிருப்பு தொடர்ந்து ஆற்றுமுகத்துடன் கூடிய இடமாக அமைந்ததனால் இலங்கைத்துறைமுகத்துவாரம் எனவும் அழைக்கப்படத் தொடங்கியதாக அறியமுடிகின்றது.

குளக்கட்டு மகாராசா தான் வந்திறங்கிய துறைமுகத்தின் மருங்கிலே அமைந்திருந்த மலைசார்ந்த பகுதியில் மலைக்கோட்டம் ஒன்றை அமைத்து அங்கு தமது கடற்போக்குவரத்துக்கு பாதகம் ஏதும் இல்லாமல் இங்கு கொண்டுவந்து சேர்பித்தமைக்காவும் இனிமேல் இவ்வழியாக நடைபெறும் எந்த போக்குவரத்துக்கும் ஆபத்து ஏற்படாமல் இருப்பதாகவும் திருப்பாற்கடலிலே பள்ளி கொள்ளும் பரந்தாமனுக்கு நன்றி சொல்லி அவரது பாதங்களை வழிபடக்கூடியதாக பெரியசுவாமி என்ற பெயரிலே அங்கு வழிபாட்டிடம் ஒன்றை அமைத்ததாகவும் வழங்கப்படுகின்றது.

திருமாலின் பாதாரங்களை சிறப்பாக பூசிக்கும் வழிபாட்டு தலம் ஒன்று இங்கு அமைந்தமையினாலும் குஞ்சிதபாதம் என்பது இறைவனது பூ போன்ற மென்மையான திருப்பாதங்களை குறிப்பதாக அமைவதனாலும் இம்மலைக்கோட்டம் குஞ்சியபாதமலை என அழைக்கப்படத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது. குஞ்சிதபாதமலை எனும் சொல் காலஓட்டத்தில் மருவி குஞ்சிதப்பா மலை என்றும் சிலவேளைகளில் இம்மலை அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பச்சைவண்ண மேனியன்
பாம்பணையின் நாயகன்
குடியிருக்கும் வண்ணமலை போவோம்
திருக்குஞ்சித பாத மலை போவோம்.....

கோணேசர் குடைபரவு
கொட்டியாரப்பற்றினிலே
வெருகசைந்து பாட்டினிலே
இருசிலம்பு அத்தையவள்
அருள் சேர்ந்த இலங்குதமிழ்
குளக்கோட்டன் இறங்கு துறைமுகத்தே
காத்து ரட்சிக்கும்
கடவுளை சூழல் தொழுவோம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் சித்திரகேசரியின் கவிதைகளின் வரிகளும் இதனை ஒத்ததாக அமைந்திருப்பதை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

இவ் வரலாற்றிடத்தில் சோழத்தமிழ் மன்னன் குளக்கோட்டு மகாராசா வந்திறங்கி, குடிபரப்பி, கோலோட்சிய இம்மலைக் கோட்டமே இன்று லங்காபட்டுண என்ற பெயருக்குரிய இடமாக வரலாறு மாற்றி எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. 2006 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கு பின்னர் இவ்விடம் முழுமையாக பௌத்த சமயத்தவர்களுக்கான வழிபாட்டிடமாக மாற்றப்பட்டுள்ளது. என்பதே இதன் இன்றைய நிலை ஆகும்.

**சி. சித்திரவேல்**
இலங்கைதுறை முகத்துவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பூறல் கிராமம்

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கே நல்லூரும் கிழக்கே வங்கக் கடலும் தெற்கே சீனன்வெளி கிராமமும் மேற்கே உப்பாறு வாவி (களப்பு)யும் நாற்புற எல்லைகளாக அமைந்ததுதான் இக்கிராமம் உப்பூறல் எனும் பெயரானது எவ்வாறு வந்ததெனில் வாவி மற்றும் களப்புகளுடன் கரைச்சை பகுதிகளில் உப்பு அதிகமாக விளைந்த இடம் அதாவது உப்பு ஊறிய (விளைந்த) இடமாகையால் உப்பூறல் என அழைக்கப்படலாயிற்று.

மீன்பிடியுடன் விவசாயமும் ஜீவனோபாய தொழிலாக காணப்படுவதுடன் கால்நடை வளர்ப்பும் சிலரால் மேற்கொள்ளப்படுகின்றது. சுமார் 141 குடும்பங்களை உள்ளடக்கிய இக்கிராமம் கடந்த கால சுனாமி, யுத்தம் போன்ற அனர்த்தங்களால் பாதிப்புற்ற இக்கிராமம் தற்போது படிப்படியான அபிவிருத்திகளை கண்டு வருகின்றது. இங்கு கடல், களப்பு போன்றன இயற்கை அன்னையின் இணையற்ற வளங்களாக அணி செய்கின்றது.

இங்கு கிராமிய தெய்வ வழிபாட்டில் நாகதம்பிரான், வைரவர், காளி, வீரபத்திரர், மீனாட்சி அம்மன் உட்பட பாரம்பரிய வழிபாட்டுடன் கூத்து, வசந்தம், கும்மி கலைகளும் அக்காலத்தில் காணப்பட்டது. தெய்வீக பக்தியில் தெய்வமாடுதல் மூலம் தான் அவர்கள் வாக்கு கேட்டு நற்காரியங்களை செய்து காரியங்களில் வெற்றி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**அ. சுபேந்திரகுமார்,**
கிராமஅலுவலர்.

# சீனன்வெளி

| வடக்கு - உப்பூறல் | கிழக்கு - கடல் | தெற்கு - முகத்துவாரம் | மேற்கு - களப்பு |
|---|---|---|---|

சீனன்வெளி கிராமம் என்பது அக்காலத்தில் சீனர்கள் சுற்றுலாவுக்காக அதிகளவில் வந்து தங்கி நின்று சென்ற இடமே சீனன்வெளியாகும். இங்கு அம்மன் வழிபாட்டுக்கு பிரபல்யமான இடமாகும். சிறு தெய்வ வழிபாட்டில் இங்கு முக்கிய வழிபாட்டு அம்சங்கள் இன்றும் பின்பற்றப்படுகின்றது.

ஆறு, கடல்வளம் நிறைந்த இடமாக காணப்படுவதுடன் இங்கு தெய்வமாடுதல் வாக்குக்கேட்டல் நற்காரியங்களை நிறைவேற்றுதல் காரியங்களில் வெற்றி பெற்றுள்ளனர். இங்குள்ள மக்கள் யுத்தம், சுனாமி போன்ற பேரழிவுகளில் இருந்து பாதிக்கப்பட்டனர். இங்கு மாரி மழையை நம்பி விவசாயம் செய்யும் இடமாகவும் காணப்படுகிறது. இங்கு மலைவளங்களும் காணப்படுகின்றது.

சீனன்வெளியில் சல்லி எனும் ஒரு சிறிய மலைப்பகுதியில் குடியிருப்பு ஆரம்பமாகி சனத்தொகை பெருக்கம் ஏற்பட்டதன் காரணமாக கிராமம் பரவலடையத் தொடங்கியது. இதுவே சீனன்வெளி கிராமத்தின் தொன்று தொட்டு வந்த வரலாறு.

**அ. சுபேந்திரகுமார்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்மிப் பாடல்

## இலங்கைத்துறையும் கமழும் மண்வாசனையும்

செந்தமிழ் வாழ்கின்ற சிற்றூராம் - அன்னை
செண்பக நாட்சியின் அருளூராம்
இத்தரை மாந்தரின் வாழ்வினுக்கு - இங்கு
இன்னருள் காட்டிடும் மாதவியாள்
(தந்தனத்தனதானா தனதானதந்தனத்தானானா
தந்தனத்தானதன தான தன...)

மாதவியாள் வந்து சேர்ந்த துறை - இங்கு
மன்னரும் மக்களும் வாழ்ந்த துறை
மாதவியாள் புகழ் பாடுங்கடி - அந்த
மாதுவின் செவி கேட்கக் கொட்டுங்கடி
(தந்தனத் தன தானா தனதான...)

ஆற்றங் கரையிலோர் மலையிருக்கு - அதற்கு
மாதவி கல்லென்னும் பெயரிருக்கு
மாதவி குடிகொண்டு வாழ்ந்த மலை - அவள்
மஞ்சள் அரைத்துக் குளித்த மலை
(தந்தனத்தனதானா தன தான தந்தனத் தானானா தந்தனத்தன...)

ஏழு குளங்களும் இங்கிருக்கு - பழம்
ஏழ்மைக் குடிகளும் இங்கிருக்கு
தாமரை மலர்கள் இங்கிதமே - நன்றாய்த்
தாவி வளருது கண்டீரோ?
(தந்தனத் தன தானா தன...)

சேற்றில் வளருது செந்தாமரை - இங்கு
பூத்துக் குலுங்குது ஊர் முழுவதும்
மாற்று மதத்தவர் மாசின்றியே - அன்று
மாதவியாள் மனம் மகிழ்ந்திருந்தாள்
(தந்தனத் தன தானா தன...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் துறையெனும் பதியினிலே - நின்று
இன்புறு செண்பக நாட்சியம்மா
இன்பர் உலகோரைக் காப்பாளாம் - அவள்
இன்னருள் புரிவதைப் பாருங்கடி
(தந்தனத் தன தானா தன...)

தீராத வினைகளைத் தீர்ப்பவளாம் - அன்னை
தீயினால் தீங்கினை எரிப்பவளாம்
திக்கெட்டும் அருளாட்சி புரிபவளாம் - தினம்
தீதின்றி உயிர்களைக் காப்பாளாம்
( தந்தனத் தன தானா தன...)

உடுக்கடி ஓசையில் உறைபவளாம் - அவள்
உக்கிர வேசத்தைத் தணிப்பவளாம்
அம்மையாள் கைதனில் உடுக்கிருக்கு - அதில்
எங்கள் கலைக்குமே ஊற்றிருக்கு
(தந்தனத் தன தானா தன...)

மருதமும் நெய்தலும் மாண்பூட்டும் - நல்ல
நில வளம் நீர் வளம் நிறைந்த இடம்
நித்தமும் வியர்வையை உரமாக்கி - எங்கள்
நிம்மதி வாழ்வினை உயர்த்திடுவோம்
(தந்தனத் தன தானா தன தான...)

உழைப்பினில் களைப்பினைப் போக்கிடவே - அன்று
உருக்கமாய்க் கும்மியைப் பாடினரே
ஆணோடு பெண்ணுமாய்க் கூடி நின்று
ஆனந்தக் கும்மியைக் கொட்டினரே
(தந்தனத் தன தானா தன தான...)

சிறுமியர் மங்கையர் மூதாட்டி - நல்ல
சிரிப்புடன் விந்தையாய்க் கும்மி பாடி
சிந்தையைக் குளிரவே வைத்தனரே - அங்கு
சிரம் தனில் கும்மியைக் கொட்டினரே
(தந்தனத் தன தானா தன தான...)
ஆற்றுவெளிதனில் ஓடம் ஏறி - இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடவர் மகளிரும் சேர்ந்து நின்று பாடாய் உழைப்பதைப்
பாருங்கடி அதில் மாட்சியில்
உள்ளம் மிதக்குதடி
(தந்தனத் தன தானா தன தான...)

தொட்டாண்டி குத்தியே தொழில் புரிவார் - அங்கு
கொட்டாவி இன்றியே சவள் வலிப்பார்
சொத்தாக்கி கைதனில் பணம் உழைப்பார் - மண்ணில்
முத்தான வாழ்க்கையை அமைத்திடுவார்
(தந்தனத் தன தானா தன தான...)

சில்வண்டு பூச்சிகள் கானம் பாட - அதில்
கண்ணாக்கிளைகளும் கூடி ஆட
ஆற்றுவெளிதனில் ஓடம் ஏறி - செல்லும்
அற்புதக் காட்சியைப் பாருங்கடி
(தந்தனத் தன தானா தன...)

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி மாதவி
புகழ் பாடிக் கொட்டுங்கடி
மண்ணின் பெருமையைப் பார் போற்ற கூடி
மங்கையர் கைகளைக் கொட்டுங்கடி
(தந்தனத் தன தானா தன...)

பாடல் ஆக்கம் :- திரு.து.விக்னேஸ்வரன்
தி/மு/இலங்கைத்துறை
அலைமகள் வித்தியாலயம்
ஈச்சிலம்பற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத்துறைக் கிராமத்தின் கல்விநிலையின் ஓர் கண்ணோட்டம்

## அறிமுகம்.

ஆய்வு என்பது உண்மையைத் தேடலுக்கான வழிமுறையாகும். அது முடிவானது அல்ல பிறிதோர் ஆய்வுக்குத் தொடக்கமாக அமைகின்றது.

கல்வி என்பது அபிவிருத்திக்கான திறவுகோல் ஆகும். அமைதியும், ஆக்கத்திறனும் அமைந்த வாழ்க்கைக்கான அடிப்படை என்பதுடன் அது அனைவருக்கும் சமத்துவமாய் கிடைக்கவேண்டிய உரிமை என்பது ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை மனித உரிமைகள் உறுப்புரையில் பொறிக்கப்பட்டுள்ளது.

உள்ளமைந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்கொணர உதவும் செயல்முறை கல்வி என்ற சொல்லுக்கு முழுமையைக் கொடுக்கின்றது. மேலும் கல்வியானது. ஒருவனைப் பூரண மனிதனாக்குகின்றது. அதனால்தான் அக் கல்வியை எமது நாட்டில் அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து இலவசமாக வழங்குகின்றது. அதனைப் பெறாது இடையிலே கல்வியைத் துறந்து 'கண்கள் இருந்தும் பார்வையற்ற மனிதனைப் போல்' வழிதப்பிப் போகும் மாணவர் சமுதாயத்தின் காரணங்களை அறிந்து நெறிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு அசிரியர்களது கடமையாகும்.

ஆங்கில கல்வியாளர் 'வில்லியம் வோ்டஸ் வர்த' மனிதத் தன்மையை மனிதர் பெற உறுதுணையாக விளங்குவது கல்வியாகும். இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் தனது வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு கொண்டுள்ள உள்ளாற்றலை விருத்தி செய்வதற்கு கல்வி ஒரு பக்கத் துணையாக விளங்குகின்றது. வருங்காலத்தில் பல சவால்கள் தோன்றலாம் UNESCO இல் நிறுவப்பட்ட 'தெலோர் ஆணைக்குழு' இனங்கண்டது போல் ஒவ்வொரு தனிநபரிலும் கற்றல் ஒரு பொக்கிசமான உள்ளடக்கமாகும்.

இலங்கை யாவருக்கும் கல்வியினை உறுதிப்படுத்துவதில் ஒரு நீண்ட கால வரலாற்றை கொண்டுள்ளது C.W.W. கன்னங்கரா அவர்கள் பல செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தி ஆரம்ப கல்வி தொடக்கம் சர்வகலாசாலை வரை இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது முக்கிய விடயமாகும்.

எனவே நாம் வாழும் சமுதாயத்தில் இவ்விதம் கல்வியைத் தொடர முடியாமல் நிறுத்திக்கொள்ளும் மாணவர்களையும் அதற்கான காரணங்களையும் அறிந்து அவர்களுக்கு கல்வியின் அவசியத்தை உணர்த்தி கல்வியை தொடரச் செய்வது எமது கடமையாகும். இதற்கென இலங்கைத்துறை கிராமத்தை மையமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பெறப்பட்ட தரவுகள், தகவல்களின் அடிப்படையிலும் பெற்ற முடிவுகளைக் கொண்டே தொகுத்துள்ளேன்.

## ஆய்வும் அதற்கான விளக்கமும்

கல்வித்துறையானது இன்று மிகப்பரந்த துறையாக பரிணமித்துள்ளது. ஒருவரது முழு வாழ்க்கைக் காலத்திற்கும் முழுதாகக் கற்று முடிக்க முடியாததாகும். கல்வியென்பது ஒருவரால் மற்றொருவருக்கு வழங்கக் கூடியதொன்றல்ல மாறாக சுயமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதொன்றாகும்.

அடிப்படைக்கல்வி தொடருறுக்கல்வி ஆகிய கோட்பாடுகளுடன் பின்னிப் பிணைந்து யாவரும் கல்வி என்பது இன்று உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது 1960இல் கராச்சித்திட்டத்தில் சர்வசன ஆரம்பக்கல்வி வலியுறுத்தப்பட்டது. 1990ல் தாயிலாந்து ஜெம்ரியன் நகரில் நடந்த கல்விக்கான முதலாவது உலக மாநாடு அடிப்படைக் கல்வித் தேவைகளை நிறைவு செய்தல் யாவருக்கும் கல்விக்கான உலகப் பிரகடனத்தை மேற்கொண்டது. 2000ம் ஆண்டில் செனிக்கல் நாட்டில் "DARKAR" நகரில் உலகக்கல்வி மகாநாடு இதனை மேலும் வலியுறுத்தியது, இதன் சாராம்சம் ஒவ்வொரு சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் கல்விச் சாதனையை எட்டச்செய்தலாகும்.

இலங்கையானது கல்வி மனிதனின் அடிப்படை உரிமை என்னும ஐக்கிய நாடுகள் சாசனத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும் சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயமாக ஆரம்பக்கல்வியைப் பெறும் பொருட்டு சகலருக்கும் கல்வி எனும் ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தை இலங்கை ஏற்று அதில் கைச்சாத்திட்டுள்ளது. மேலும் இலங்கையின் சாசனமானது எழுத்தறிவின்மையை இல்லாதொழிப்பதை அரச கொள்கையின் வழிகாட்டல் தத்துவமாக கொண்டுள்ளது. இலங்கையில் கல்வி பெறும் வாய்புக்களில் கூட நகரம், கிராமங்கள் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் எமது நாட்டில் பெருந் தோட்டத்துறைகள், நெடுங்தொலைவிலுள்ள கிராமங்கள், வசதிகுறைந்த கிராமங்கள், கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவர் சமூகங்கள் போன்ற இடங்களில் எழுத்தறிவின்மை, இடைவிலகல் இன்னமும் நிலவுகின்றது.

கட்டாயக் கல்வி பெற வேண்டிய வயதுக் குழுவிலுள்ள பிள்ளைகளில் முழு இலங்கையிலும் 14% த்தினர் பாடசாலை செல்வதில்லை அதிலும் கணிசமானோர் பாடசாலையில் கல்வி கற்கும் போது இடைவிலகுகின்றனர். இது பாரிய பல பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் இடைவிலகுவதால் கட்டாய கல்வி கேள்விக்குறியாகியுள்ளது. முதலாம் தரத்தில் சேர்க்கப்படும் எல்லா மாணவர்களும் 11ம் தரம் வரை கல்வி பயில்கின்றார்களா? என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமது பிரதேசத்தில் கல்வி வளர்ச்சி ஒரு சரிவு நிலையில் செல்கின்றது என்பது கண்கூடாகும். இதற்கான காரணங்களை கண்டறிந்து உற்று நோக்குவோம்.

**ஆரம்பநிலை**

திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலளார் பிரிவில் மிகப் பழம்பெரும் கிராமமாக இலங்கைத்துறை காணப்படுகின்றது. இப் பிரதேச மக்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் (சுனாமி), வன்செயல், இடப்பெயர்வையும் சந்தித்தவர்கள், அத்துடன் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடி, கூலித் தொழிலைக் கொண்டவர்கள் ஆகும்.

இக் கிராமத்தில் இற்றை வரைக்கும் இரண்டு (02) மாணவர்கள் உயர்தரம் சித்திபெற்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்று வருகின்றனர். அவ்வாறு இருந்தும் பல சூழல் காரணிகள் மாணவர்களின் கல்வியில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது இதற்கு அடிப்படையில் கோட்பாட்டுச் சட்டத்தை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

- இடைவிலகலுக்கான காரணம் என்ன?
- ஏன் ஏற்படுகின்றது?
- எவ்வாறு தீர்வு காணலாம் என்பவற்றை ஆய்வு செய்யவேண்டும்.

வாழ்க்கை சிறப்பாக சமுகத்தில் ஒரு பிள்ளையாக அமைய வேண்டுமாயின் கல்வியின் நோக்கம் குறித்தும் அதன் தேவை குறித்தும் சில பெற்றோர்கள் கவலைப்படுவதில்லை எனவேதான் இடைவிலகல் ஏற்படுகின்றன. கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். இக் கிராமத்தில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இங்குள்ள கல்வி நிலைக்கான பெறுபேறுகள் காணப்படுகின்றது.

**பெற்றோர் கல்வி குறைந்துவர்களாகக் காணப்படல்**

கல்வி குறைந்தவர்களாகக் காணப்படும் பெற்றோர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர், கூலித் தொழிலில் ஈடுபடுவோர் போன்றோர் தமது குழந்தைகளை உரிய காலத்தில் பாடசாலையில் சேர்க்காமல் வயது சென்று சேர்த்து பின்னர் இடை நடுவில் பாடசாலை செல்லாது விடுகின்றனர்.

**குழந்தை உடல், உள நோய்க்குட்பட்டிருத்தல்**

தாய் போஷாக்கின்மை காரணமாக பிறக்கும் குழந்தை அறிவு வளர்ச்சி குன்றிக் காணப்படல். வைத்திய பரிசோதனைக்குட்படாமலிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுச்சூழல் கற்றலுக்குரிய இடமாக இல்லாமை**

இங்கு மாணவர்கள் சுயமாக கற்பதற்கு வீட்டுச்சூழல் இல்லாமை, தொலைக்காட்சி பாவனை அதிகரிப்பு, கூட்டுக் குடும்ப வாழ்க்கை போன்றனவாகும். மதுபாவனையில் நாட்டம். குடும்ப வருமானம் குறைவடைதல். குடும்பத்தலைவனாகிய தந்தை அல்லது குடும்ப அங்கத்தவரின் தொழில் முறிவு, முதுமை, நோய் போன்றவற்றினால் குடும்ப வருமானம் குறைவடையும்போது தலைவரின் வருமானம் குறைவடையும்போது தலைவரின் வருமானத்தை நம்பி இருந்தோரில் தொழில் செய்ய ஆர்வம் இன்மை, இதனால் தனது கல்வியினை குடும்பத்திற்காக தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகுகின்றனர்.

**இளவயதுத் திருமணம்**

பெண்கள் கல்வியில் ஈடுபடல் திருமண வயதை பிற்படுத்தும் காரணியாகவும், திருமண வயதை பிற்படல் கர்ப்பம் தரிப்பதற்கான சந்தர்ப்பத்ததை குறைக்கும் என்று நினைப்பதும் சீதனப் பிரச்சினை என்பனவற்றாலும் சிலர் தம்மைத் தேடிவரும் வரன்களை தட்டிக்கழிக்கக்கூடாது என்பதாலும் இடைநடுவில் மாணவர்களை பாடசாலையை விட்டு விலக்குகின்றனர்.

**சமவயதுக்குழுக்கள்**

ஒரு மாணவன் தீய நடத்தைகளையுடைய சமவயதுக் குழுவினருடன் இணையும் போது ஏற்படும் தீய பழக்க வழக்கங்களால் களவு, பொய், சொத்துக்குச் சேதம் விளைவிக்கின்றமை போன்றவற்றினால் தாமகவே இடைவிலகுகின்றனர்.

**பெற்றோரின் அக்கறையின்மை**

பெற்றோர்கள் தாய்,தந்தை வெளிநாடு செல்வதால் பராமரிப்பு இன்றி கல்வி மீது பாதுகாவலர்கள் அக்கறையற்று காணப்படுகிறனர் பெற்றோர் தொழிலுக்காக அழைத்துச் செல்லுதல்.

**தொலைபேசி பாவனை**

இங்கு இதன் பாவனையின் மூலம் பல பெற்றோர்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டு வேறு திருமணம் முடிக்கின்றனர். அத்துடன் சமூகச் சீர்கேடுகளும் இடம் பெறுகின்றது. இதனால் மாணவர்கள் தொலைபேசி பாவனையில் அதிக நாட்டமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் இடையில் கல்வியில் இடைவிலகுகின்றனர்.

**பெற்றோர்கள் வெளிநாடு செல்லல்**

இங்கு 75% மான பெற்றோர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். இதனால் இவர்களின் பிள்ளைகள் பராமரிப்பு இன்றி பாடசாலைக்கு ஒழுங்காக வராமல் இடைவிலகுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்கூறப்பட்ட காரணிகள் மாணவர்களின் இடைவிலகலுக்கு சான்று கூறுகின்றது.

**இடைவிலகலைக் குறைப்பதற்கு பின்வரும் விடயங்களைச் செயற்படுத்த வேண்டும்.**

- பெற்றோருக்கான கல்வி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல்.
- விசேட வைத்திய முகாமின் ஊடாக சுகாதாரப் பழக்கவழங்களையும், நோய் தொடர்பான சிகிச்சைகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
- கட்டாயக் கல்வியின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் உணரச் செய்தல்.
- அரச, அரச சார்பற்ற சமூக நிறுவனங்கள் கல்வியின் மகத்துவத்தையும், கல்வி கற்பதால் பெறும் நன்மை பற்றிய கருத்தரங்குகள், உரையாடல்கள், தெருக்கூத்து, மூலம் பாடசாலைகள், ஆலயங்களில் அறிவுரைகள் வழங்குவதன் ஊடாக கட்டாயக் கல்வியின் மகத்துவத்தை உணரச்செய்தல்.
- பாடசாலை வரவுக்குழு, சிவில் பாதுகாப்புக்குழு சமூகத்தின் அனைத்து பிரஜைகளும் மாணவர்களின் கல்வியின்பால் விழிப்பாக இருத்தல்.
- வேலைக்கு அமர்த்தும் பெற்றோர்களுக்கும், மீன்பிடி, விவசாய தொழிலில் ஈடுபடுத்துவோருக்கும் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ஒழுங்கு படுத்தப்படாத சமவயதுக் குழுவினரின் நடத்தை கோலங்களை அவதானித்து அவர்களை நல்வழிப்படுத்துவதன் ஊடாகவும் இடைவிலகலை குறைக்கலாம்.

எனவே நவீனமான புதிய புதிய கல்விக்கொள்கையையும் கல்வி மறுசீரமைப்புக்களையும் மேற்கொண்ட போதிலும் இன்னும் எமது நாட்டில் பள்ளி செல்லும் மாணவர்களில் கணிசமான தொகையினர் பல்வேறு காரணங்களால் இடைவிலகிக் கொண்டுதான் இருக்கின்றனர். இது வேதனைக்குரிய ஒரு விடயமாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இடைவிலகலுக்கான பல காரணங்கள் கண்டறியப்பட்டாலும். இது தனியே மாணவரை மட்டும் மத்தியாக கொண்டவை அல்ல. பாடசாலைச் சூழல், பொருளாதாரம் கற்றலுக்கான வளம் போன்ற பலவற்றுடன் தொடர்புபட்டு அதன் வாயிலாக நிலைமையைக் கண்டறிந்து அதற்கான தீர்வைத் திட்டமிட்டு செயற்படுத்துவதன் மூலம் எதிர்கால கல்விச் சமூகத்தை உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

நன்றி

**திரு. வேலாயுதம் சுரேஸ்குமார் *(BA,B.ED)***
அதிபர்
**தி. மு. இலங்கைத்துறை அலைமகள்வித்தியாலயம்,**
**ஈச்சிலம்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய இயற்பாடல்

மாட்சியுடன் தான் விளங்கும் ஈச்சநகர் மீதிலுறை
செண்பக நாட்சி புகழ் பாடி நாமும்
ஆட்சி செய்து வாழ்வோமே
தன்னானே தனத்தனத் தன்னானே தனத்தனத் தன்னானே

பூநகரில் புகழ்படைக்கும்தானாத்தோறும் ஈஸ்வரரும்
ஆனநிலீ மலையிலுள்ள அம்மையாரும் கூடியே
ஆழும் எங்கள் தேசமே அருமையான நாடிதே
அழகு வழம் பெற்ற நாட்டை ஆடி நாமும் பேணுவோம்
தன்னானே தனத்தனத் தன்னானே தனத்தனத் தன்னானே

வெருகல் வேலன் என்று சொல்லி உருகும் எங்கள்
பக்தருக்கு அருள் தருவாய் ஐயனே
ஆறுமுகத்தையனே அருள் தருவாய் கந்தனே
தன்னானே தனத்தனத் தன்னானே தனத்தனத் தன்னானே

சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப் பெற்றதுடன்
மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்பைப் பெற்றதுடன்
நேர்த்திகள் பல வைத்து நிறைவு பல கண்ட தலம்
தன்னானே தனத்தனத் தன்னானே தனத்தனத் தன்னானே

இலங்கைத்துறை முகத்தினிலே குன்று தனில் குடி கொள்ளும்
கோணேசப் பெருமானுடன்
ஆற்றங்கரை மணலருகே அமர்ந்திருக்கும் கண்ணகியும்
அருள் புரியும் ஊரிதாம் அழகு வளம் பெற்றதுவாம்
தன்னானே தனத்தனத் தன்னானே தனத்தனத் தன்னானே

ஐந்து நிலம் சூழப் பெற்ற அருமையான பேரூரில்
இடர்கள் பல வந்து எம்மை ஆட்டி வைத்த போதினிலுமே
விறு கொண்ட தமிழர் நாங்கள்
ஓங்கிப்புகழ் பாடிடுவோம்
தன்னானே தனத்தனத் தன்னானே தனத்தனத் தன்னானே

**திரு. இ. பரமசிவலிங்கம்**
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
6ம் வட்டாரம், ஈச்சிலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர ஏழைகளா நாம்?

நீர் உயர்ந்து
நெல் உயர்ந்து
நெல்லுயர நெல்லை
பின்தொடர்ந்து
குடியுயராது கோனுயரும்
புதுமை தனைக் கண்டதுண்டா?

மாடி வீடு இல்லை
மலர்ச் சோலை அங்கு இல்லை
கட்டில் மெத்தையில்லை
கட்டுக்கட்டாய் காசு இல்லை

சராசரி ஒரு வீடு
சமையலுக்காய் மிஞ்சும்
கொஞசம் நெல்லு
தட்டாந்தரையில்
கண்மூடி துயிலும் வாழ்வு
சுமைதாங்கும் நண்பனாய்
சொந்தமாய் ஒரு வானொலி

உழவுக்கு
வந்தனை செய்யும் நாட்டில்
உழவனின் நிலை கண்டு
உதவுவோர் போதாது
உணவுக்குள் நவீனம்
ஔடதமாக
உணவுண்ட பரம்பரை
தவிர்க்க வொண்ணாமல்
நஞ்சுண்டு வாழ்கின்றறோம்

நஞ்சு மருந்தால்
நாளும் கவனித்தால் தான்
நல்ல அறுவடை இப்போது
முதலாளி மார்கள்
மிகவும் அவசியம் தான்

அழியாக தனமுதலால்
அமிழ்த்தாத வரை
பொதுவாக இவர்கள்
முதல் எனும் ஆழிக்குள்
ஆழ்த்திடச் செய்வது அடுக்குமா?
நியாயமா?

விதை முதல் மருந்தும்
வேண்டிய அனைத்தும்
மூடைக்குச் சாக்கும்
முதலாளியானவர்
முதலின்றித் தருவார்

நாம் பட்ட கடனை திரும்ப
தருவதெம் கடமை
சுதந்திர சந்தையில்
முழு விலை என்றாலும்
கடன்தந்த கடையில்
அரை விலை ஆகுமே
கடன் பொறிநிலைக்கு
அகப்பட்டுப் போனதால்
அரைவிலைதானே
எமக்கென்று முழு விலை.

முதல் எனும் ஆழிக்குள்
மூழ்காமல் இருக்கவே
முயல்கின்றோம்.

உலகே நீ உழுதுண்டு
வாழவேண்டாம்
உழுதுண்டு வாழ
வழியொன்று காட்டு

**ஆக்கம் :- சேதுராமன் கருணாநிதி**
**பிரதான வீதி,**
**பூமரத்தடிச்சேனை,**
**ஈச்சிலம்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேசமும் வெள்ளப் பாதிப்புகளும்

திருகோணமலை மாவட்டத்தின் எல்லையாய் ஆதி மனிதர்கள் வாழ்ந்த பெருமையை பறைசாற்றி நிற்கும் பகுதியாக காலம் என்கிற களமும் அதைப்பற்றிய கருத்தோட்டமும் தொன்று தொட்டு வளர்ந்த இடமாகவும், திருகோணமலை மாவட்டத்தின் தெற்குப்புற எல்லையில் ஏறத்தாழ 100.34 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் 10 கிராம உத்தியோகத்தர் பரிவுகளையும் 3770 குடும்பங்களையும், 13243 நபர்களையும் கொண்டு தெற்கும் மேற்கும் வெருகல் ஆற்றாலும் வடக்கே சேருநுவர பிரதேச மகிந்தபுர எல்லையையும், கிழக்கே வங்கக்கடலாலும் சூழப்பட்டு ஈச்சிலம்பற்று நகராக்க மையத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியாகும். இப்பிரதேசத்தை நோக்கிற்கு எடுத்துக் கொண்டதன் காரணம் இது ஒரு கலப்பற்ற தனித்தமிழர் என்று சொல்லக் கூடிய மக்கள் இனம் மட்டும் பூர்வீக காலம் தொட்டு இன்று வரை வாழ்ந்து வரும் பிரதேசமாகும்.

இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரமாக உயிரிலும் மேலாக விவசாயம், மீன்பிடி தொழில்களைச் செய்து வருகின்றனர். கிழக்கு, வடகிழக்கு பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பிக்கும் காலத்தே பெரும் போகப் பயிர்ச்செய்கையினை நெல்லோடு, பிற தானியப் பயிர்களையும் மழை நீரை மையமாக வைத்தே ஆரம்பிப்பதோடு அவ் இரத்த உழைப்பில் சந்தோஷம் கண்டு மகிழ்ந்து வாழ்ந்த போதிலும் அவற்றை எல்லாம் சீண்டிப்பார்க்க தவறவில்லை இயற்கை அன்னை. மாறாக இயற்கை இயற்கையாக இருக்க மனிதர்களின் செயற்பாடுகளினாலே வெள்ளம், வரட்சி, சுனாமி, சூறாவளி என்று இயற்கையின் சீற்றங்களும் இப்பூமியில் மனிதர்களையும், அவர்கள் வாழ்வாதாரத்தையும் சீர்குலைத்துக் கொண்டே வருகின்றன. அந்த வகையில் இப்பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் ஒரு அனர்த்தமாக வெள்ளத்தைக் குறிப்பிடலாம். பூநகர், பூமரத்தடிச்சேனை ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மேடாக இருப்பதனால் வெள்ளம் ஏற்படுவது குறைவாக இருக்கும். அதேவேளை ஏனைய 8 பிரிவுகளிலும் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

அன்றொருநாள் மன்னர் ஆட்சியின் கீழ் இலங்கை நிருவாகம் ஆழப்பட்டபோது மாமன்னன் பராக்கிரமபாகு கூறினான் வானத்தில் இருந்து வரும் ஒருதுளி நீர்கூட வீணாகக்கூடாது அந்நீரினை சேமிப்பதற்காக பராக்கிரமபாகு சமுத்திரத்தை தன் பெயரில் அமைத்தான். ஆனாலும் அடுத்து வந்த காலங்களில் பெய்துவரும் மழையினால் அப்பராக்கிரமபாகு சமுத்திரமே நிரம்பி பெருக்கெடுத்து ஓடுகின்ற மகாவலி கங்கையோடு கலந்து பொலநறுவை மற்றும் மன்னம்பிட்டி ஆகிய பிரதேசங்களின் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்புகளின் ஊடாகவும் அன்டைவெளி காடுகள் ஊடாகவும் வெள்ளம் பரவி பெருக்கெடுத்து மாவில் ஆற்றோடு சங்கமித்து சேருநுவர பக்கமாகவும், மறுபுறம் மகாவலி கிளையூடாக பரவி வந்து நாதன் ஓடையில் முறிவுபட்டு வெருகல் ஆற்றினூடாகவும் வந்து இரண்டு பிரிவுகளாக பிரிந்து கதிரவெளி பக்கமாக பரவி பனிச்சங்கேணி வாவியில் கலக்கின்றது. மீதி நீரானது வெருகல் கிராமத்தின் ஊடாக, ஏனைய கிராமங்களின் ஊடாகவும் மக்கள் குடியிருப்புகளை தாக்கி வெருகல் முகத்துவாரத்தில் உள்ள கங்கைத் துறைமுகத்துவாரத்தில் கலக்கின்றது மீதிநீர் இப்பிரதேசம் பள்ளநிலமாக காணப்படுவதனால் ஓடமுடியாமல் குடியிருப்புகள், தொழில்புரியும் இடங்கள் அன்டவெளிகளில் தேங்கி பல நாட்களாக நிற்கின்றது.

மக்கள் தேவை பல்கிப்பெருகி உள்ளதால் திருகோணமலையில் இருந்து இலங்கையின் தெற்கு திசை நோக்கி தினமும் பயணம் செய்யும் மக்கள் தொகை தற்காலங்களில் பல்கிபெருகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பயணத்தை பல நாட்களாக தடுத்து நிறுத்துகின்ற ஓர் செயற்பாட்டை எமது வெருகல் பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளம் நீண்டகாலமாக பறைசாற்றி வருகின்றது. வெருகல் கிராமத்தின் பிரதான வீதியின் இரண்டு இடங்களிலும் ஈச்சிலம்பற்று கிராமத்தின் பிரதான வீதியில் ஒரு இடத்திலும் கிட்டதட்ட 400 m தூரம் வீதியினை உடைத்து வெள்ளம் பாய்கின்றது. இதனால் மக்கள் பெரும் அவஸ்தைக்கு உள்ளாவதோடு இப்பிரதேசத்தின் மக்களது ஜீவனோபாயம் அழிக்கப்படுகின்றது. பிரதேசத்தின் எல்லைப்புறங்களிலும் ஏனைய பகுதிகளிலும் கூடுதலாக விவசாயம், கால்நடை வளர்ப்புகளிலும் ஈடுபடுகின்ற அதேவேளை கிட்டத்தட்ட 4000 ஏக்கர்கள் அளவிலான நெற்பயிர்கள், மேட்டு நில தானியங்கள் அழிவதோடு, கால் நடைகளை நடத்தி வருகின்ற அதே நேரம் கால் நடைகளை தக்க வைப்பதற்கு கூட இடம் இல்லாமல் பெரிதும் கஷ்ரப்படுவதோடு கால்நடைகள் அழியும் நிலையும் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

வெள்ளம் ஏற்படும் காலங்களில் பல நாட்களாக பிரதேசம் வெள்ளத்தால் மூழ்கி காணப்பட்டபோதும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு நலன்புரி நிலையங்களில் தங்க வைத்து உணவு, மருத்துவ உதவி செய்து பாதுகாப்புக் கொடுத்து பிரதேச செயலகத்தோடு முப்படையினர், பிரதேச சபை, நீர்ப்பாசனத்திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் போன்றனவும் தங்களது ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. மீட்புப் பணிகளிலும் மீட்கப்பட்டவர்களுக்கான உணவுகளை முகாம்களுக்கு கொண்டு செல்வதற்கு வோட் உதவிகளை முப்படையினரோடு சேர்ந்து மீனவர்களும் முழுப் பங்களிப்பைச் செய்து வருகின்றனர். முகாம்களாக இங்கு கூடுதலாக பாடசாலைகளே காணப்படுகின்றன. அண்மையில் 2014 மார்கழி மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் போது 523 குடும்பங்களைச் சேர்ந்த 1764 நபர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகளைச் சேகரிக்கும் இடமாகவும், தரவுகளைப் பெற்று ஒருங்கிணைந்து செயற்படும் மையக் காரியாலயமாகவும் பிரதேச செயலகம் செயற்படுவதோடு, செயலக உத்தியோகத்தர்களோடு பாதுகாப்புப் படையினரும் கடமை புரிவதற்காக இரவு பகலாக பணிக்கப்பட்டார்கள்.

இப்பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களில் முக்கியமானது நாதன் ஓடை ஆகும். இந்தியாவிலிருந்து வந்த நாதனும் அவன் தம்பியாலும் பயிர் செய்வதற்காக வெட்டப்பட்ட ஒரு சிறிய மடுவே காலப்போக்கில் வெள்ளம் ஓடி அரித்து அரித்து பெரிதாக நாதன் ஓடையாக விரிவுபட்டது. இவ் நாதன் ஓடையில் விழும் நீர் இலகுவாக இப்பிரதேசத்தை தாக்குவதற்கு ஏதுவாக அமைகிறது. இதை மண் அணையூடாக தடுத்து அணை கட்டிய போதும் எந்தவொரு பலனையும் கொடுக்காது மண் அணை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது யாவரும் அறிந்த விடயமே. இவ் நாதன் ஓடை நிலையான கட்டிட அமைப்பினூடாகக் கட்டப்படாமையே பிரதான குறைபாடாகும். அதேபோல் சட்டவிரோத மண் அகழ்வு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்கற்ற வீதிக் கட்டமைப்பு போன்றனவும் குறைபாடாக அமைகின்றன. இது தொடர்பாக பிரதேச மக்கள் பல தடவை ஆர்ப்பாட்டங்கள், மனுக்கொடுத்தல், ஊடகங்களுக்கு அறிவித்தல் போன்றவற்றினூடாகவும் விமர்சனங்களைச் செய்தும் வந்துள்ளனர்.

எனவே ஒவ்வொரு தடவையும் வெள்ளத்தின் போதும், அதன் பின்னும் செலவிடப்படும் பொருளாதாரம், மனித வளம் எந்தவொரு பலனையும் இப்பிரதேசத்திற்கு பலனாக அமையவில்லை. மாறாக வீண் விரயத்தையே பெற்றுக் கொடுத்தது. இவற்றுக்கெல்லாம் அன்றைய இன்றைய மனிதர்களது செயற்பாடுகளே காரணமாக அமைந்து விடுகிறது. இப்பிரதேசத்தின் கூடுதலான நிலப்பரப்பு பள்ள நிலமாகவே காணப்படுகின்றமையால் அவை முழுவதையும் மேடாக மூடி சீர் செய்வது என்பது நடைமுறைச் சாத்தியம் அற்ற விடயம். எனவே எதிர்காலச் சந்ததியினரின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைவதற்கு முக்கியமானதாக வெள்ளத்திற்காக பயன்படுத்தும் பணத்தைப் பயன்படுத்தி வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும் நாதன் ஓடையை நிரந்தரக் கட்டமைப்பினூடாக கட்டி அமைத்து தடுப்புச் செய்ய வேண்டும். அத்தோடு சட்ட விரோத மண் அகழ்வுகள் இடம்பெறுவதை தடுத்து நிறுத்துதல், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிக்கட்டமைப்பு, பாலங்கள் அமைப்பு, வடிகால்கள் அமைப்பினூடாக இப்பிரதேசத்தில் தொடர்ந்து ஏற்படும் வெள்ளப் பாதிப்பை குறைக்க முடியும் எனக் கூறிக் கொள்வதில் ஐயம் இல்லை.

**அ. அன்பன்**
பிரதேச செயலகம்,
வெருகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மண்

மரம் செடி கொடிகளும்
மண்ணினைத் தாலாட்டும்
வரம் பெற்ற மண்ணே எங்கள்
வெருகலம்பதி கொண்டமண்

கொண்டலும் வாடைக்காற்றும்
கூடி வந்து சேர
அண்டமெல்லாம் குளிர் கொண்ட
அழகு நிறை எனது மண்

மாவலியாள் மகிழ்தோடி
மாகடலில் சங்கமிக்கும்
வண்டல் மண் சுமந்த
வளமான எனது மண்

ஆவினங்கள் பாய்ந்தோடி
பால் சுரந்து பசி தீர்க்கும்
பஞ்சமிலாப் பூமியென்ற
பார் சுமக்கும் எனது தாய் மண்

மட்டுநகர் எல்லையிலே
மகிழ்ந்துறையும் முருகனிவன்
தொடர்ந்து வரும் மாந்தர்க்கு
துணை கொடுத்த எனது மண்

அழிவுகள் பல கண்டாலும்
அழிவுகாணா எனது மண்
இழி நிலைக்குப் போகாமல்
இசைபாடும் எனது மண்

நாட்டார் கலை உணர்வில்
நயமாக நாம் வாழ்ந்தோம் - எமை
வாட்டும் புது யுகத்தை
வர வேற்கா எனது மண்



செல்வன். சி. பிரசன்னன்
தரம் 11
தி/மூ/திருவள்ளுவர் வித்தியாலயம்
பூநகர், ஈச்சிலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கப்பாடல்
# அம்மா அம்மா அம்மா.....

ஆராரோ ஆரிவரோ (2)
ஆரிராரோ ரோரோ (2)



அம்மா அம்மா அம்மா
என் உலகமே அம்மா
அம்மா அம்மா
என் உலகமே அம்மா

என் உயிரக்குயிராய் உறைபவள் அம்மா
தன்னுயிரை தந்தே என்னுயிரை காப்பாய்
என் நெஞ்சமதில் கோயில் கொண்டு
என்னுடனே வாழ்வாய்
அம்மா அம்மா
என் உலகமே அம்மா
ஆராரோ ஆரிவரோ (2)

தோழுக்குள்ளே தொட்டில் கட்டி
தூங்க வைத்து இன்பங்கண்டாய்
தூங்கவைக்க பாட்டுச் சொல்லி - நம்
சந்ததியைக் கற்றுத் தந்தாய்
உலகத்து உறவுகள் எல்லாம் என்னை
வலம் வரும்படி ஆளாக்கினாய்
நன்றி சொல்லி பாடினாலும்
ஏழு ஜென்மத்திலும் எனை பெற்ற கடன் தீருமா
நான் பட்ட கடன் தீருமா
ஆராரோ ஆரிவரோ..

ஊனுறக்கம் இல்லாமலே
உருகிடும் மெழுகனாய்
என் விண்ணப்பங்கள் அத்தனையும்
தந்தையிடம் அன்பாய்ச் சொல்வாய்
என் உயிரினை கருவாய் தாங்கியே இந்த
உலகினில் மனிதனாய் ஆக்கினாய்
நன்றி சொல்லி பாடினாலும் ஏழு ஜென்மத்திலும்
எனை பெற்ற கடன் தீருமா
அம்மா அம்மா...
ஆராரோ ஆரிவரோ

பாடல் ஆக்கம்
திரு. சித்திரவேல் கணேசன்
மத்திய வீதி,
இலங்கைத்துறை முகத்துவாரம்,
ஈச்சலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள் விபரம் - 2016

| இல. | கிராம சேவகர் பிரிவு | கிராமம் | தொடர் இல. | வழிபாடிடம் அல்லது ஆலயத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | உப்பூரல் | உப்பூரல் | 1. | நாகம்மாள் கோயில் |
| | | | 2. | பிள்ளையார் கோயில் |
| | | சீனன்வெளி | 3. | பெரியசுவாமி கோயில் |
| 2 | இலங்கைத் துறைமுகத்துவாரம் | இலங்கைத் துறை முகத்துவாரம் | 4. | கண்ணகையம்மன் கோயில் |
| | | | 5. | காத்தவராஜ சுமாமி |
| | | | 6. | முத்துமாரியம்மன் ஆலயம் |
| | | | 7. | செட்டிவிநாயகர் ஆலயம் |
| | | | 8. | ஆதிபைரவர் ஆலயம் |
| | | | 9. | ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் |
| | | புன்னையடி | 10. | ஸ்ரீ லம்போதரர் ஆலயம் |
| 3 | வெருகல் முகத்துவாரம் | கல்லடி | 11. | ஸ்ரீ மலைநீலியம்மன் ஆலயம் |
| | | | 12. | ஸ்ரீ நாகம்மாள் ஆலயம் |
| | | வெருகல் முகத்துவாரம் | 13. | பிள்ளையார் ஆலயம் |
| | | | 14. | பெரியசுவாமி ஆலயம் |
| | | சூரநகர் | 15. | மாரியம்மன் ஆலயம் |
| 4 | ஆனைத்தீவு | வாழைத்தோட்டம் | 16. | ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயம் |
| | | | 17. | நரசிம்ம பைரவர் ஆலயம் |
| | | முத்துச்சேனை | 18. | பிள்ளையார் ஆலயம் |
| | | | 19. | ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் |
| | | | 20. | ஸ்ரீ கட்டம்மன் ஆலயம் |
| 5 | வெருகல் | சேனையூர் | 21. | வீரபத்திரர் ஆலயம் |
| | | | 22. | பிள்ளையார் ஆலயம் |
| | | வெருகல் | 23. | ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி |
| | | மாவடிச்சேனை | 24. | பிள்ளையார் கோயில் |
| | | வட்டவான் | 25. | ஸ்ரீதான்தோன்றிஸ்வரர் முருகன் கோயில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கிராம சேவகர் பிரிவு | கிராமம் | தொடர் இல. | வழிபாடடம் அல்லது ஆலயத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| 6 | பூமரத்தடிச்சேனை | பூமரத்தடிச்சேனை | 26. | பிள்ளையார் ஆலயம் |
| | | | 27. | ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் |
| 7 | பூநகர் | பூநகர் | 28. | ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| | | | 29. | வீரியர் கணபதி ஆலயம் |
| | | பூநகர் கிழக்கு | 30. | தான்தோன்றீஸ்வரர் ஆலயம் |
| 8 | ஈச்சிலம்பற்று | ஈச்சிலம்பற்று | 31. | ஸ்ரீ சண்பகநாச்சியம்மன் ஆலயம் |
| | | சின்னக்குளம் | 32. | பைரவர் ஆலயம் |
| | | உடப்புக்கேணி | 33. | பிள்ளையார் ஆலயம் |
| | | | 34. | கறுபன்துறை பிள்ளையார் ஆலயம் |
| 9 | கறுக்காமுனை | விநாயகபுரம் | 35. | ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் |
| | | | 36. | ஆலயடிப்பிள்ளையார் ஆலயம் |
| | | | 37. | சிவசக்தி ஆலயம் |
| | | கறுக்காமுனை | 38. | பிள்ளையார் ஆலயம் |
| | | மாதவிபுரம் | 39. | ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் |
| | | | 40. | ஆலயடிப்பிள்ளையார் ஆலயம் |
| 10 | இலங்கைத்துறை | இலங்கைத்துறை | 41. | ஸ்ரீ செண்பகநாச்சியம்மன் ஆலயம் |
| | | | 42. | பத்தினியம்மன் ஆலயம் |
| | | | 43. | பிள்ளையார் ஆலயம் |

**தகவல் :- இந்து கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வெருகல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகல் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட பிரதேச மட்ட கலை இலக்கிய விழா - 2016

### போட்டி முடிவுகள்

| தொடர் இல. | பிரிவு | போட்டி வகை | வெற்றியாளர் பெயர் | முகவரி | நிலை |
|---|---|---|---|---|---|
| 01. | பால் | கவிதை பாடல் | கோ. ஆர்த்திகா | தான்தோன்றீஸ்வரர் வித். வட்டவான் | 1 |
| | | | மோ. வெனிஸ்ரா | தான்தோன்றீஸ்வரர் வித். வட்டவான் | 2 |
| | | | வ. பிரவீனா | சிவானந்தா வித். ஈச்சிலம்பற்று | 3 |
| 02. | பால் | கையெழுத்து | கி. எக்சிபா | வாழைத்தோட்டம் அ.த.க.வித். | 1 |
| | | | அ. பிவீனா | சிவானந்தா வித். ஈச்சிலம்பற்று | 2 |
| | | | சு. ஜெம்சி | தான்தோன்றீஸ்வரர் வித். வட்டவான் | 3 |
| 03. | கனிஸ்ட | கவிதை எழுதுதல் | க. ஸ்ரோமி | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 1 |
| | | | வா. அனுஜன் | அ.த.க. வித். மாவடிச்சேனை | 2 |
| | | | த. நிஜாழினி | அ.த.க. வித். மாவடிச்சேனை | 3 |
| 04. | கனிஸ்ட | கவிதை பாடல் | பா. அனுசா | அ.த.க. வித். மாவடிச்சேனை | 1 |
| | | | யோ. டினோசன் | அ.த.க. வித். மாவடிச்சேனை | 2 |
| | | | ந. ஜனுயாழினி | அ.த.க. வித். மாவடிச்சேனை | 3 |
| 05. | கனிஸ்ட | கட்டுரை | கெ. சதுர்சா | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 1 |
| | | | சோ. ஜதுர்ஷியா | அ.த.க. வித். மாவடிச்சேனை | 2 |
| 06. | கனிஸ்ட | கட்டுரை | நா. டிலைக்கா | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொடர் இல. | பிரிவு | போட்டி வகை | வெற்றியாளர் பெயர் | முகவரி | நிலை |
|---|---|---|---|---|---|
| . | | | இ. சுதர்சினி<br>ம. வரதாகினி | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம்<br>இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 2<br>3 |
| 07. | சிரேஸ்ட | நாகட பிரதி எழுதுதல் | இ. டிரோன்<br>கு. ஜர்சினி<br>ச. அருளினி | அ.த.க. வித். மாவடிச்சேனை<br>அ.த.க. வித். மாவடிச்சேனை<br>அ.த.க. வித். மாவடிச்சேனை | 1<br>2<br>3 |
| 08. | சிரேஸ்ட | சிறுவர் கதை | த. கீர்த்தனா | அ.த.க. வித். மாவடிச்சேனை | 1 |
| 09. | சிரேஸ்ட | சிறுவர் கதை | வ. டிலக்ஷயினி | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 1 |
| 10. | திறந்த | பாடலாக்கம் | சி. கணேசன்<br>து. விக்னேஸ்வரன்<br>மு. கிருஸ்ணமூர்த்தி | பிரதி அதிபர் - இ.து.மு இந்து கல்லூரி<br>ஆசிரியர் - இலங்கை துறை அ.த.க.பா.<br>கறுக்காமுனை அ.த.க. பாடசாலை | 1<br>2<br>3 |
| 11. | திறந்த | நாட்டார் கலை கற்றல் | ப. மதிபாலசிங்கம் | அதிபர் - திருவள்ளுவர் வித். பூநகர் | 1 |
| | | **மாவட்ட மட்ட கலை இலக்கிய விழா முடிவுகள்** | | | |
| 01. | சிரேஸ்ட | நாடகப் பிரதி எழுதுதல் | இ. டிரோன் | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 3 |
| 02. | கனிஸ்ட | கவிதை எழுதுதல் | க. ஸ்ரோமி | இந்துக்கல்லூரி இ.துறை முகத்துவாரம் | 1 |
| 03. | திறந்த | நாட்டார் கலை கற்றல் | ப. மதிபாலசிங்கம் | அதிபர் - திருவள்ளுவர் வித். பூநகர் | 1 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

வெருகலசம் எனும் இந்நூலை உருவாக்க கரம் கோர்த்து பலம் சேர்த்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள்.

வெருகலசம் வெளியீட்டு குழுவினர்
பிரதேச செயலகம்
வெருகல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றிகள்

வெருகலசம் எனும் மலர் மலர்ந்து மணம் வீச சகல வழிகளிலும் ஒத்துழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்

(பிரதேச செயலாளரும், பிரதேச கலாசார அதிகார சபையின் தலைவரும்)
பிரதேச கலாசார அதிகார சபையினர்
பிரதேச செயலகம்,
வெருகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Evergreen Printers Batticaloa. 065 2222607